Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU






முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஆனி 31 ஞாயிற்றுக்கிழமை (15.07.2012) | பக்கங்கள் 20 | ஓசை – 288



இந்தியத் தலையீடு... (04)

தமிழ் முன்னிலை பெறுமா (11)



அதுக்கும் பயன்படுத்தலாம் (12)



விலை வீழ்ச்சி (13)



காதல் திருமணம் தடை (17)

# ஆளும் கட்சியுடன் கைகோர்த்து களமிறங்குகிறது முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின்பேரில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்துடன் சேர்ந்து போட்டியிடுவதென நேற்று முன் தினம் இடம்பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நீண்ட நேரமாக இடம்பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்தத் தீர்மானத்தை முன்வைத்தார்.

அத்தோடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற சந்திப்புப் பற்றியும் அரசுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்த இணக்கம் பற்றியும் உயர்மட்ட குழுவுக்கு விளங்கப்படுத்தினார். இதனை ஏற்றுக் கொண்ட உயர்மட்டக் குழு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசாங்கத்துடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவதென ஏகமனதாக தீர்மானம் எடுத்தது.

இத்தீர்மானத்துக்கு இணங்க அம்பாறை மாவட்டத்தில் 6 வேட்பாளர்களையும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 வேட்பாளர்களையும், திருகோணமலை மாவட்டத்தில் 3 வேட்பாளர்களையும் முஸ்லிம் காங்கிரஸ் நிறுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் மீதான தடையை நீடித்தது இந்திய அரசு

குடிமக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை இந்திய அரசு மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்திய சட்ட விரோதச் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் இத்தடை நீடிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என கருத்திற் கொண்டு அதனை தடை செய்துள்ளதாக இந்திய

(19) ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போதல் விவகாரம்; ஐ.நா.வின் கவனம் திரும்புகிறது

(ஜெனிவா)

இலங்கையில் யுத்த காலத்திலும் அதற்கு பிற்பட்ட காலத்திலும் காணாமற் போனவர்கள் தொடர்பான விவகாரங்கள் குறித்து ஐ.நா. சபை தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது.

இலங்கை உட்பட ஏனைய 33 உறுப்பு நாடுகளிலும் இவ்வாறான காணாமற் போன சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாக ஐ.நா.வுக்கு அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதன் அடிப்படையிலேயே ஐ.நா. தனது கவனத்தை இவ்விடயங்களின் மீது செலுத்தியுள்ளது.

ஜெனிவாவில் நடந்த ஐக்கிய நாடுகள் சபையின் 97 ஆவது கூட்டத்தொடரில் இவ்விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இலங்கையில் காணாமற்போனோர் தொடர்பில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## யுத்தத்துக்குப் பிந்திய அபிவிருத்தி சர்வதேச ஆய்வு மாநாடு யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)


போருக்குப் பின்னரான அபிவிருத்தி என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு எதிர்வரும் 20,21 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ள பிரதம விருந்தினர் மற்றும் அதிதிப் பேச்சாளர் பலர் கலந்துகொண்டு போருக்குப் பின்னரான அபிவிருத்தியில் வட பகுதியின் தற்போதைய நிலையினை ஆய்வறிக்கையாக வெளியீடு செய்வதுடன் அதனை ஆவணப்படுத்தவுள்ளனர்.

இந்த மாநாட்டுக்குப் பிரதம விருந்தினராக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவும், அதிதிப் பேச்சாளராக களனிப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சரத் அமுனுகமவும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## போதனா வைத்தியசாலையில் அபிவிருத்திக் குழு அங்குரார்ப்பணம்



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் சுகாதார அமைச்சினால் சிபார்சு செய்யப்பட்ட 16 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கான உறுப்பினர்

(19) ஆம் பக்கம் பார்க்க

# பண்ணாகம் பிரதான வீதியை புனரமைத்து உதவுங்கள்

### சந்திரகுமார் எம்.பி.யிடம் கூட்டமைப்பு பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி. மேற்கு பிரதேச சபைக்கு சொந்தமான பண்ணாகம் பிரதான வீதியினை புனரமைத்துத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமாரிடம் வலி. மேற்கு பிரதேச சபையின் த.தே.கூட்டமைப்பின் உறுப்பினர் கனகராசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வாரம் குறித்த கிராமத்திற்கு விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரிடம் மேற்படி வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

நீண்ட காலமாக பண்ணாகம் பிரதான வீதி புனரமைக்கப்படாது மக்களின் போக்குவரத்திற்கு பெரும் இடையூறு ஏற்படுத்தி வந்த நிலையில் அதனை நிவர்த்தி செய்து மக்களின் இலகு போக்குவரத்திற்கு வழி சமைக்க வேண்டும் என்ற வகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரிடம் இவ் வேண்டுகோளை விடுப்பதாகவும் தெரிவித்த அவர்,

அரசியலுக்கு அப்பால் மக்களின் தேவைகளை நிறைவு செய்து அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு இருப்பதனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் தனக்கும் இருக்கின்ற தனிப்பட்ட உறவினைப் பயன்படுத்தி

(19) ஆம் பக்கம் பார்க்க

## குற்றச்செயல்கள் யாழ். நகரில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதிகளிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் அண்மைக்காலமாக குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதாகவும் மேற்படி குற்றவாளிகளுக்கு எதிராக தாம் நீதிமன்றத்தில் வழக்குகள் பதிவு செய்துள்ளதாகவும் யாழ். பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்த வாரம் மட்டும் யாழ். பொலிஸ் பிரிவுகளிலிருந்து பல்வேறு வகையான சுமார் 28 வழக்குகள் நீதிமன்றத்தில் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக யாழ். பிரதிப

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசுக்கு எதிர்ாக ஆர்ப்பாட்டம் எதிர்க் கட்சிகளுக்கு ஐ.தே.க. அழைப்பு

(கொழும்பு)

நாளுக்கு நாள் மக்கள் மீது சுமத்தப்படும் சுமைகள் மற்றும் குற்றச்செயல்களின் அதிகரிப்பு, அரசாங்கத்தின் அடக்கு முறை என்பவற்றை எதிர்த்து நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு ஐ.தே.கட்சி தலைமையிலான பொது எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கம்பஹா நகரில் நடைபெறவுள்ளதாக அக் கட்சி எம்.பி. ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

இப்போராட்டத்தில் ஜே.வி.பி, சரத் பொன்சேகாவின் ஜனநாயக தேசிய முன்னணி உட்பட அனைத்துக் கட்சிகளும் கலந்து கொள்ள வேண்டுமென்று பகிரங்க அழைப்பு விடுத்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அங்கு உரையாற்றும் போதே ஜோசப் மைக்கல் பெரேரா எம்.பி.

(19) ஆம் பக்கம் பார்க்க

## இரு பாடசாலைகளில் கட்டடங்கள் திறப்பு இன்று



(யாழ்ப்பாணம்)

இசுறு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மற்றும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் புதிய கட்டடங்கள் கல்வி அமைச்சரினால் இன்று திறந்து வைக்கப்படவுள்ளன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் அமைக்கப்பட்ட இரண்டு வகுப்பறைக் கட்டடங்களும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் அமைக்கப்பட்ட ஒரு

(19) ஆம் பக்கம் பார்க்க

# வாழ்வாதாரத்தை உயர்த்தி கல்வியை மேம்படுத்த வேண்டும்



(யாழ்ப்பாணம்)

கிடைக்கப்பெறும் உதவிகள் மூலம் எமது வாழ்வாதாரத்திற்கான தொழில் தேவைகளுக்கு பயன்படுத்துவதுடன் அதனூடாக பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டிற்கும் அவற்றினை பயன்படுத்த வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) கேட்டுக் கொண்டார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற துவிச்சக்கரவண்டி வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது வடபகுதி முப்பது வருடகாலமாக நடைபெற்ற யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டு தற்போது மீள் கட்டுமாணம் நடைபெற்று வருகின்றது. இப்பிரதேசத்தில் உள்ள மக்களின் பொருளாதார நிலைமை பாதிக்கப்பட்ட நிலையில் இலங்கை அரசும் மற்றும் பல சர்வதேச நாடுகளினதும் உதவியுடனும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. பயனாளிகளுக்கு வழங்கப்படுபவற்றினூடாக அவற்றினைப் பயன்படுத்தி அவர்கள் உச்சக் கட்டப்பயனை அடைய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இவ்வைபவத்தில், இந்திய தூதரக பிரதிநிதி அரிநாராயணன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஜெயசீலன், சமூக சேவை உத்தியோகத்தர் தி. கணேஸ்ராஜ், வல்வெட்டித்துறை நகரசபை எதிர்கட்சித் தலைவர் தெய்வேந்திரம், முன்னாள் ஹாட்லிக் கல்லூரி அதிபர் சிறீபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

35 கிராம சேவையாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 90 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கார்மேல் அன்னைக்கு நாளை திருநாள்

(குருநகர்)

குருநகர் தூய கார்மேல் (உத்தரிய) அன்னை ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி நாளை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று மாலை 5.00 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும் நற்கருணை விழாவில் நற்கருணைப் பவனியும், ஆசீரும் வழங்கப்படும். நாளை மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் அன்னையின் திருச்சொரூப தேர்ப்பவனி ஆரம்பமாகும். இரவு 7.00 மணிக்கு ஆலயத்தை வந்தடையும் அன்னையின் சொரூப ஆசீர் வழங்கலுடன் திருநாள் நிறைவடையும்.

(68)


## சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

கொடிகாமம் மிருசுவில் ஏ-9 பாதையில் இருந்து 300 யார் ஒழுங்கையில் 75 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகொள்ள- 0772474740

(R/146)


# பஸ் கம்பனிகள் இணையத்தின் 32 ஆம் ஆண்டு விழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தின் 32 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், இணையத்தலைவரின் 10 ஆம் ஆண்டு சேவை நலன் பாராட்டு நிகழ்வும் இன்று பி.ப. 2.00 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரத்நாயக்க ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.


## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

1 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY



பெயர் : பகீரதன் டிக்கா

முகவரி : செட்டிபுலம், வேலணை



## 32 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் சேவை நலன் பாராட்டு நிகழ்வும்

யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தின் 32 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் தலைவரின் 10ஆம் ஆண்டு சேவை நலன் பாராட்டு நிகழ்வும் இன்று 15.07.2012 பிற்பகல் 2.00 மணிக்கு

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

இடம்பெறும்

சகல சிற்றூர்தி, பேருந்து உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்கள், பணியாளர்கள், தங்கள் உறவுகளுடன் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி

யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம்

(R/084)



## 10 ஆண்டு சேவையினை பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவர்

திரு.பொன்னுத்துரை கெங்காதரன் அவர்கள்


இன்று 15.07.2012 இல் தனது 10 ஆண்டு சேவையினில் பாராட்டு நிகழ்வு காண்கின்றார். அவரை மேலும் பல சிறப்புகளுடனும், நலத்துடனும் வாழ வாழ்த்துவதோடு அவரின் பணி மேலும் தொடர உளமார வாழ்த்துகிறோம்.



தனியார் சிற்றூர்தி சேவை சங்கம், புங்குடுதீவு.

(R/149)

# தீவக வலயப் பாடசாலைகளுக்கு சங்கீத பாட ஆசிரியர்கள் நியமனம்




(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்திற்கான சங்கீத ஆசிரிய நியமனங்களை வடமாகாணத்திற்கு மாற்றுவதற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அமைசசர் அவர்களின் அலுவலகத்திற்கு மேற்படி ஆசிரியர்கள் நேற்றுமுன்தினம் வருகை தந்திருந்த போது அவர்களது நிலைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதன் பிரகாரம் அமைச்சர் அவர்கள் இந் நடவக்கையினை மேற்கொண்டார்.

யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் சங்கீத பாடத் தில் கற்கை நெறியினை பூர்த்தி செய்து பட்டம் பெற்றுக் கொண்ட ஆசிரியர்களில் 10 பேருக்கு கிழக்கு மாகாணத்தில் நியமனங்கள் வழங்கப்பட்டதை அடுத்து அவர்கள் தமது நியமனங்களை வடமாகாணத் திற்கு மாற்றித் தருமாறு அண்மையில் கொழும்பில் அமைச்சர் அவர்களைச் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைய அவர்களது கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் அவர்கள், அவர்களுக்கான நியமனங்களை தீவக வலயப் பாடசாலைகளில் வழங்குவதற்கு துறை சார்ந்தோர் ஊடாக நடவடிக்கையினை மேற்கொண்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் சிறந்த எதிர்கால கல்விச் சந்ததியை வளர்த்தெடுக்கின்ற பொறுப்பை உணர்ந்து சேவையாற்றும் அதேவேளை சந்தர்ப்பங்களை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இதன்போது வடமாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, மாகாணக் கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் இரா.செல்வவடிவேல் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# பார்வையாளர்கள் மீது பாய்ந்துவிழும் பாதுகாவலர்கள்

(குருநகர்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் பாதுகாப்புத் தேவைகளுக்காகக் குவிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு ஊழியர்கள் நோயாளர்கள் மற்றும் வைத்திய பரிசோதனைக்குச் செல்வோர், பார்வையாளர்கள் போன்ற பொது மக்கள் மீது மரியாதை செலுத்தாமல் பாய்ந்து வீழ்வதாகப் புகார் செய்யப்படுகிறது.

வைத்திய பரிசோதனைப் பிரிவினூடாக வெளிநோயாளர் பிரிவுக்குப்போகும் பாதை மற்றும் உணவு விடுதிக்குப் போகும் வாசல் பிரதான வீதியூடாக வெளிநோயாளர் பிரிவுக்குள் நுழையும் பிரதான வாசல் போன்றவைகளில் கடமையில் இருக்கும் பாதுகாப்பு ஊழியர்களே இவ்விதம் செயற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஊழியர்களின் பார்வையில் நோயாளர் மற்றும் பொதுமக்கள் முடிச்சு மாறிகளாகவோ திருடர்களாகவோ தென படுகிறார்களா? இளம் பெண்களென்றால் உருகிப்போய் விடுகிறார்களென்றும் அந்தப் புகாரில் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (68)

# சிறந்த ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஒக்ரோபர் 5ஆம் திகதி நடக்கவிருக்கும், சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கல்வி வலயங்கள் தோறும் சிறப்பான அதிபர், ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்படும் அதிபர், ஆசிரியர்கள் சர்வதேச ஆசிரியர் தினத்தில், ஜனாதிபதியால் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஒவ்வொரு வலயத்திலிருந்தும் விசேட தகைமையுடைய அதிபர்கள் இருவரும், விசேட தகைமையுடைய ஆசிரியர்கள் மூவரும் தெரிவு செய்யப்படவுள்ளனர். (06)

# மாலைநேர பாண் வியாபாரத்தை நிறுத்திய வரணி வர்த்தகர்கள்

(வரணி)

வரணிப் பிரதேச வெதுப்பக உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வந்த வர்த்தகர்கள் தற்போது காலை நேரத்தில் மட்டும் இவற்றை விற்பனை செய்து வருகின்றனர். இப் பகுதியில் மாலை நேரத்தில் வெதுப்பக உற்பத்திப் பொருட்களை தினமும் வீதி வீதியாக வாகனத்தில் ஒரு வித இசையுடன் விற்பனை செய்து வருகின்றனர். இதனால் தாங்கள் மாலைநேர பாண், பணிஸ் போன்ற வெதுப்பக உற்பத்தி பொருட்கள் விற்பனையை நிறுத்தியுள்ளதாக அப்பிரதேச வர்த்தகர்கள் கருத்து தெரிவிததனர். (150)

# எடுக்கத் தடை

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தினுள் அடியார்கள் எவரும் எவ் வகையிலும் படப்பிடிப்புகளை மேற்கொள்ளக் கூடாதென ஆலய நிர்வாக சபையினரால் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (158)

# வலி.தென்மேற்கு பிரதேச சபை தனியார் காணியில் அடாவடி

(யாழ்ப்பாணம்)

காக்கை தீவில் மீன் சந்தைக்கு முன்பாகவுள்ள காணி ஒன்றினை வலி.தென் மேற்கு பிரதேச சபையினர் ஆக்கிரமித்து சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்றினை நடத்தி வருகின்றனர்.

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி பங்கு மக்களுக்கு சொந்தமான இக்காணியில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு மேற்படி சபையினால் கேள்வி கோரப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இராணுவ முகாம் அமைந்திருந்த இப்பகுதியில் முகாம் இராணுவத்தின்ருடன் தொடர்பு கொண்டு இக் காணியை இராணுவத்தினரிடமிருந்து மீளக் பெற்றுக் கொண்ட அடைக்கலநாயகி பங்கு மக்களும் பங்குச் சபையும் தமது காணிகளில் அமைக்கப்பட்டுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை அகறறி காணியை கையளிக்கு மாறு கோரியும் இன்று வரை பிரதேச சபை காணியை கையளிக்காமையால் அவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை பங்கு மக்களும், பங்கு சபையும் இக் காணியில் வர்த்தக நிலையம் அமைக்கத்தீர்மானித்திருப்பதால் இக்காணியை உடனடியாக விடுவித்துத் தருமாறு பிரதேச சபையினரிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இருட்டில் வாழும் முள்ளாவெளி மக்கள்

(வரணி)

வரணி வடக்கு தெங்குபனம் பொருள் கூட்டுறவுச்சங்கம் சைவப் பிரகாச வித்தியாலயம் அமைந்துள்ள வீதியுடன் முடிவடையும் முள்ளாவெளிக் கிராமத்திற்கு மின் இணைப்பு இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் அப்பகுதியில் வாழும் குடும்பங்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன.

அக்குடும்பங்கள் தற்போதும் குப்பி விளக்கையே பாவித்து வருகின்றனர். சில குடும்பங்களிடம் மின் உபகரணங்கள் இருந்தும் அவற்றை பாவிக்க முடியாது இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. உரியவர்கள் பார்வை நமது பக்க திரும்ப வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர். (150)

# மரக்கடத்தல் தொடர்பாக மூன்று வழக்குகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

வவுனியா கிளிநொச்சி பொலிஸ்பிரிவில் கடந்த வாரத்தில் காட்டு மரங்களை சட்ட விரோதமாக கடத்தியமை தொடர்பாக மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

வவுனியாக் காட்டுப்பகுதியிலும் செட்டிக்குளம் காட்டுப் பகுதியிலும் கிளிநொச்சி முழங்காவில் காட்டுப் பகுதியிலும் நடைபெற்ற இக் கள்ளமரக் கடத்தல் சம்பந்தமாக மூன்று சந்தேகநபர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும் அவ் குறிப்பிட்டார்.

இதில் வவுனியாப் பகுதியில் நடைபெற்ற சம்பவத்தில் மரக்குற்றிகளை ஏற்றப் பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் உழவு இயந்திரமொன்றையும் வவுனியா பொலிஸார் மீட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

# ஒன்றரைக் கிலோ கஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் வவுனியா பொலிஸாரினால் ஒன்றரைக் கிலோ கஞ்சா மீட்கப்பட்டிருப்பதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட யாழ்.பிரதிப்பொலிஸ் மா அதிபர் எரிக். பெரேரா இந்த தகவலைத் தெரிவித்தார்.

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற இந்த பொலிஸ் நடவடிக்கையின் போது ஒன்றரைக் கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் இந்தச் சம்பவம் குறித்து வவுனியாவில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது வவுனியா நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்ய வவுனியா பொலிஸார் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா)

# சுண்டுக்குழி வீதிகளை அசிங்கமாக்கும் விசமிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுண்டுக்குழி பகுதியில் அமைந்துள்ள விதானை வீதி மற்றும் ஈச்சமோட்டை வீதிகளில் இரவு நேரங்களில் மிருக கழிவுகளையும், வீட்டுக்கழிவுப் பொருட்களினையும், மிகுதி சாப்படுகளுடன் கூடிய லஞ்ச் சீட்டுகளையும் தெருக்களில் உரப்பைகளில் இட்டு வீசி விட்டு செல்கின்ற விசமத்தனமான செயல்கள் தினமும் இடம் பெற்றுவருகின்றது.

இக் கிராமத்தில் பல ஆலயங்களும், பாடசாலைகளும் அமைந்திருப்பதால் இவ் வீதிகளில் போக்குவரத்துக்கள் அதிகளவில் காணப்படுவது வழமை. இதனால் இவ் வீதியில் செல்வோர் மிகவும் அசௌகரியங்களுக்கு உள்ளாகும் தன்மை காணப்படுகின்றது.

இவற்றை தினமும் நலன் விரும்பிகள் அப்புறப்படுத்தி வருவதையும் காணமுடிகிறது. சில வேளைகளில் அப்புறப்படுத்தாமல் அசிங்கம் தருவதாகவும் காணப்படுகின்றது.

இவ் விடயம் தொடர்பாக எமது நிருபர் காலை வேளையில் சென்று அவதானித்த பொழுது அதிகாலை வேளைகளிலே இத்தகைய செயல்கள் நடைபெறுவதாகவும் மோட்டார் சைக்கிளில் நவநாகரிக உடையில் வருபவர்களே காலை 4.00 மணியளவில் இச் செயல்களை செய்வதினை தாம் நேரில் அவதானித்ததாகவும் இப் பாதையில் நடைப்பயிற்சியினை மேற்கொள்ளும் நபர்கள் தெரிவித்தனர்.

யாழ்.மாநகரசபை பகுதிகளிலே முன்னோடியாக இப் பகுதி வீதிகள் திருத்தப்பட்டு அழகாக காட்சி தரும் இந் நேரத்தில் இத்தகைய செயல்கள் தமக்கு வேதனையினை தருவதாக தெரிவித்த இவ் ஊர்மக்கள் அதிகாலை வேளையில் நடைபெறும் இச் செயல்களினை தம்மால் தடுக்க முடியாது உள்ளதாகவும் தெரிவித்த இவ் ஊர் பெரியவர் “விஷமிகளால் பார்த்து திருந்தாவிட்டால் விஷமத்தனத்தை ஒழிக்க முடியாது” என மன வேதனையுடன் கூறியதுடன் யாழ். மாநகர சபையில் யாழ்ப்பாணத்தை அழகுபடுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்தார். (42)

முதலில் வேலைக்காரனாயிருக்கக் கற்றுக் கொண்டால், எஜமானாகும் தகுதி பின்னர் தானாகவே வரும். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, தொலைநகல் : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## தொடரும் வரலாற்றுத் தவறு!

கடைசியில் ஒருவாறாக, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்களை உணர்ச்சிவசப்படுத்துவதற்கான கோஷம் வெளிவந்துவிட்டது. கிழக்கு மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து, வழக்கம் போல அவர்களை வெல்ல வைத்தால் இம்முறை வடக்கு கிழக்கை இணைப்பைச் சாத்தியமாக்க வாய்ப்பு வரப்போகிறது.

இந்தத் தேர்தலுக்கான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்குறுதி அதுதான்! வழக்கம் போல இலங்கை அரசாங்கத்திடம் பேசி இவர்களால் எதையும் எடுக்க முடியப் போவதில்லை. சர்வதேசத்தின் ஏதோ ஒரு நாடோ அல்லது நாடுகளோ வந்து இணைப்பைச் செய்துதரும் என்பதே இவர்கள் மக்களுக்குக் கொடுக்கும் நம்பிக்கை. ஒருவேளை வென்றாலும், அடுத்த தேர்தல் வரைக்கும் இதைச் சொல்லிச் சொல்லியே காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கலாம்.

இலங்கை அரசாங்கத்திடமிருந்து தமிழ் மக்களுக்காக எந்த நல்லதையும் பெறுவதல்ல இவர்களது நோக்கம். மாறாக, அரசை எதிரியாகவே வைத்திருந்து, தமிழ் மக்களுக்கு ஆவேசமூட்டி வாக்குகளைக் கறந்து கொள்வதே இவர்களது தொடர் திட்டம்.

இந்தத் 'தோள்தட்டல்'களால் இவர்கள் தமிழ் மக்களுக்குப் பெற்றுத்தர விழைவது வெற்று ஆவேசங்களையும் சிதைவுகளையும் மட்டும்தான். மேலும் மேலும் பகையைச் சித்திரித்துக் கொண்டிருப்பதாலும் வீரவசனங்களாலும்தான் தமிழ் மக்கள் விரும்புவதைப் பெற்றுவிட முடியும் என்று இன்னமும் இவர்கள் கூறிக்கொண்டிருப்பது பெருத்த ஏமாற்றல்லவா?

வன்முறை ஆவேசமும் பழியுணர்ச்சியும், மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்திய பொற்காலத்தை மீட்டெடுக்கும் தாகங்களும், மற்றவர்களை நிராகரிக்கும் ஏகப்பெருமிதங்களும், இணங்கிப் போவதில் இசைவின்மையும், அவநம்பிக்கையும் நம்மை வாழச் செய்வதற்குரிய வழிகளைத் தேர்ந்துகொள்ளத் தடையாக இருப்பவை. மீண்டும் மீண்டும் அழிவுச் சுழலுக்குள்ளேயே நம்மைக் கொண்டு சேர்ப்பவை.

நம் மனோபாவத்தின் அடிப்படைகளை மாற்றிக் கொள்ளாமல் நாம் மீட்சி பெற முடியாது. வீம்பும், பகையுணர்வும், முட்டாள்த்தனமான ரோசங்களும், சவால்களும் நம் சமூகத்தை மேலும் மேலும் சிதைத்துவிடுவதற்கே உதவும் – உதவிக் கொண்டிருக்கிறது.

இவர்களின் தேசியப் பொங்குகை மற்றும் புனைவுகளால் தேசம், மொழி, இனம், ஆண்ட பெருமை போன்றவற்றுக்காக மேலும் மேலும் மக்கள் வதைவாழ்வுக்குள்ளேயே இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். முட்டாள்த்தனமான புனைவுகளில் ஊறி, மக்களை வதைப்பதல்ல மக்களை வாழ வைப்பதே அரசியல் கடமை என்பதை மறந்தவர்கள் இவர்கள். மீண்டும் ஒரு வன்முறைப் பரிசோதனையில் மக்களை எரித்துக் குளிர்காய அடிமானம் போடுபவர்கள்.

யதார்த்தத்தை இவர்கள் பேசுவதுமில்லை, சிந்திப்பதுமில்லை. மக்களின் வாழ்நிலை யதார்த்தம் உணராமலும், விளைவுகளை எண்ணாத உசார்மடத்தனங்களும், வறட்டுப்பெருமித வீராவேசங்களும் சமூகத்தை மேலும் மேலும் சீரழிய வைப்பதற்குத்தான் உதவுவதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மீண்டும் மீண்டும் மக்களின் நரம்புகளை முறுக்கி நாசமறுக்கத் தெண்டிப்பவர்கள் குறித்து யாவரும் விழிப்பாயிருந்து கொள்ள வேண்டியது அவசியம். பின்னர் கவலைப்படுவதென்பது, அனுபவத்தை நாம் பாடமாக்கிக் கொள்ள சமூக அறிஞர்கள் படித்தவர்கள் யாரும் உதவவில்லை என்ற வரலாற்று மூடத்தனத்தையே மேலும் நீடிப்பதாகும்.

- ஆசிரியர்

# இலங்கையின் உள்நாட்டு தேர்தல்களில் இந்தியா தலையிடுவதை நிறுத்த வேண்டும்

### அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸோ கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இனவாத பிரசாரங்களில் ஈடுபட்டால் எதிர்காலத்தில் ஆபத்தான விளைவுகளே ஏற்படும். அதேபோன்று உள்நாட்டுத் தேர்தல்களில் இந்தியா தலையிடுவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலில் யார் போட்டியிட்டாலும் பிரச்சினையில்லை. ஆனால் பிரிவினைவாதத்திற்கு துணை செல்லும் வகையிலோ இனவாதத்தை தூண்டும் வகையிலோ யாரும் செயற்படக் கூடாது.

மாகாண சபைகளுக்கு எந்தளவிற்கு அதிகாரங்கள் கொடுககப்பட வேண்டுமென்பதை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவே முடிவு செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டார். இது குறித்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் கூறுகையில்

மாகாண சபைகளுக்குள் அதிகாரங்களை அரசியல் கட்சிகள் நிர்ணயிக்க முடியாது. மாறாக அதற்கான முழு அதிகாரமும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவிற்கே உள்ளது.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள், 13ஆவது திருத்தச் சட்டம் போன்ற விடயங்களை வலியுறுத்தி கிழக்கு மாகாண சபையில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இதே போன்று இனவாத பிரசாரங்களும் மேற்கொள்ளப்படுகின்றது.

இவற்றை உடனடியாக சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் நிறுத்த வேண்டும். குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளும் இனவாத பிரசாரங்களை உடனடியாக நிறுத்த வேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்டம் இந்தியாவிலேயே தோல்வி அடைந்த விடயமாகும். அதே போன்று 1988 இல் கொண்டு வரப்பட்ட லோக்சபா சட்ட மூலமும் இன்னும் இந்தியாவில் நிலுவையிலேயே உள்ளது. இவற்றை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை ஒருபோதும் இந்தியாவை கோரியதில்லை.

எனவே உள்நாட்டின் விவகாரங்களில் இந்தியா தலையிடுவதை நிறுத்த வேண்டும். கிழக்கு மாகாண சபைத் தேர்தல ஜனநாயகம் நிறைந்ததாகவும் பொதுமக்களின் உண்மையான பிரச்சினைகளை தீர்ப்பதாகவுமே அமைய வேண்டும் என்றார்.

# பொலிஸாருக்கு எதிரான முறையீடு 11 காரியாலயங்கள் அமைப்பு

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள், ஆகியோருக்கு எதிராக முறைப்பாடு செய்ய மற்றும் விசாரணை நடத்த மாகாண மட்டத்தில் 11 பொலிஸ் ஆணைக் குழு காரியாலங்கள் நிறுவப்பட உள்ளன.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பணிகளை பன்முகப்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் காலங்களில் பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகளை 'மாகாண பொலிஸ் ஆணைக்குழுவில் செய்ய முடியும். ஒன்பது மாகாண காரியாலங்களும் இரண்டு மாவட்ட காரியாலயங்களும் உருவாக்கப்படவுள்ளன.

மனித உரிமை மீறல், சித்திரவதைகள், துன்புறுத்தல்கள், அதிகார துஷ்பிரயோகம், பொலிஸ் காவலில் உயிரிழத்தல், போலியாக வழக்குத் தொடர்தல், தடுத்து வைத்திருத்தல், ஆபாச வசனங்களினால் திட்டல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் பொதுமக்கள், பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது

# சிவில் பாதுகாப்பு குழுக்களை மீள செயற்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

சிவில் பாதுகாப்பு குழுக்களை மீள செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சகல பொலிஸ் நிலையங்களையும் மையப்படுத்தி மீளவும் சிவில் பாதுகாப்பு குழுக்களை மீளவும் செயற்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் காணப்பட்ட காலப்பகுதியில் நாட்டின் சகல பகுதியிலும் சிவில் பாதுகாப்பு கமிட்டிகள் உருவாக்கப்பட்டன.

சிவில் பாதுகாப்பு குழுவின் நடவடிக்கைகளினால் விடுதலைப் புலிகளின் பல நாச வேலைகள் தடுக்கப்பட்டன. கிராமங்களில், நகரங்களில் வாழ்ந்து வரும் குற்றவாளிகள் பற்றி சிவில் பாதுகாப்பு குழு சரியான தகவல்களை வழங்கியது.

பாலியல் வன்முறை உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களை தடுத்து நிறுத்த சிவில் பாதுகாப்பு குழுவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

## பல்கலை பிரச்சினை குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு ஆராய்வு

(கொழும்பு)

பல்கலைக்கழகப் பிரச்சினைகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு, பல்கலைக்கழகங்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள ஒவ்வொரு பிரச்சினைகளையும் ஆராய்வதற்கு ஆணைக்குழு ஒன்று அமைப்பதற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க கவனம் செலுத்தி வருவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இறுதியாக இடம்பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளனத்துடனான கலந்துரையாடலின் போது இவ்விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளும் இந்த ஆணைக்குழுவின் மூலம் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நிபந்தனைகளை ஏற்றால் ஐ.தே.க.வில் இணையத்தயார்

### சரத்பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையத் தயார் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தமது கொள்கைகளை ஏற்றுக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தினால் கட்சியில் இணைந்து கொள்ளத் தயார். உரிய பதவி மற்றும் பொறுப்புக்கள் வழங்கப்பட வேண்டும். ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி.யின் அழைப்பை ஏற்றுக் கொண்டே அரசியலில் களமிறங்கினேன்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் மீது தனிப்பட்ட குரோதம் எதுவும் கிடையாது. எனினும், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டு தொகுதி அமைப்பாளர் போன்றதொரு பதவிக்குள் முடங்கிக் கிடக்கத் தயாரில்லை என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

# கூட்டமைப்பு

# தானும் குழம்பி மக்களையும் குழப்புகின்றது

- சங்கர சிவன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கியிருக்கின்றது. வட மாகாண சபைத் தேர்தலையும் தாமதமின்றி நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றது. இது ஒரு எதிர்பாராத மனமாற்றம்.

கூட்டமைப்பு அதன் ஆரம்ப நாள் முதல் மாகாண சபையை நிராகரித்து வந்திருக்கின்றது. மாகாண சபை எந்த அதிகாரமும் இல்லாத கண்துடைப்பு அமைப்பு என்றும், ஒருபோதும் அதை ஏற்க முடியாது என்றும் கூறி வந்த கூட்டமைப்புத் தலைவர்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கங்கள் முயற்சித்த வேளைகளில் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார்கள். வடக்கு-கிழக்கு இணைப்பு இல்லாத எந்தத் தீர்வையும் ஏற்க முடியாது என்றும் அடித்துக் கூறினார்கள். கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடு தமிழ் மக்களின் நலனுக்குச் சாதகமானதல்ல எனக் கூறியவர்களுக்குத் துரோகிப் பட்டம் கட்டியவர்கள் இப்போது கிழக்கு மாகாண சபைத்தேர்தல் களத்தில் இறங்கியிருக்கின்றார்கள். வடமாகாண சபைத் தேர்தலுக்கும் தயாராகின்றார்கள். இந்த மனமாற்றம் தமிழ் அரசியலில் பல கேள்விகளை எழுப்புகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக் காலத்திலேயே மாகாணசபைகள் நடைமுறைக்கு வந்தன. வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டணி பங்குபற்றாத போதிலும் தமிழ் மக்கள் அத்தேர்தலில் பங்குபற்றி வாக்களிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தது. கூட்டணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் சென்னையிலிருந்து வெளியிட்ட அறிக்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஜனநாயக நடைமுறையைச் செயற்படுத்துவதற்குத் தமிழ் மக்கள் முழு ஆதரவு வழங்க வேண்டும் எனக் கூறினார். மாகாண சபை இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வல்ல என்பது 'அமிர்தலிங்கத்துக்கோ தமிழர் விடுதலைக் கூட்டணியின் மற்றைய தலைவர்களுக்கோ தெரியாத விடயமல்ல. அப்படியிருந்தும் வடக்கு,கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்றும், அது வடக்கு,கிழக்கு மாகாணங்களில் ஜனநாயக நடைமுறையைச் செயற்படுத்துவதாக அமையும் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி கூறியதன் மெய்ப்பொருளை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி மாகாண சபையில் ஆரம்பித்துப் படிப்படியாக முன்னேற வேண்டும் என்பதே அந்த மெய்ப்பொருள்.

அமிர்தலிங்கத்தின் மூலம் கூட்டணி முன்வைத்த அணுகுமுறையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பத்து வருடங்களுக்கு மேல் நிராகரித்து வந்திருக்கின்றது. இப்போது மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் கூட்டமைப்பு வென்றாலென்ன தோற்றாலென்ன முழுமையான அரசியல் தீர்வைப் படிப்படியாக அணுகிச் செல்லும் நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை, பாராளுமன்றத் தெரிவுக் குழு, அரசியல் தீர்வுக்குச் சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுப்பதற்கான வேலைத்திட்டம் என்பனவும் இந்த நடைமுறைக்கு உட்பட்டவை. பாராளுமன்றத் தெரிவுக் குழுவை கூட்டமைப்பு நிராகரிப்பது தவறு. மாகாண சபைகளுக்கும் கூடுதலான அதிகாரங்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் வேறு கோரிக்கைகளையும் தெரிவுக் குழுவில் முன்வைக்க முடியும். கோரிக்கையை முன்வைப்பதற்கு முன்னரே அது வெற்றியீட்டுமா இல்லையா என்று ஆருடம் பார்ப்பது கோரிக்கையில் அக்கறையின்மையையே காட்டும்.

**முழுமையான அரசியல் தீர்வை ஒரே தடவையில் அடையலாம் என்று நினைப்பது இன்றைய நிலையில் பகற்கனவு. சர்வதேச சமூகம் முழுமையான அரசியல் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையை வளர்ப்பது கற்பனையாகவே முடிந்துவிடும். அரசியல் தீர்வை அடைவதற்கு நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டம் இல்லாமல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை மாகாண சபையுடன் முடிவுக்குக் கொண்டு வருவதாக அமைந்துவிடும்.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாகச் சில கேள்விகள் எழுகின்றன. இவ்வளவு காலமும் நிராகரித்த மாகாண சபைத் தேர்தலில் இப்போது ஏன் போட்டியிடுகின்றார்கள்? கிடைக்கும் தீர்வை ஏற்றுக்கொண்டு படிப்படியாக முழுமையான அரசியல் தீர்வை அடைய வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு இப்போது வந்திருக்கிறார்களா? தேர்தலில் போட்டியிடும் முடிவுக்குச் சர்வதேச சமூகம் ஏதேனுமொரு விதத்தில் காரணமா? தீர்வுக்கான வேலைத்திட்டம் இல்லாததாலேயே கூட்டமைப்பு சர்வதேச சமூகத்தை நாடுகின்றதா?**

ஆரம்பத்தில் கூறியது போல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாகச் சில கேள்விகள் எழுகின்றன. இவ்வளவு காலமும் நிராகரித்த மாகாண சபைத் தேர்தலில் இப்போது ஏன் போட்டியிடுகின்றார்கள்? கிடைக்கும் தீர்வை ஏற்றுக்கொண்டு படிப்படியாக முழுமையான அரசியல் தீர்வை அடைய வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு இப்போது வந்திருக்கிறார்களா? தேர்தலில் போட்டியிடும் முடிவுக்குச் சர்வதேச சமூகம் ஏதேனுமொரு விதத்தில் காரணமா? தீர்வுக்கான வேலைத்திட்டம் இல்லாததாலேயே கூட்டமைப்பு சர்வதேச சமூகத்தை நாடுகின்றதா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச சமூகத்தில் முழுமையான நம்பிக்கை வைத்திருப்பது தெரிந்த விடயம். அமெரிக்காவையும், இந்தியாவையும் கூடுதலாக நம்பியிருப்பதாகச் சம்பந்தன் பல தடவைகள் கூறியிருக்கின்றார். இலங்கை அரசாங்கத்துக்கும் அமெரிக்காவுக்குமிடையே புரிந்துணர்வும் நல்லுறவும் வளர்ந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையில் இனப்பிரச்சினையின் நியாயமான தீர்வுக்கு அமெரிக்கா பங்களிப்புச் செய்யும் என்று நம்புவதில் அர்த்தமில்லை. இந்தியாவின் பங்களிப்பு ஒரு எல்லைக்கு மேல் செல்லக்கூடியதல்ல. தனது மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களிலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களுடன் இலங்கையில் அதிகாரப் பகிர்வு இடம்பெறுவதை இந்தியா ஒருபோதும் விரும்பப்போவதில்லை. சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வு ஆலோசனைகள் சில விடயங்களில் இந்திய மாநிலங்களிலும் பார்க்கக் கூடுதலான சுயாட்சி அதிகாரத்தைக் கொண்டிருந்ததையிட்டு இந்திய அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்தார்களென்று அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளின் தயாரிப்பிலும் முன்னெடுப்பிலும் ஈடுபாடுகொண்டிருந்தவர்கள் கூறக் கேட்டிருக்கின்றேன்.

மாகாண சபைக்கு மேலும் சில அதிகாரங்களைப் பெற்றுக் கொடுப்பது தான் இந்தியாவின் செயற்பாட்டு எல்லை. அதற்கு மேலான எந்தத் தீர்வையும் இந்தியா விரும்பாது. அதனாலேயே 'பதின்மூன்று பிளஸ்' என்ற நிலைப்பாட்டில் இந்தியா தொடர்ந்து இருக்கின்றது. இந்த நிலையில், இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட முன்வந்திருக்கின்றது என்ற பொதுவான அபிப்பிராயத்தை நிராகரிக்க முடியாது.

சிங்கள அரசாங்கங்கள் ஒருபோதும் இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதில்லை என்று சொல்லிக்கொண்டே எல்லாப் பாராளுமன்றத் தேர்தல்களிலும் போட்டியிடுவதற்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் வழமையாகக் கூறும் விளக்கத்தை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கும் கூறக்கூடும். தமிழ் மக்கள் தங்களுடனேயே இருக்கின்றார்கள் என்பதைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காட்டுவதற்காகவே தேர்தல்களில் போட்டியிடுவதாகக் கூறுவது கூட்டமைப்புத் தலைவர்களுக்கு வழக்கமாகிவிட்டது.

அரசியல் அதிகாரத்தையும் வசதிவாய்ப்புக்களையும் அனுபவிக்கும் ஆவலை மறைப்பதற்கான போலி விளக்கமே இது. மக்கள் தங்களுடனேயே இருக்கின்றார்கள் என்பதை இவர்கள் காலாதிகாலமாகச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காட்டி வந்த போதிலும் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. இதிலிருந்து மேற்படி விளக்கத்தின் போலித்தன்மையைப் புரிந்து கொள்ளலாம். இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை அடைவதற்குச் சர்வதேச சமூகத்திடமிருந்து எவ்வித பங்களிப்பும் கிடைக்காது என்பதை மீண்டும் மீண்டும் கூற வேண்டியதில்லை.


அரசியல் அனுபவஸ்தர்களும் அறிவாளிகளுமான கூட்டமைப்புத் தலைவர்களுக்கு இது விளங்காமலிருக்காது. அப்படியிருந்தும் சர்வதேச சமூகத்தை எதிர்பார்த்து நிற்பது இனப்பிரச்சினையின் தீர்வுக்கு இவர்களிடம் கொள்கையோ வேலைத்திட்டமோ இல்லையென்பதை வெளிப்படுத்துகின்றது. உட்கட்சி முரண்பாடு காரணமாக, தீர்வுக்கான கொள்கையை வகுத்து வெளியிட இயலாத நிலையில் கூட்டமைப்புத் தலைவர்கள் இருக்கின்றனர். இந்த விடயத்தில் இவர்கள் தாங்களும் குழம்பி மக்களையும் குழப்புகின்றார்கள்.

கிடைக்கும் தீர்வை ஏற்றுக்கொண்டு முழுமையான அரசியல் தீர்வை நோக்கிய நகர்வுகளை மேற்கொள்ளும் நிலைப்பாட்டுக்குக் கூட்டமைப்பு வந்துவிட்டதா என்று பார்த்தால், அதற்கான அறிகுறிகளைக்காணோம். முழுமையான அரசியல் தீர்வை ஒரே தடவையில் அடையலாம் என்று நினைப்பது இன்றைய நிலையில் பகற்கனவு. சர்வதேச சமூகம் முழுமையான அரசியல் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையை வளர்ப்பது கற்பனையாகவே முடிந்துவிடும். அரசியல் தீர்வை அடைவதற்கு நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டம் இல்லாமல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை மாகாண சபையுடன் முடிவுக்குக் கொண்டு வருவதாக அமைந்துவிடும்.

சாத்தியமான தீர்வை ஏற்றுக்கொண்டு படிப்படியாக முழுமையான அரசியல் தீர்வை அடையும் அணுகுமுறையைப் பின்பற்றுவதற்கும் கூட்டமைப்பு தயாராக இருப்பின் மாத்திரமே 'மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதென்ற அதன் முடிவு நல்ல முடிவாக இருக்கும்.

# நான்கு முகவரகங்கள் ஊடாக 43 ஆயிரம் வீடுகள் நிர்மாணம்

## கொழும்பில் ஒப்பந்தம் கைச்சாத்து



(கொழும்பு)

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் அடுத்த கட்டத்தை அமுல்படுத்துவதற்கான பணிகளை நான்கு அமுலாக்கல் முகவரகங்களுக்கு ஒப்படைப்பது தொடர்பான ஒப்பந்தங்களில் இந்திய உயர்ஸ்தானி கராலயம் நேற்று முன்தினம் கையெழுத்திட்டது.

இந்திய நிதியுதவியில் 50,000 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தின் கீழ், வடக்கு கிழக்கு மாகாணங்களில் 43,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான இந்த அடுத்த கட்டத்தை ஐ.நா. ஹெபிடாட், சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியன இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை அரசின் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி முகவரகம், மனிதாபிமானத்திற்கான குடியிருப்பு ஆகிய அமைப்புகளுடன் இணைந்து அமுல்படுத்தவுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா ஆகியோர் முன்னிலையில் இதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2010 ஜூன் மாதம் இந்தியாவுக்கு மேற்கொண்ட இராஜாங்க விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கினால் அறிவிக்கப்பட்ட 50,000 வீடுகளை அமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்படி 43,000 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவ்வீடமைப்புத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஆர்வம் வெளிபடுத்தப்பட்ட பின்னர், இலங்கையில் ஏற்கனவே இத்தகைய திட்டங்களை அமுல்படுத்துவதில் அந் நிறுவனங்கள் கொண்டுள்ள அனுபவங்களைக் கருத்திற்கொண்டு, போட்டி முறைமை யொன்றுக் கூடாக மேற்படி நான்கு நிறுவனங்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டமையானது, இத்திட்டத்தை விரைவாக அமுல்படுத்துவதற்கு வழியேற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் பயனாளிகள் தமது வீட்டை நிர்மாணிப்பதற்கு அல்லது புனரமைப்பதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்வர். இதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை மேற்படி அமுலாக்கல் முகவரகங்கள் வழங்கும். வீடுகளுக்கான நிதியை நிர்மாணப் பணிகளின் முன்னேற்றங்களின் அடிப்படையில், பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு இந்திய உயர்ஸ்தானிகராலயம் நேரடியாக அனுப்பும்.

இலங்கை அரசாங்கம், களத்திலுள்ள மக்கள், ஜீவனோபாய நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்யும் இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகியனவற்றின் அடிப்படையில் இந்த "உரிமையாளர் உந்துதல் அணுகுமுறை" பின்பற்றப்படுகிறது.

இவ்வீட்டுத்திட்டமானது அப்பகுதிகளின் வீடுகளுக்கான தேவைகளின் கணிசமானவற்றை பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில் 6000 வீடுகள் வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களில அதிக ஆபத்திலுள்ள பிரிவினர், மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் பெருந்தோட்டப் பகுதிளைச் சேர்ந்த மக்களுக்காக நிர்மாண முகவரகங்களால் நேரடியாக நிர்மாணிக்கப்படும்.

இந்திய அரசின் உதவியினால் 50,000 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக வடக்கு கிழக்கு மாகாணங்களின் 5 மாவட்டங்களில் 1000 வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கை 2010 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. இவற்றில் 950 வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளதுடன் இவற்றில் பெரும்பாலானவை பயனாளிகளிடம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டத்தின் எஞ்சிய வீடுகள் இம்மாத இறுதிக்குள் பூர்த்தியாக்கப்படவுள்ளன.

மேற்படி 50,000 வீடமைப்புத் திட்டமானது இந்திய அரசின் 3,060 கோடி இலங்கை ரூபா நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### உயர்தரப் பரீட்சை தொடர்பாக உயர் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம்

(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் இசட் புள்ளி முறைகேடு தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் அடங்கியிருந்த உத்தரவுகள் இதுவரை செயற்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரமொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் சார்பாக சட்டத்தரணி சஞ்ஜீவ களு ஆராச்சி இந்த நகர்த்தல் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி நீதிமன்றம் அறிவித்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்த ஆலோசனைகளை செயற்படுத்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும், அதன் தலைவரும் தவறியுள்ளதாக நகர்த்தல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய மற்றும் பழைய பாட விதானங்களை வெவ்வேறாக கொண்டு உரிய முறைமைக்கு அமைய, இசட் புள்ளிகளை கணக்கிடுமாறு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# தம்புள்ளை புனித பூமியை அபிவிருத்தி செய்வதில் தாமதம்

## சுமங்கள தேரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தம்புள்ளை புனித பூமியை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் எவ்வித நடவடிக் கையும் எடுக்கவில்லை என வண இராமலுவே சுமங்கள தேரர் தெரிவித்தார். நேற்று முன்தினம் தம்புள்ளை விகாரையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலம் ஏற்பட்ட பரபரப்பான நிகழ்வுகளுக்கு பிறகு அரச நிறுவனங்களுடன் இரண்டு முறை கலந்துரையாடிய போதும் இது சம்பந்தமாக அறிக்கை ஒன்றைக் கூட சமர்பிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு வெளிநாட்டு பௌத்த மக்கள் அடிக்கடி தம்முடன் தொடர்பு கொண்டு இது சம்பந்தமாக கேட்பதாகவும் அவர்களுக்கு உண்மையை கூற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# உள்ளூராட்சி தலைவர்களின் செயற்பாடு மக்கள் நலன்சார்ந்து இருக்கவேண்டும்

## ஜனாதிபதி அறிவுறுத்து

(கொழும்பு)

அதிகாரங்களுக்கு மாத்திரம் மட்டுப்பட்டு செயற்பட்டால் மக்களுக்கு உரிய சேவையை நிறைவேற்ற முடியாதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதிகாரம் குறித்து சிந்திக்காமல் மக்க்ளின் தேவைகளுக்கு முக்கியத்துவமளித்து செயற்படுவது குறித்து அனைத்து உள்ளூராட்சித் தலைவர்களும் கவனத்திற் கொள்ள வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கொழும்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜனாதிபதி இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமது உள்ளூராட்சி பிரதேசங்களை தமது இராசதானிகளாக கருதாமல் அரச அதிகாரிகளுடன் இணைந்து பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய தேவை உள்ளது.

நாட்டின் அபிவிருத்தி தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது தனித்தனியாக தீர்மானங்களை எடுக்காது அனைவரினதும் இணக்கப்பாட்டுடன் தீர்மானம் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றார்.கொழும்பு மாவட்டத்தின் வாகன நெரிசல், குப்பை கூளங்களை அகற்றுவது தொடர்பான பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை, கல்வி மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் தீர்க்கமாக ஆராயப்பட்டுள்ளது.

### 1413 தமிழர்கள் அவுஸ்ரேலியாவிற்கு

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் 1413 இலங்கைத் தமிழர்கள் அவுஸ்ரேலியாவில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். 22 மீன்பிடிப் படகுகளில் இவர்கள் அங்கு சென்றுள்ளனர். 9 ஆயிரம் டொலர்களை கொடுத்து தாம் அவுஸ்ரேலியா சென்றதாக, தஞ்சம் கோரியுள்ளவர்களிடம் நடத்தப்பட்டுள்ள விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடும் போது, இந்த வருடம் அரசியல் தஞ்சம் கோரி அவுஸ்ரேலியா சென்றவர்களின் எண்ணிக்கையானது 150 வீதமாக அதிகரித்துள்ளது என அவுஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 6 வயது சிறுமி மீது வன்முறை இராணுவ வீரர் கைதானார்

(கொழும்பு)

ஆறு வய்து சிறுமி ஒருவரை துஷபிரயயோகத்திற்கு உட்படுத்திய இராணுவ வீரர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அழுத்கம, திகான்ம பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவரே துஷபிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நிக்கவரட்டிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை அவருக்கு விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

வீட்டில் சிறுமி தனிமையில் இருந்த வேளையில் குறித்த இராணுவ வீரர் சிறுமியை துஷபிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

இவ் இராணுவ வீரர் இதற்கு முன்னதாக 2010 ஆம் ஆண்டிலும் துஷபிரயோக சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பெற்றோர் சந்திப்பென கூறி அரசியல் கலந்துரையாடல்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், அநுராதபுர மாவட்ட பாடசாலைகளில் பெற்றோர் சந்திப்பு என்ற பெயரில் அரசியல் கலந்துரையாடல்தன் நடத்தப்படுவது குறித்து தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளருடன் நடைபெற்ற சந்திப்பொன்றின்போது, தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் இவ்விடயம் குறித்து கலந்துரையாடியது.

தேர்தலுக்கு முன்னதாக அரச வளங்கள் துஷபிரயோகம் செய்யப்படுவது குறித்தும் தேர்தல் ஆணையாளருடன் தான் கலந்துரையாடியதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கூறினார்.

"கலைக்கப்பட்ட சபைகளில் பதவிகளை வகித்த பல அரசியல்வாதிகள் தமது வாகனங்கள் மற்றும் அலுவலகங்களை ஒப்படைக்கவில்லை. ஒருசிலர் மாத்திரமே சட்டத்தின்படி நடந்துகொண்டுள்ளனர்.

அவர்களின் பெயர்களை வெளியிடுமாறு தேர்தல்கள் ஆணையாளரை நாம் கோரியுள்ளோம். இதன்மூலம் ஏனையோர் அம்பலமாகுவார்கள் என ரோஹண ஹெட்டியராச்சி கூறினாா.

# ஆக்கத்திறனை வளர்க்க ஊக்கமளிக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

பெற்றோர்கள் கல்வியில் மட்டுமே மாணவர்களை ஊக்கப்படுத்தாது அவர்களின் ஆக்கத்திறனையும் ஊக்கப்படுத்த வேண்டுமென வேலணை பிரதேச சபையின் தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசா தெரிவித்துள்ளார்.

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி - 2012 இல் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.



வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சியில் தீவகவலய கல்விப் பணிப்பா ளர் இராதாகிருஷ்னன் மற்றும் வேலணைப் பிரதேச சபையின் உபதவிசாளர் சி.கார்த்திகேசு, தீவக வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கண்காட்சி பாடசாலை அதிபர் புவனேஸ்வரி தலைமையில் நடைபெற்றது. (85)

# கூட்டுறவு பணியாளர்களை ஊக்குவிக்க போட்டிகள்

(யாழ்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்தும் 90 ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினவிழாவை முன்னிட்டு அங்கத்தவர்கள் பணியாளர்களுக்கான போட்டி எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் யாழ்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

21 ஆம் திகதி சனிக்கிழமை மதியம் 1 மணிக்கு குழுப் பாடல், பிற்பகல் 2 மணிக்கு நாடகம் ஆகிய போட்டிகளும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு பணியாளர் கட்டுரை, 10 மணிக்கு சிறுவர் பாடசாலை, குழு நடனப் போட்டி, ஆண், பெண் அங்கத்தவர் பேச்சுப் போட்டியும், 11 மணிக்கு ஆண் பெண் பணியாளர் பேச்சுப் போட்டி, 11.30 மணிக்கு ஆண், பெண் பணியாளர் கவிதைப் போட்டி, 1.00 மணிக்குப் பணியாளர் விநாடிவினாப் போட்டி, 2 மணிக்கு மகளிருக்கான பெட்டி இழைத்தல் போட்டி என்பனவும் நடைபெறவுள்ளது.

எனவே பங்குகொள்பவர்கள் குறித்த நேரத்திற்கு வருகைதந்து போட்டிகளை சிறப்பாக நடத்த ஒத்துழைப்பு வழங்குமாறு கூட்டுறவுச் சபை செயலாளர் திருமதி வே.செல்வரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார் (54)

# சைவசமய பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வும் கருத்தரங்கும்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 வகுப்புகளில் சைவநெறி போதிக்கும் ஆசிரியர்களிற்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கும், செயலமர்வும் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

உடுவில், தெல்லிப்பளைக் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இக்கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை இராமநாதன் கல்லூரியில் காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது.

கருத்தரங்கிற்கு வருகை தரும் ஆசிரியர்கள் முதலாம் தவணைக்குரிய சைவநெறி பாடப்புள்ளிப்பகுப்பாய்வு, தரம் 11 வகுப்பின் பாடஅடைவுமட்டத்தை அதிகரித்துச் செல்வதற்கான செயற்றிட்டம் என்பனவற்றை எடுத்துவரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்கள் இச்செயலமர்விற்கு தவறாது சமூகம் தருவதை அதிபர்கள் உறுதி செய்து கொள்ளுமாறு அவர் மேலும் அறிவித்துள்ளார். (06)

# கூட்டுறவுதினப் போட்டி முடிவுகள்

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்திய 90 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. பாடசாலை மட்ட பேச்சுப் போட்டி முடிவுகள் பின்வருமாறு,

கீழ்ப்பிரிவு

1 ஆம் இடம் செல்வசுந்தரம் இளங்கதிர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

2ஆம் இடம் அசோகன் அசாரிகா, யா/வேம்படி மகளிர் கல்லூரி.

3ஆம் இடம் சற்குணரத்தினம் திவ்வியா, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

மத்திய பிரிவு

1 ஆம் இடம் கமலநாதன் கர்சிகா, யா/வேம்படி மகளிர் கல்லூரி.

2ஆம் இடம் சத்தியசீலன் சங்கர்ஜி, யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

3 ஆம் இடம் புஸ்பராணி ரவீந்திரன் யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

மேற்பிரிவு

1 ஆம் இடம் உ.சாந்திகா, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

2ஆம் இடம் ப.கதிர்தர்சினி, யா/வேம்படி மகளிர் கல்லூரி.

3 ஆம் இடம் சு.டினேஷ், யா/இளவாலை சென் கொன்றிஸ்.

அதிமேற்பிரிவு

1 ஆம் இடம் அ.சாம்பவி, யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.

2 ஆம் இடம் க.ஜஸ்மிதா யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

3 ஆம் இடம் சு.ரொபின்ஸ் கபில்டன் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

வினாடிவினாப் போட்டி

1 ஆம் இடம், 'யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

2 ஆம் இடம், யா/இளவாலை சென் ஹன்றிஸ், யா/யூனியன் கல்லூரி,

3 ஆம் இடம் யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி., யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம். (54)

# சிட்டிவேரம் ஆலயத்திற்கருகில் அறநெறிப்பாடசாலை

(வரணி)

சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய நிர்வாக சபையினரால் ஆலயத்திற்கு அருகில் அறநெறிப்பள்ளி அமைக்கப்பட்டு வருகின்றது.

பள்ளிக்கான வேலைகள் தற்போது பூர்த்தியடையும் நிலையில் உள்ளது. தற்போது ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் மாலை நேரத்தில் ஆலயத்தின் வடக்குப்புறமாக அமைந்துள்ள மண்டபத்தில் தற்காலிகமாக மாணவர்களுக்கு அறநெறிக்கல்வி கற்பிக்கப்பட்டு வருவது குறிப்பட்டத்தக்கது. (150)

# சேடம் இழுக்கும் முள்ளிப்பாலம்

(வரணி வடக்கு)

கொடிகாமம் - பருத்தித்துறை பிரதான போக்குவரத்து வீதியில் முள்ளிப்பாலம் மிகவும் மோசமான நில்லயில் காணப்படுகின்றது. இருபக்கமும் சேதமடைந்து நடுப்பகுதியால் தற்போது வாகனங்கள் செல்வதை அவதானிக்க முடிகிறது.

இந்த நடுப்பகுதியில் தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்களும் பாரஊர்திகளும் செல்வதால் திடீர் பாதிப்பு ஏற்படக்கூடிய அவல நிலை காணப்படுகின்றது.

இப்பாலம் முற்றாகச் சேதமடைந்தால் கொடிகாமம் - பருத்தித்துறை போக்குவரத்துக்கள் தடைப்படும் அபாய நிலை உள்ளது.

சேதமடைந்த இருபகுதிகளுக்கும் அபாயக் கொடிகள் கட்டப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே இப்பாலத்தை உரியவர்கள் காலம் தாழ்த்தாது உடனடிக் கவனத்திலெடுத்துச் சீர் செய்ய வேண்டும்மென பயணிகளும், வாகன உரிமையாளர்களும் கோருகின்றனர். (150)

# முரசின் இன்றைய பலன்

(15.07.2012 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 31 ஆம் திகதி. துவாதசி முழுவதும்.
நட்சத்திரம் ரோகினி முழுவதும். சித்தயோகம்.
இராகுகாலம் 4.30 - 6.00 வரை. சுபநேரம் 9.00 - 10.30 வரை.
எமகண்டம் 12.00 - 1.30 வரை. குளிகன் காலம் 8.00 - 4.30 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மகிழ்ச்சி, கூட்டுத் தொழில் சீராகும், சகோதர வழியில் உதவி, கௌரவ பதவி கிட்டும். |
| ரிஷபம் | நல்ல செய்தி, எச்சரிக்கையுடன் செயல்ப்படவும், சரளமான பணப்புழக்கம், செல்வந்தர் நப்பு. |
| மிதுனம் | மனப்பயம், குடும்பத்தில் சஞ்சலம், பதவியுயர்வு, கடன் தொல்லை நீங்கும். |
| கடகம் | சங்கட நிலை, தேவைக்கேற்ப பணவரவு, பயணம் தவிர்க்கவும், வீண் செலவுகள். |
| சிம்மம் | சிறு பயணம், வீண்பழி கேட்டல், அரச வழியில் உதவி, தொட்டது துலங்கும். |
| கன்னி | வெற்றி, மனச்சஞ்சலம், பயணம் தவிர்க்கவும், அதிகாரிகள் இடையூறு. |
| துலாம் | நேற்று முன்தினம் போல கவனம், அனுசரித்துப் போகவும், செலவுகள் அதிகரிப்பு. |
| விருச்சிகம் | சிறுபயணம், மருத்துவச் செலவுகள், இடமாற்ற அதிருப்தி, உறவினர் சகாயம். |
| தனுசு | பணவரவுகள், வரவிலும் செலவு கூட, மித்திரர் துரோகம், பிரயாணம் மூலம் இலாபம். |
| மகரம் | பயண வெற்றி, குடும்பத்தில் வாக்குவாதம், கடனகள் குறையும், நினைத்த காரியம் நிறைவேறும். |
| கும்பம் | புத்திமேன்மை, வீண்விரயம், தேவையற்ற அலைச்சல், நண்பர்களால் சஞ்சலம். |
| மீனம் | சுகவிருத்தி, உறவினர் பகை, தொழில் துறையில் போட்டி, குடும்பத்தில் மகிழ்ச்சி. |

# மின்சாரசபையால் குற்றம்சாட்டப்பட்டவர் குற்றமற்றவர் என நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொனிக்கா கலர்லாப்பிற்கு எதிராக கடந்த வருடம் கார்த்திகை மாதம் 27ஆம் திகதி இலங்கை மின்சார சபையின் அனுசரணையுடன் யாழ்.பொலிஸாரினால் யாழ்.நீதிமன்றத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதற்கான வழக்கில் எதிரிகுற்றமற்றவர் என்று யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா தீர்ப்பு வழங்கியுள்ளார்.

இந்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரியினால் இலங்கை மின்சார சபைக்கு ஒன்பது இலட்சத்து 65 ஆயிரத்து 927 ரூபா சட்டவிரோத மின்பாவனையின் மூலம் நட்டமேற்படுத்தப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி மின்சார சபை கட்டளைச்சட்டத்தின் பிரிவுக்கு அமைவாக இந்த வழக்கில் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்படவில்லை, மின்சார சபை ஆணையாளரினால் அளிக்கப்பட்ட அனுமதி முறைப்படி அமையவில்லை. எதிரிக்கான குற்றச்சாட்டில் அவர் தெரிந்து கொண்டு அலட்சியமாக மின்மானிக்கு சேதம் விளைத்தார் அல்லது சேதம் விளைவிக்கப்பட்டது என்பதை வழக்குத் தொடுநர் நிருபிக்கத் தவறியுள்ளார். எதிரியினால் அளிக்கப்பட்ட சாட்சியம் வழக்குத் தொடுநர் தரப்பில் நியாயமான சந்தேகத்தை ஒப்புவித்துள்ளது. இந்த நான்கு காரணங் களினால் எதிரியை சுற்றவாழி என்று யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா தீர்ப்பு வழங்கியுள்ளார்.

இந்த வழக்குத் தொடுக்கப்பட்ட காலத்தில் இருந்து நேற்று வரை குறித்த எதிரிக்கு மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்படவில்லை. மின் தடைப்பட்டுள்ளது எனவும் தெரியவருகிறது. (பா)

# ஒலிம்பிக் வீரர்கள் தங்கவுள்ள விளையாட்டு கிராமம் திறப்பு




(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வீரர், வீராங்கனைகள் தங்கக்கூடிய விளையாட்டு கிராமம் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது. இதனை லண்டன் மாநகர மேயர் போரிஸ் ஜான்சன் திறந்து வைத்தார். ஒலிம்பிக் பார்க்கில் அமைந்துள்ள இந்த விளையாட்டு கிராமத்தில் வீரர்கள், வீராங்கனைகள், பயிற்சியாளர்கள், விளையாட்டு அதிகாரிகள் என்று 203 நாடுகளைச் சேர்ந்த 16 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு மொத்தம் 2818 அடிக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு அறையிலும் இரண்டு தனி பெட்டுகள், டேபிள்கள், சிறிய விளக்குகள், டி.வி உள்ளன. வயர்லெஸ் இன்டர்நெட் வசதியும் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. மொத்தம் 28 ஆயிரம் மெத்தைகள், 22 ஆயிரம் தலையணைகள் சப்ளை செய்யப்படுகிறது. 5,500 பேர் அமர்ந்து சாப்பிடக்கூடிய பிரமாண்ட டைனிங் ஹாலும் உள்ளது. இது தவிர, மருத்துவ வசதிகள், ஜிம், விளையாட்டு அறைகள், ரெஸ்டாரென்ட், ஓய்வறைகளும் இந்த சொகுசு குடியிருப்பில் அமைந்துள்ளது. இந்த வார இறுதியில் இருந்து வீரர்கள் விளையாட்டு கிராமத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

## வினய்குமாருக்குப் பதில் இர்பான்



(புதுடில்லி)

இலங்கையில் நடைபெறவுள்ள ஒருநாள் போட்டித் தொடருக்கான இந்திய அணியில் இருந்து வேகப்பந்து வீச்சாளர் வினய் குமார் காயம் காரணமாக விலகி உள்ளார். அவருக்கு பதிலாக சகலதுறை வீரர் இர்பான் பதான் சேர்க்கப்பட்டுள்ளார். இந்திய கிரிக்கெட் அணி இலங்கை சென்று 5 ஒருநாள் மற்றும் ஒரு ருவென்ரி - 20 போட்டியில் விளையாடவுள்ளது. முதல் ஒருநாள் போட்டி 21ஆம் திகதி நடைபெற உள்ள நிலையில், வேகப்பந்து வீச்சாளர் வினய்குமார் பயிற்சியின்போது காயம் அடைந்தார். தசைநார் கிழிந்துள்ளதால் அவர் 3 வாரத்துக்கு விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, இலங்கை தொடரில் இருந்து அவர் நேற்று முன்தினம் விலகினார். அவருக்கு பதிலாக சகலதுறை வீரர் இர்பான் பதான் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாக கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

## பதக்கம் வெல்வதை உறுதியாக கூறமுடியாது

(மும்பை)

லண்டன் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வோம் என்று உறுதியாகக் கூற முடியாது என சானியா மிர்சா தெரிவித்தார்.

எத்தனை பதக்கங்கள் கிடைக்கும் என்பதை முன்கூட்டியே கணித்து கூறுவது நியாயமற்றது. அனைத்து வீரர், வீராங்கனைகளும் நெருக்கடியுடன் தான் ஒலிம்பிக்குக்கு போகிறார்கள். எனவே பதக்கம் வெல்வோம் என்று எந்த உறுதிமொழியும் அளிக்க முடியாது. ஆனால் எங்களது 100 சதவீத திறமையை வெளிப்படுத்துவோம் என்றார். லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இந்திய ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா கலப்பு இரட்டையரில் லியாண்டர் பயசுடனும், பெண்கள் இரட்டையரில் ருஷ்மி சக்ரவர்த்தியுடனும் இணைந்து விளையாடுகிறார்.



## பாகிஸ்தான் வீரர்கள் விடுவிப்பு

இலங்கையில் இடம்பெறவுள்ள இலங்கை பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றுவதற்காக பாகிஸ்தான் வீரர்களை விடுவிப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. அத்தோடு அவ்வீரர்களுக்கு அவுஸ்ரேலியத் தொடருக்கு முன்னதாக இடம்பெறவுள்ள பயிற்சி முகாமிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரி-யொருவர், இலங்கையில் இடம்பெறவுள்ள இலங்கை பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றுவதற்கான அனுமதி பாகிஸ்தான் வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதன்படி ஆகஸ்ட் 10ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இத்தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் பங்குபற்றுவார்கள் என அவர் தெரிவித்தார். ஷகிட் அப்ரிடி, மிஸ்பா உல் ஹக், சயீட் அஜ்மல், உமர் அக்மல், யுனிஸ்கான், உமர் குல், அஹமட் செஷாத், இம்ரான் நசீர் உட்பட 13 பாகிஸ்தான் வீரர்கள் இலங்கை பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். வழங்கப்பட்ட அனுமதி தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரி, இலங்கைக் கிரிக்கெட் சபையுடன் காணப்படும் ஒத்த கருத்துக்கள் காரணமாகவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதன்படி பாகிஸ்தான் வீரர்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இலங்கை பிறீமியர் லீக்கிற்கு அனுமதிக்கும் அதேவேளை, பாகிஸ்தானால் நடத்தப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் பிறீமியர் லீக்கிற்கு இலங்கை வீரர்களைப் பங்குபற்ற இலங்கைக் கிரிக்கெட் சபை அனுமதிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

## வெளிநாட்டு டெஸ்ட் போட்டிகளில் தடுமாறுவதை தடுக்க புதிய திட்டம்

(புதுடில்லி)

இந்தியாவின் உள்ளூர்ப் போட்டிகளுக்காக சிறந்த ஆடுகளங்களைத் தயாரிக்குமாறு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதன் மைதானப் பராமரிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. இதன்படி ஆடுகளங்களை அதிக பௌண்ஸ்கள் கொண்டதாகவும், புற்கள் கொண்டதாகவும் அமைக்குமாறு இந்தியக் கிரிக்கெட் சபை அறிவுறுத்தியுள்ளது.

புற்களைக் கொண்டு ஆடுகளங்கள் அமைக்கப்படும் போது அவ் ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்குத் சாதகமானதாக மாறுவதோடு, பௌண்ஸ் அதிகம் கொண்ட ஆடுகளங்களை வேகப்பந்து வீச்சாளர்கள், சுழற்பந்து வீச்சாளர்களும் விரும்புவர். ஆனால் புற்களும், பௌண்ஸும் தேவையென இந்தியக் கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்துள்ளதன் காரணமாக அச்சபை வேகப்பந்து வீச்சையே பிரதானப்படுத்தியுள்ளது. அண்மைக்காலமாக இந்தியக் கிரிக்கெட் அணி வெளிநாடுகளில் டெஸ்ட் போட்டிகளில் தடுமாறி வரும் நிலையி[illegible] அதனைக் குறைப்பதற்காக இந்திய ஆடுகளங்களின் தரம் மேம்பட வேண்டும் என சௌரவ் கங்குலி தலைமையிலான கிரிக்கெட் செயற்குழு பிரேரித்திருந்தது.

இதன்படி மைதானப் பராமரிப்பாளர்களுக்கு இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதோடு போட்டிக்கு ஒருவாரத்திற்கு முன்னதாகவே குறித்த மைதானங்கள் இந்தியக் கிரிக்கெட் சபையால் பார்வையிடப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ராவிட்டின் இடத்தை நிரப்புவது கடினம் என்கிறார் சச்சின்



இந்திய டெஸ்ட் அணியில் பெருஞ்சுவர் என்றழைக்கப்படும் ராகுல் ராவிட்டின் இடத்தை நிரப்புவது மிகவும் கடினம் எஎன சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார். சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற ராவிட்டுடன் அணியில் நீண்ட காலமாக விளையாடியவர் சச்சின். ராவிட்டின் பிரிவு தன்னை மிகவும் வருத்தமளிப்பதாக சச்சின் தெரிவித்தார்.

இது குறித்து சச்சின் கூறியதாவது, இந்திய அணிக்கு மட்டுமல்ல, உலக கிரிக்கெட்டிலும் மிகச் சிறந்த வீரராக ராகுல் ராவிட் விளங்கினார். அவரது ஓய்வால், டெஸ்ட் அணியில் நிரப்ப முடியாத ஒரு வெற்றிடம் உருவாகிவிட்டது.

அவரது இடத்தை நிரப்ப வேண்டும் என்றால், மிகவும் ஒழுக்கமான அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய திறமையான வீரரால் மட்டுமே அது முடியும்.

டெஸ்ட் போட்டியின் துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் 3ஆவது வீரராக களமிறங்குவது மிகவும் கடினமான காரியம் எனவும் அவர் தெரிவித்தார்.

## இளம் வேகப்பந்து வீச்சாளர் டெஸ்ட் தொடரிலிருந்து அவுட்

(லண்டன்)

தென்னாபிரிக்க அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் மார்ஷ் டீ லாங்க இங்கிலாந்திற்கெதிராக இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள டெஸ்ட் தொடரில் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. முதுகு உபாதை காரணமாகவே அவர் இத்தொடரிலிருந்து வெளியேற்றப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மார்ஷ் டீ லாங்கவிற்கு கீழ் முதுகு உபாதை ஏற்பட்டுள்ளதாகவும், அவர் முழுமையாகக் குண-மடைய 6 வாரங்களாவது தேவைப்படும் என வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளதாகவும், அதன் காரணமாக அவரை தென்னாபிரிக்காவிற்குத் திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தென்னாபிரிக்க அணியின் உடற்கூற்று நிபுணர் தெரிவித்தார்.

இத்தொடரின் ஆரம்பத்தில் இடம்பெற்ற முதலாவது பயிற்சிப் போட்டியின் லாங்க பங்குபற்றாததோடு அதன் பின்னர் அவருக்கான ஸ்கான் பரிசோதனைகள் செய்யப்பட்டிருந்தன. அதன்போது அவரது முகுகென்பின் அடிப் பகுதியில் அழற்சி ஏற்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

21 வயதான மார்ஷ் டீ லாங்க இது வரை 2 டெஸ்ட் போட்டிகள் மாத்திரம் பங்குபற்றியுள்ளதோடு, தென்னாபிரிக்காவின் முதற்தெரிவு 3 வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவராகக் கருதப்படவில்லை. டேல் ஸ்ரெய்ன், வேர்ணன் பிலாந்தர், மோர்னி மோக்கல் ஆகிய 3 பேரில் ஒருவருக்கு காயம் .ஏற்பட்டால் மாத்திரமே அவருக்கான வாய்ப்புக்கள் கிடைக்கும் எனக் கருதப்பட்டது.

## டெஸ்ட் விக்கெட் காப்பாளராக ஏ.பி.டி. வில்லியர்ஸ்



(லண்டன்)

தென்னாபிரிக்க அணியின் நிரந்த டெஸ்ட் விக்கெட் காப்பாளர் மார்க் பௌச்சர் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுள்ள நிலையில் இங்கிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் ஏ.பி.டி.வில்லியர்ஸ் விக்கெட் காப்பாளராகச் செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விக்கெட் காப்பாளராக ஏற்கனவே செயற்படும் ஏ.பி.டி.வில்லியர்ஸ், தற்போது டெஸ்ட் போட்டிகளிலும் விக்கெட் காப்பாளராக ஈடுபடவுள்ளார். மார்க் பௌச்சரின் ஓய்வை அடுத்து தென்னாபிரிக்க அணி தமி சொலேகிலேயை மாற்று விக்கெட் காப்பாளராக இங்கிலாந்துக்கு அழைத்த போதிலும், முதலாவது போட்டியில் ஏ.பி.டி.வில்லியர்ஸே விக்கெட் காப்பில் ஈடுபடுவதற்கான அத்தனை வாய்ப்புக்களும் உள்ளன.

என்னவாறான அணியுடன் களமிறங்குவது என்பது குறித்து இன்னமும் கலந்துரையாடி வருவதாகத் தெரிவித்த ஏ.பி.டி.வில்லியர்ஸ், அடுத்த கட்டம் குறித்துத் தான் மிகுந்த ஆவலாக உள்ளதாகத் தெரிவித்தார். அணிக்குத் தேவையான முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், தான் விக்கெட் காப்பில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் அனேகமாக உள்ளதாகத் தெரிவித்தார். விக்கெட் காப்பில் அண்மைக்காலமாக அதிக கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவித்த ஏ.பி.டி.வில்லியர்ஸ், தனது விக்கெட் காப்பு முன்னேறி வருவதாக உணர்வதாகத் தெரிவித்தார். தான் ஐ.பி.எல். போட்டிகளிலும், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், ருவென்ரி -20 சர்வதேசப் போட்டிகளிலும் ஏற்கனவே விக்கெட் காப்பில் ஈடுபட்டதையும் அவர் ஞாபகமூட்டினார். உலகின் முதற்தர அணியைத் தீர்மானிக்கவுள்ள தொடராக அமையவுள்ள தென்னாபிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான தொடருக்காக இங்கிலாந்து சென்ற தென்னாபிரிக்க அணியின் விக்கெட் காப்பாளர் மார்க் பௌச்சர் தனது இறுதித் தொடரில் பங்குபற்றாமலேயே காயம் காரணமாக ஓய்வினை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய போட்டிக்கு தகுதிபெற்ற இலகடிப்பிட்டி வீரர்கள் கௌரவிப்பு



(மன்னார்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழாவின்போது சிறப்பாக செயற்பட்ட தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்ற மன்னார் இலகடிப்பிட்டி றோ.க.த.க பாடசாலை வீர, வீராங்கனைகள் பாடசாலை சமூகத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று முடிந்த 2012ஆம் ஆண்டிற்கான வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி தேசிய மட்ட போட்டிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 9ஆம் காலை 9.00 மணியளவில் பாடசாலை பிரதி அதிபர் எமிலியானுஸ் பிள்ளை அவர்களுடைய தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினராக மன்னார் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் யூலியஸ் கிளிற்றஸ் அவர்கள் கலந்து சிறப்பித்தார். முதலில் மாணவர்களுக்கு ஆசிவேண்டியும் இறைவனுக்கு நன்றி செலுத்தும்முகமாகவும் உயிலங்குளம் பங்குத்தந்தை அருட்பணி பிரான்சிஸ் மெரிடிகோல் அவர்களால் பாடசாலை பிரதான மண்டபத்தில் அமைக்கப்பட்ட பிரத்தியேக வழிபாட்டிடத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

வழிபாடுகளின் பின்னர் பாட-சாலை அதிபர் யு.ஞ.து.பெர்ணான்டோ அவர்கள் தம்துரையில் மாணவர்கள் கல்விக்கு கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை இணைப் பாடவிதான செயற்பாடுகளுக்கும் கொடுக்க வேண்டுமெனவும் இது மாணவர்களது வேலைவாய்ப்புக்களுக்கும் உயர் கல்விக்கும் சிறப்பான சந்தர்ப்பங்களை வழங்கும் எனவும் சுட்டிக்காட்டி தேசிய மட்ட போட்டிகளுக்குதெரிவு செய்யப்பட்ட இம் மாணவர்களைப் போல் ஏனைய மாணவர்களும் வரும் காலங்களில் பிரகாசிக்க வேண்டுமெனவும் இவ் வெற்றிகளுக்கு பெருமளவில் பங்காற்றிய பாடசாலையின் பிரத்தியேகப் பயிற்றுவிப்பாளரும் மன்னார் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தருமான யூலியஸ் கிளிற்றஸ் அவர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்ந்த நன்றிகளையும் தெரிவித்தார்.

இறுதியில் பரிசுப்பொருட்கள்,வெற்றிக் கிண்ணங்கள் என்பன மாணவர் களுக்கு வழங்கப்பட்டு, பிரதி அதிபர் எமிலியானுஸ்பிள்ளை அவர்களுடைய நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

இந் நிகழ்வில் மாணவர்களின் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பாக். முன்மொழிவு

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் உறவுகளைமீளவும் கட்டியெழுப்பும் முகமாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முயற்சிகளில் அடுத்த கட்டமாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை 3 வகையான முன்மொழிவுகளை இந்தியக் கிரிக்கெட் சபையிடம் முன்வைத்துள்ளது. இந்தத் தகவலை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷாகா அஷ்ரப் உறுதிப்படுத்தினார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தகவலின் படி இந்திய அணி - பாகிஸ்தானுக்குப் பயணம் செய்வது, இந்திய அணி - ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற நடுநிலையான நாட்டிற்குச் சென்று பங்குபெறுவது, இந்தியாவிற்குப் பாகிஸ்தான் அணி செல்வது ஆகிய 3 வகையான முன்மாழிவுகளை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முன்வைத்துள்ளது.

இது அடிப்படையான முன்மொழிவு மாத்திரமே எனத் தெரிவித்த ஷாகா அஷ்ரப், இந்தியக் கிரிக்கெட் சபை இதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு முன்வருமாயின் இலாபங்களைப் பகிருதல் உட்பட்ட ஏனைய விடயங்களை ஆராயத் தயாராகவுள்ளதாகத் தெரிவித்தார்.

இத்தொடரை இந்தியாவின்தொடராக நடாத்த விரும்பினால் இந்தியாவிற்குச் சென்று போட்டிகளில் பங்குபற்றபாகிஸ்தான் கிரிக்கெட் அணி தயாராகவுள்ளதாகத் தெரிவித்த அவர், இத்தொடரை பாகிஸ்தானின் தொடராக பாகிஸ்தானுக்கு வழங்கினால் அந்தத்தொடரைஏற்பாடு செய்வதற்குப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தயாராகவுள்ளதாகத் தெரிவித்தார்.

# மகாஜனாவை 10 விக்கெட்டால் வெற்றிகொண்டது சென்.ஜோன்ஸ்

(யூாழ்ப்பாணம்)

மகாஜனாக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 15வயதுப்பிரிவிற்கான துடுப்பாட்டப்போட்டி மகாஜனாக்கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ்கல்லூரிக்குமிடையில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மகாஜனாக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதற்கமைய துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 27 பந்துபரிமாற்றங்களில் சகல இலக்குகளையுமிழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் லக்ஸ்மன் 34பந்துகளில் 30ஓட்டங்களையும்,முரளிதரன் 22பந்துகளில் 11ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 12 ஓட்டங்கள் பெறப்பட்டது. பந்துவீச்சில் செலுமியன் 9 பந்துப்பரிமாற்றங்களை வீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும், நிலோசன் 8 பந்துப்பரிமாற்றங்களை வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் பிரவின்சன் 7 பந்துப்பரிமாற்றங்களை வீசி 25 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் சாய்த்தனர்.

93 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ்கல்லூரி 17 பந்துப் பரிமாற்றங்களில் விக்கெட் இழப்பின்றி 93 ஓட்டங்களைப்பெற்று 10 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. ஜெனிபிளமிங் ஆட்டமிழக்காமல் 49 பந்துகளில் 35 ஓட்டங்களையும் பிரசாந்த் ஆட்டமிழக்காமல் 47 பந்துகளில் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

# கற்சிலைமடு அ.த.க.விலிருந்து 6 பேர் தேசிய போட்டிக்குத் தகுதி




(கற்சிலைமடு)

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான் கோட்ட கற்சிலைமடு அ.த.க. பாடசாலையிலிருந்து நடந்து முடிந்த வடமாகாண போட்டிகளிலிருந்து ஆறு போட்டியாளர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

இதன் மூலம் துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து தேசிய மட்டப் போட்டிக்கு அதிக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்ட பெருமையினை கற்சிலைமடு அ.த.க. பாடசாலை பெற்றுக்கொண்டுள்ளது.

21 வயது ஆண்கள் பிரிவில் இப் பாடசாலையின் தே. தேவராஜ் 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாமிடத்தையும் 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் நான்காம் இடத்தினையும் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

பா. பிரசாந் அரை மரதன் ஓட்டப் போட்டியில் மூன்றாவது இடத்தினையும் 17 வயதுப் பிரிவு 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாமிடத்தையும் பிடித்து தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

19 வயது பெண்கள் பிரவில் பு. சுகன்ஜா முப்பாய்ச்சல் போட்டியில் மூன்றாமிடத்தையும், நீளம் பாய்தல் போட்டியில் நான்காமிடத்தையும்பிடித்து தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

கடந்தகால போரினால் மிகவும்பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும்இம்மாணவர்கள் உரிய வசதிகள் இன்றியும் தம் அயராத பயிற்சியின் மூலம் இத்தகையதொரு நிலைக்கு வந்ததையிட்டு இவர்களை கற்சிலைமடு அ.த.க. பாட-சாலை சமூகம் பாராட்டி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய மட்டப் போட்டியிலும் இவர்கள் சாதித்து பாடசாலைக்கு பெருமை சேர்க்க வேண்டும் எனவும் அவர்கள் பாராட்டியுள்ளனர். (42)

# விசேட தேவையுடையோருக்கான வடமாகாண மட்ட விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

விசேட தேவையுடைய வீர, வீராங்கனைகளுக்கான வடமாகாண மட்ட விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளதாக மாகாண கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்போட்டியில் பங்குபற்றும் யாழ். மாவட்ட வலயங்களைச் சேர்ந்தவர்கள் தவிர்ந்த ஏனைய வலயங்களைச் சேர்ந்த மேற்படி விழாவிற்கு முதல் நாளே பிற்பகல் 4.00 மணிக்கு முன் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அறிவிக்கப்படும் பாடசாலைகளுக்கு சமூகம் கொடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளிமாவட்டங்களிலிருந்து தங்குவர்களுக்குத் தேவையான உணவு, தேநீர், சிற்றுண்டிகளை மாகாண கல்வித் திணைக்களமே வழங்கவுள்ளது.

மேற்படி விழாவிற்கு வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு வலயத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட விசேட தேவையுடைய போட்டியாளர்களையும், ஏனைய விசேட தேவையுடைய மாணவர்களையும் விசேட கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்கள், பெற்றோர்கள், விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர், முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், முறைசாராக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ஆகியோரை இதில் பங்குபற்றி ஒத்துழைப்பு வழங்குவதற்கேற்ற நடவடிக்கைகளினை மேற்கொள்ளுமாறு வடமாகாணத்தைச் சேர்ந்த சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்காக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் கேட்டுள்ளார். (42)



சிங்கர் நிறுவன அனுசரணையுடன் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்டத்தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்த ஆவரங்கால் இந்து இளைஞர் அணி விருந்தினர்களுடன் நிற்பதைக் காணலாம். கைதடிச் சந்தியில் அமைந்துள்ள மின்னொளி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி, ஆவரங்கால் இந்து இளைஞர் அணிகள் மோதின. இதில் ஆவரங்கால் மத்தி அணி 3-1 என்ற செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (93)

# கிழக்கு முதலமைச்சர் தெரிவை அரசிடமே விடுகிறது கூட்டமைப்பு!

- அப்துல் ரசாக் கட்டுரையிலிருந்து.



கடந்த கிழக்கு மாகாண தேர்தலில் முஸ்லிம் முதலமைச்சராக ஹிஸ்புல்லாவே வருவார் என்றே முழு உலகமும் எதிர்பாத்தது. ஆனால் அரசாங்கம் பிள்ளையானையே பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் நியமித்தது. கிழக்கைப் பொறுத்தவரை மற்றைய தமிழ் முஸ்லிம் இனத்தைப் போல் சிங்களவர்களும் 33 வீதமே வாழ்கின்றனர். அரசாங்கம் நினைத்திருந்தால் ஒரு சிங்களவரை தானும் முதலமைச்சராக நியமித்திருக்கக் கூடும்.

ஆனால் அன்றைய சூழலில் சர்வதேச அரசியல் சதுரங்க மேடையில் காய்களை மிக லாவகமாக நகர்த்தும் நோக்குடன் சந்திரகாந்தன் என்னும் பிள்ளையானுக்கே அப்பதவியை அரசாங்கம் வழங்கியது.

இப்போது கேள்வி என்னவென்றால், இவ்வாறாக அரசாங்கம் சிந்தித்துச் செயலாற்றி வருவது போல் இந்தக் கிழக்குத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் காய்களை ஏன் நகர்த்த முடியாது என்பதுதான்.

தன்னால் முதலமைச்சராக வரக்கூடிய சாத்தியங்களும் கணிப்பீடுகளும் இல்லை எனும் போது, ஜயகோ என்று பின் வாங்காமல் அரசாங்கத்தால் மட்டுமல்ல, தன்னாலும் ஒரு முதலமைச்சரை அரங்கேற்ற முடியும் என்று அரசாங்கத்துக்கு பாடம் புகட்டுவதற்கான வழிகள் அதன் முன்னே விரிந்து கிடந்த போதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவற்றையெல்லாம் கண்டு கொள்ளாமல் அரசியல் வியூகம் ஒன்றை எடுக்கத் தவறிக் கொண்டிருப்பதன் மர்மம் என்ன என்பது தெரியவில்லை.

அரசாங்க சுதந்திரக் கூட்டணிக்குள் பிள்ளையான் அணி எனும் தமிழ் அணி உட்பட, சிங்கள முஸ்லிம் அணிகளும் கிழக்குத் தேர்தலுக்கு முகம் கொடுக்கும் இந்நிலையில் தன்னந்தனியே ஒரு தமிழ் அணியாக இருந்து கொண்டு தமிழ் முதலமைச்சரைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற கணிப்பு, தமிழ் கூட்டமைப்பின் ஒரு எல்லை கடந்த தப்புக் கணக்காகும் என்றே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றார்கள். இன்றைய நாள் வரை முஸ்லிம் அணிகள் எல்லாம் அரசுடன் ஒரு குடையில் சாய்ந்தபின்பும், முதலமைச்சர் ஒருவரை தமிழ் கூட்டணி தனது கட்சியை மட்டும் மையமாக வைத்து வரைபு படுத்த முனைவது "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது" போல் அமையும் என்றே பலரும் கருதுகின்றனர்.

அரசாங்கம் தான் விரும்புகின்ற முஸ்லிம் ஒருவரை அல்லது தமிழர் ஒருவரை நியமிக்கின்ற அரசியல் அதிகாரத்தை கையில் எடுத்துக் கொண்டு கிழக்கில் ஆட்சியமைக்க முற்படும் நிலையில் அதே அரசியல் அதிகாரத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது கையில் எடுத்துக் கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் கோருகின்ற முதலமைச்சர் பதவியை தானே நியமித்து கிழக்கின் ஆட்சியாளன் தானே என்று சர்வதேசத்துக்கு எடுத்தியம்பி தன்து இருப்பை ஏன் கிழக்கில் தக்க வைத்துக் கொள்ளமுடியாதென பலரும் அபிப்பிராயப் படுகின்றனர்.

இம்முறை, எவ்வாறு கூட்டிக் கழித்துப் பார்த்தாலும் அரசாங்கம் முஸ்லிம் காங்கிரசுக்கே முதலமைச்சர் பதவியைத் தாரை வார்த்துக் கொடுக்கவேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரசின் ஒருவர் முதலமைச்சராக நியமிக்கப் படவேண்டியது என்பது அரசாங்கத்தின் தலை எழுத்தாகும். இந்தத் தலை எழுத்தை தானே முன்னின்று எழுதி, கிழக்கின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான அரசியல் "வியூகம்" எடுக்கும் தன்மையை தமிழ் கூட்டமைப்பு இழந்து கொண்டிருக்கின்றது என்றே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.



திருவானைக்கோவில். அங்கு ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம். ஸ்ரீரங்கம் உயர்நிலைப்பள்ளியின் பராமரிப்பில் உள்ளது. அங்கு "காலேஜ் குமாரி" என்று ஒரு நாடகம் நான் எழுதி, பள்ளி மாணவர்களை வைத்துப் போட்டேன்.

அதன் ஒத்திகையை மாலை நேரங்களில் பார்க்க இரு பையன்கள் வருவார்கள். இருவரும் 20ஆவது வயதை நெருங்கிக் கொண்டு

# பசியின் நிறம்

வள்ளலார் இருவேளைகள் மட்டுமே உ… ஆரம்பித்து, பின் ஒருவேளை என தொடர்ந்… என்றாவது ஒருநாள் சில கவளங்கள் மட்டு… சாப்பிட்டு, அதையும் மறந்து வெந்நீரில் நாட்… சர்க்கரையைக் கலந்த கரைசலை அருந்தி … யும் மறுத்து உணவை அறவே நீத்த தவசியா… விளங்கினார் என்ற தகவல் நமக்கு வயிற்றை… மல்ல, இதயத்தையும் புரட்டிப்போடும் விஷய…

யாரும் வெல்ல இயலாத பசியை வென்று … வள்ளலார்தான் பசிக்கொடுமையைப் பற்றி அதி… சிந்தித்த ஞானி ஆவார். "…கிலேயே …ன… மான விஷயம் உணவுதான். முறையாக உ… இரசித்து உண்பவர்கள் தியானத்தின் மூலம் … பிரம்மனை உணர்ந்தவர்களுக்கு ஒப்பாவார்க… உணவைப் பற்றி நைத்திய உபநிடதம் கூறுகி…

வேத காலத்தில் இருந்து இன்று வரை ப… நீக்குதலை சமூகக் கடமையாகக் கருதியவர்… புத்தரும் வள்ளலாரும் ஆவர். பசி நீக்குதலை… ஆன்மீகத்தின் மிக முக்கிய அம்சமாகக் கொண்ட ஒரு சிந்தனை மரபை முதன் முதல… சாத்தியமாக்கியவர் அருட்பிரகாச வள்ளலார்.

"ஆங்கிலம் பேசுவோர் சர்வதேசவாதிகள்! தமிழ் பேசுவோர் இனவாதிகள்!!" இவ்வாறு கூறிக்கொள்ளும், அல்லது நம்பிக் கொண்டிருக்கும் நடுத்தர வர்க்கப் பிரிவொன்று தற்போது எம்மத்தியில் காணப்படுகின்றது.

இலங்கை 500 வருட காலமாக அந்நியர் ஆட்சியின்



கீழ் இருந்ததன் விளைவு. இன்று இலங்கையின் மேல்தட்டு வர்க்கத்தினர் மட்டுமல்ல, அடித்தட்டு வர்க்கத்தினர் கூட காலனிய மனவுலகில் வாழ்கின்றனர். அல்லது அப்படி வளர்க்கப்படுகின்றனர்.

ஆங்கிலேயருக்கு முன்னர் இலங்கையை ஆண்ட போர்த்துக்கேயரையும், ஒல்லாந்தரையும் விட ஆங்கிலேயர் வந்த காலத்தில், உலகில் முதலாளித்துவ பொருளாதாரம் வளர்ந்து கொண்டிருந்தது. அதற்கு ஒரு மத்தியதர வர்க்கம் தேவைப்பட்டது. ஒரு சாம்ராஜ்யம் நிலைத்து நிற்க வேண்டுமானால், உள்ளூரில் ஒரு அடிவருடிக் கும்பல் உருவாக வேண்டும்.

# இவர்கள்...



☞ எந்த விருந்துக்குச் சென்றாலும் இருக்கையிலேயே அசந்து தூங்குவது திகில்பட இயக்குநர் அல்பிரட் ஹிட்ச்கொக்கின் வழக்கம். விருந்தொன்றில் பலமணி நேரம் தூங்கிவிட்ட ஹிட்ச்கொக்கை அவரது மனைவி எழுப்பி, "நேரமாகிவிட்டது. போகலாம் வாருங்கள்" என்றழைத்தார். கண் விழித்த ஹிட்ச்கொக் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டுச் சொன்னாராம், "இப்போதுதான் ஒரு மணி ஆகிறது. இப்போது கிளம்பினால் பார்ட்டி பிடிக்கவில்லை போலிருக்கிறது, அதனால்தான் கிளம்புகிறார்கள் என்று தவறாக அல்லவா நினைப்பார்கள்" என்றாராம்.



☞ பிரபல மர்மநாவல் எழுத்தாளர் அகதா கிரிஸ்டி (1896 - 1976) யின் முழுப்பெயர் தேம் அகதா மேரி கிளாரிஸ் கிரிஸ்டி. இவர் நாவல்களை எங்கு அமர்ந்து எழுதுவார் தெரியுமா? அப்பிளை சாப்பிட்டபடியே குளியலறைத் தொட்டியில் அமர்ந்து எழுதுவார். முதலாம் உலகப்போரைப் பற்றி தீவிரமாக ஆய்வு செய்த இவர் மருத்துவமனை பார்மசி ஒன்றில் வேலை பார்த்தபோது விஷங்கள் பற்றிய தகவல்கள் அனைத்தும் தெரிந்து வைத்திருந்தார். அது அவர் நாவல்களுக்கு உதவியது.

☞ 1857 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த 46 வயது ஹென்றி நெஸ்லே, பிறந்து ஓராண்டிலேயே அதிகமான குழந்தைகள் இறப்பதற்கு பெரும்பாலான பெண்கள் தாய்ப்பால் கொடுக்க மறுப்பதே காரணமென்று கண்டறிந்தார். அப்போதெல்லாம் குழந்தை உணவை டாக்டர்கள்தான் விற்பனை செய்வார்கள்.



முதன்முறையாக நெஸ்லே என்பவர்தான் தயாரித்த "கொன்செனட் ரேட்டர்" பாலை நேரடியாக மக்களுக்கு விற்பனை செய்யத் தொடங்கினார். 1875 ஆம் ஆண்டில் குழந்தைகள் உணவை விற்பனை செய்யத் தொடங்கிய நெஸ்லே 1890ஆம் ஆண்டில் இறக்கும் வரை வேறு எந்தப் பொருளையும் தயாரிக்கவில்லை. ஐரோப்பாவிலேயே முதன்முறையாக "பால்மா" தயாரித்ததோடு சொக்லேற்றையும் தயாரித்து வீட்டுப் பொருள்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது அவரது நிறுவனம்!



☞ "விலங்குப் பண்ணை" மற்றும் "1984" போன்ற படைப்புகளை எழுதிய ஜோர்ஜ் ஆர்வெல் எழுத்தாளராவதற்கு முன்பு பொலிஸ் உத்தியோகத்தராக பணியாற்றியுள்ளார்.

☞ 1833-ஆம் ஆண்டு ஸ்டொக்ஹோம் நகரில் பிறந்த அல்பிரட் நோபல் சிறுவயதிலேயே ரஷ்யாவுக்குச் சென்றுவிட்டார். 16 வயது வரை வீட்டிலேயே ஆசிரியரை வைத்து கல்வி கற்ற நோபல், பின்னர் அவரது தந்தை நடத்தி வந்த இராணுவ ஆயுத உற்பத்திச் சாலையில் பணியில் சேர்ந்தார். 1850 ஆம் ஆண்டில் நைட்ரோ கிளிசரின் கண்டுபிடிக்கப்பட்டவுடன் அதை பயன்படுத்துவதில் நோபல் தீவிரமாக ஈடுபட்டார்.



தன்னுடைய சகோதரர் இமிலுடன் ஸ்வீடன் சென்ற நோபல் அங்கு வெடி பொருள் ஆய்வு பரிசோதனைக் கூடம் ஒன்றில் பணியில் அமர்ந்தார். 1864 ஆம் ஆண்டு அந்த பரிசோதனைக்கூடம் வெடித்துச் சிதறியதில் இமில் இறந்துபோனார். இந்த சம்பவத்திற்கு பின்னரும் வெடிபொருள் ஆராய்ச்சியில் நோபல் தொடர்ந்து ஈடுபட்டு 1867 ஆம் ஆண்டில் "டைனமைற்"றைக் கண்டுபிடித்தார். இதனால் பிரபலமடைந்த நோபல் டைனமைற்றைக் கண்டுபிடித்ததற்கான பாராட்டைப் பெறுவதைவிட தன்னிடமிருந்த பணத்தை சமூக நலனுக்காக பயன்படும் கண்டுபிடிப்புகளை நிகழ்த்தும், விஞ்ஞானிகளுக்கும், உலக சமாதானத்திற்காக பாடுபடுபவர்களுக்கும் பரிசு வழங்குவதற்காக நோபல் பவுண்டேஷனை தொடங்கினார்.

## ஏழை மகாராஜா

ராஜஸ்தானில் பஞ்சமும் பட்டினியும் பரவியிருந்த 1929 ஆம் ஆண்டு மக்களுக்கு வேலை கொடுப்பதற்காக ஜோத்பூர் மகாராஜா உமையத்சிங் ஓர் அரண்மனையைக் கட்டினார். "உமையத் பவன்" என்ற அந்த அரண்மனையை கட்டி முடிக்க 13 வருடங்கள் பிடித்தன. ஆனால் அதைக் கட்டி முடிக்கும் முன்பே வேட்டைக்குப் போன உமையத்சிங் ஒரு விபத்தில் காலமானார். பின்னர் அவருடைய மகன் சுமேர்சிங் ஒரு விமான விபத்தில் காலமானார். அவருடைய மகன் கஜ்ஜசிங் ஆட்சியேற்றபோது, இந்தியா சுதந்திரமடைந்து நேரு தலைமையிலான அரசாங்கம், முன்னாள் அரச வம்சத்தினருக்கான மானியங்களை நிறுத்தியது. ஆகவே, உமையத் பவனின் ஒரு பகுதியில் வசித்துக்கொண்டு மீதிப் பகுதியை ஹோட்டலாக மாற்றிவிட்டார் கஜ்ஜசிங்.



வில். அங்கு
கூடம். ஸ்ரீரங்கம்
பராமரிப்பில்
லேஜ் குமாரி"
ான் எழுதி, பள்ளி
துப் போட்டேன்.
ப மாலை
இரு பையன்கள்
ம் 20ஆவது
காண்டு

# வேடிக்கை பார்த்த கணேசன்

இருந்தவர்கள். சற்று முன்பின் இருக்கலாம்.

குடுமி வைத்துக்கொண்டு செக்கச் செவேலென்றிருந்த பையனை - நாடகத்தில் பெண் வேஷம் போடக் கேட்டேன். அவன் வேத பாடசாலையில் படித்துக் கொண்டிருந்ததால் வேஷம் கட்ட ஒப்பவில்லை.

இன்னோர் இளைஞன் நாடக ஒத்திகையை வேடிக்கை பார்க்க வந்தவன். பக்கத்தில் உள்ள பஸ் டிப்போவில் பயிற்சி மெக்கானிக்காகப் பணியாற்றிக் கொண்டிருப்பவன். ஏற்கெனவே "பாய்ஸ் கம்பெனியில்" இருந்து பழக்கப்பட்டவன். அவனுக்கு நடிக்கும் ஆற்றலும் ஆர்வமும் இருந்தும் பள்ளி மாணவனாக இல்லாததால் நான் சொன்ன பெண் வேஷத்தைப் போட இயலவில்லை!

நாடகத்தில் பெண் வேடம் போட மறுத்த வேத பாட-சாலை மாணவன்தான் - காஞ்சி மடாதிபதி ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்!

நாடகத்தை வேடிக்கை பார்த்த பஸ் டிப்போ பயிற்சி மெக்கானிக்காகப் பணி புரிந்த பையன் - கணேசமூர்த்தி - சிவாஜி கணேசன் என்றால் உங்களுக்கு நன்றாகப் புரியும்!

("நினைவு நாடாக்கள்" என்ற நூலில் கவிஞர் வாலி)

# நிறம் வெள்ளை




வளைகள் மட்டுமே உண்ண
வளை என தொடர்ந்து,
ல கவளங்கள் மட்டுமே
ந்து வெந்நீரில் நாட்டுச்
கரைசலை அருந்தி அதை
அறவே நீத்த தவசியாக
வல் நமக்கு வயிற்றை மட்டு
ரட்டிப் போடும் விஷயமாகும்.
ாத பசியை வென்று காட்டிய
ாடுமையைப் பற்றி அதிகமாகச்
'ஆங்கிலேயே ன்னத
ான். முறையாக உணவை
தியானத்தின் மூலம்
களுக்கு ஒப்பாவார்கள்' என
யெ உபநிடதம் கூறுகின்றது.
ந்து இன்று வரை பசி
மையாகக் கருதியவர்கள்
ஆவர். பசி நீக்குதலை
யெ அம்சமாகக்
மரபை முதன் முதலில்
ட்பிரகாச வள்ளலார்.

கலாசாலை, யோக சாலை, பாகசாலை, வைத்திய சாலை என்பவை மட்டுமே சமயவாதிகளால் ஒரு காலகட்டத்தில் யோசிக்கப்பட்டது.

தருமசாலை என்ற வடிவில் கடந்த 130 ஆண்டுகளாக ஒருமுறை கூட தடைபடாமல் நண்பகல், இரவு இரண்டு வேளையும் பசிக்கான உணவு மற்றும் கேழ்வரகு கூழ் நாள் முழுவதும் இன்று வரை அணையா அடுப்புடன் வடலூரில் வழங்கப்படுகின்றன. இதை நோக்கும்போது வள்ளலார் பசித்தவர்களுக்கு முதலில் சோறிட வேண்டும் பின்னரே வாழ்வியல் கோட்பாடுகளைப் போதிக்க வேண்டும் என்பதைக் கடமையாக அல்ல, தவமாகக் கொண்டிருந்தார் என்பது புரிகின்றது.

('பசியின் நிறம் வெள்ளை' என்ற நூலில் எஸ்.எஸ்.பொன்முடி)

# சிட்டுக்குருவிகளின் பாடல்



**வா**ழ்வுக்கு நெருக்கமாக நின்று கதை சொல்வதிலும், காட்சிப்படுத்துவதிலும் ஈரானியப் படங்களுக்கு தனியிடமுண்டு. அதிலும் குறிப்பாக மஜீத் மஜிதியின் படங்கள் எளிமையாக படம்பிடிக்கப்பட்ட வாழ்வின் அற்புத கணங்கள். குறைந்த கதைமாந்தர்களுடன் அவரது படங்கள் நமது மனசில் சட்டென்று ஒட்டிக்கொள்பவை. மஜிதியின் "சில்ட்ரன் ஒப் ஹெவன்" தலையில் தூக்கி வைத்துக் கொண்டாட வேண்டிய திரைக்காவியம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க முடியாது. ஒவ்வொரு பெற்றோரும் பார்த்திருக்கவேண்டிய குழந்தைகளின் படம் அது. அரசியல் மற்றும் பிற காரணங்களுக்காக பெரும்பாலான ஈரானியப் படங்கள் குழந்தைகளையும் இளம் சிறுவர் சிறுமியரைப் பற்றியுமே பேசுகின்றன. அந்த வரிசையில் மஜிதியின் "தி சோங் ஒப் ஸ்பே-ரோஸ்" (சிட்டுக்குருவிகளின் பாடல்) படமும் குழந்தைகள் மற்றும் சாமானியர்களின் வாழ்வைப் பற்றியே பேசுகிறது. ஒற்றை ஜோடி காலணிக்காக அல்லாடும் அண்ணன் - தங்கையின் பெரும் போராட்டத்தை "சில்ட்ரன் ஒப் ஹெவன்" படத்தில் காட்டிய மஜிதி, இதில் தங்க மீன் வளர்க்க ஆசைப்படும் சிறுவர்களை காட்சிப்படுத்தியுள்ளார். தீக்கோழி பண்ணையில் வேலை பார்க்கும் கரீம்(அப்பா) கண்காணிப்பில் இருந்த தீக்கோழி ஒன்று தப்பித்து போய்விட, இருந்த வேலையும் போய் அருகிலுள்ள நகரம் ஒன்றில் வாடகைக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டும் பணி கிடைக்கிறது. அந்த வேலையினூடே




தனது மகளின் பழுதடைந்த காதொலி கருவியை சரி செய்ய அவர் எடுக்கும் முயற்சி, நகரத்தில் கரீம் சந்திக்கும் மனிதர்கள், வீட்டின் அருகேயுள்ள பாழடைந்த கிணற்றில் மீன் வளர்க்க அந்த சிறுவர்கள் செய்யும் சாகசம், கரீமுக்கு ஏற்படும் திடீர் விபத்து, என எளிமையான காட்சிகளுடன் செல்லும் படம், ஒவ்வொரு காட்சியிலும் நமக்கு தருவது இந்த வாழ்வின் மீதான நம்பிக்கையைத்தான். படம் முடிந்து எழும் கணத்தில் கரீமைப்போல வாழ்வின் கணங்களை நம்மால் எதிர்கொள்ள முடியவிலையே என்ற ஏக்கம்தான் ஏற்படுகிறது. பண்ணையிலிருந்து தீக்கோழியால் எளிதில் தப்பித்துவிட முடிகிறது... ஆனால் இந்த வாழ்வின் சட்டகங்களில் இருந்து தம்மால் தப்ப முடியாது போனாலும், தனது குடும்பம், குழந்தைகளின் சுகதுக்கங்களில் கரைந்து போகிற கரீமின் மீது பொறாமைதான் ஏற்படுகிறது. பூந்தொட்டிகளுக்கு அடியில் மறைத்துவைத்து தாங்கள் கொண்டுவருகிற மீன்களை காப்பாற்ற முயன்று, கடைசியில் தொட்டிஉடைந்து, மீன்கள் சிதறி, ஓடும் வாய்க்காலில் மீன்களை தள்ளிவிடும் சிறுவர்களின் தவிப்பில் பார்வையாளனும் தவித்துப் போவதை தவிர்க்க முடியாது. யாருமற்ற வனாந்தரத்தில் தனித்து விடப்பட்டாலும் சிட்டுக்குருவிகளின் பாடல் ஒலித்துக்கொண்டுதான் இருக்கும். அதை போன்றதே வாழ்வும். ஒரு முறையேனும் சிட்டுக்குருவிகளின் பாடலை கேளுங்கள்... பாருங்கள்.



# ஆங்கிலத்தில் இருந்து விடுபட்டு தமிழ் முன்னிலை பெறுமா?



ஏகாதிபத்திய கல்வியாளர்கள் சாம்ராஜ்யத்தின் உள்ளூர் முகவர்களாக ஆட்சி அதிகாரத்தை நிர்வகிப்பார்கள். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் பெரும் சாம்ராஜ்யங்களை கட்டி ஆண்ட எகிப்தியர்களிடமும், ரோமர்களிடமும் "ஒரு சாம்ராஜ்யத்தை நிர்வகிப்பது எப்படி?" என்ற பாடத்தை ஆங்கிலேயர்கள் கச்சிதமாக கற்றுக்கொண்டனர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் கிறிஸ்தவர்களாக இருந்தால் சலுகைகள் கிடைத்தன. ஆட்சியாளரின் ஆங்கிலேய கல்வியை கற்றவர்கள் அரச நிர்வாகத்தில் பணியாற்றுவது மிக எளிதாக இருந்தது.

இதனாலேயே பலரும் ஆங்கிலம் கற்றார்கள். இன்று ஆங்கில மோகம் கொண்ட தலைமுறைக்கு மேற்குறிப்பிட்ட சரித்திரம் தெரியாது. தெரிந்து கொள்ள விருப்பமும் இல்லை. அவர்களது உலக மானது, கடல் கடந்த தொழில் வாய்ப்பை எதிர்நோக்கும் அமெரிக்கா, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளே. தப்பித்தவறி பிரான்ஸ் போன்ற நாடுகளுக்குள் புகுந்து விட்டால், இந்த மக்கள் ஏன் ஆங்கிலம் பேசுகிறார்கள் இல்லை என்று நொந்து கொள்வார்கள். அதே நேரம் ஆங்கிலேயர் தம் நாட்டில் வேறு மொழி பேசப்படாததேன் என்று கேட்க மாட்டார்கள். சுருக்கமாக சொன்னால், எமது "கறுப்பு-ஆங்கிலேயர்கள்", "வெள்ளை-ஆங்கிலேயரை" விட ஒரு படி மேலே போய் விட்டனர்.

நடுத்தர வர்க்க மக்களில் பலருக்கு தம்மைப் போன்றோர் மட்டுமே உலகில் இருப்பதாக எண்ணம் இருக்கும். அதற்கு காரணம் கலாசாரம் அவர்கள் சார்ந்ததாக இருப்பது தான். பல படிமுறைப்பட்ட சமூகத்தில், அந்தஸ்து என்பது பொருளா-தாரம் சார்ந்ததாக இருக்கும். முதலாளித்துவ கல்விமுறை தமக்கு சேவை செய்பவர்களை உருவாக்குவதை நோக்கமாக கொண்டது. அதிலும் திறமை கொண்டவர்க்கு அள்ளி வழங்கும் தன்மை கொண்டது. சர்வதேச மூலதனத்திற்கு சேவகம் செய்ய ஆங்கிலம் கற்றவர்கள் அவசியம். இன்று அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் மூலதனம் குவிந்து கிடப்பதால், ஆங்கில வழிக் கல்வியின் மதிப்பு அதிகம்.

இலங்கையில் சுதந்திரத்திற்கு பின்னரும் ஆங்கிலமே பாடசாலைகளில் போதனா மொழியாக இருந்தது. ஐம்பதுகளில் சுதந்திரக்கட்சியை ஸ்தாபித்து பிரதமரான பண்டாரநாயக்க வந்த பின்னரே மாபெரும் சமூக - கலாசார மாற்றம் ஏற்பட்டது. சிங்களப் பகுதிகளில் சிங்களமும், தமிழ் பகுதிகளில் தமிழும் போதனா மொழியாகியது.

பண்டாரநாயக்கவை ஒரு சிங்கள இனவாதியாக பார்க்கும் தமிழர்கள், தமது பிள்ளைகள் தமிழ் கற்க காரணம் யார் என்று சொல்வதில்லை. அதேநேரம் அவரை ஒரு முற்போக்கு வாதியாக பார்க்கும் சிங்களவர்கள் இன முரண்பாடுகளின் தோற்றத்தை கண்டுகொள்வதில்லை.

இங்குள்ள "கறுப்பு - ஆங்கிலேயர்கள்", எப்போதும் ஐரோப்பிய வெள்ளையின "தேவர்களின் வருகைக்காக" காத்திருக்கின்றனர். உலகமயமாக்கலும், மறுகாலனியாதிக்க அலையும், அவர்களுக்கு பொன்னான வாய்ப்பை வழங்கியது. புதிது புதிதாக கடை விரித்த பன்னாட்டு கம்பனிகளில் தமது ஆங்கிலப் புலமையை காட்டி ஒட்டிக் கொண்டனர். சர்வதேச மூலதனம் அள்ளி வழங்கிய, பணத்தை கண்டு மயங்கினர். இதனால் அவர்களது ஆங்கில மோகமும், அது தந்த செருக்கும் கூடியதே தவிரக் குறையவில்லை.

தற்போது தமிழ் ஊடகங்களின் மூலமாகவும் ஆங்கிலம் மறைமுகமாக திணிக்கப்படுகின்றது. தொலைக்காட்சியில் பேட்டியளிக்கும், திரையுலக பிரபலங்கள் போன்றோர், தமிழுடன் ஆங்கிலத்தையும் சமவிகிதத்தில் கலந்து பேசுவதை, தொலைக்காட்சிகள் அனுமதிக்கின்றன. மேலை நாடுகளில் அப்படி ஒருவர் பேட்டியளித்தால் அதனை உப தலைப்புகளுடன் தான் ஒளிபரப்புவார்கள். இதே போன்று எமது தமிழ்த் தொலைக்காட்சிகள் செய்யாத காரணம் என்ன? தமிழ் மட்டுமே தெரிந்த பாமரனும் ஆங்கிலம் கற்பதற்கான ஏக்கத்தை உருவாக்குவதைத் தவிர வேறு நோக்கம் இருப்பதாக தெரியவில்லை.

நவீன அரபு மொழியா-னது நிறைய ஆங்கில அல்லது பிரெஞ்ச் சொற்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அனைத்து அரபு நாடுகளிலும் காலனித்துவ ஆட்சியாளர் அறிமுகப்படுத்திய கல்விமுறையே இன்றுவரையில் போதிக்கப்படுகின்றது. ஆனால் அந்தந்த நாடுகளின் அரசியல், பொருளாதார ஆதிக்கத்திற்கு உட்பட்டு, கல்வியின் போதனா மொழி மாறுபடுகின்றது.

இங்கிலாந்தில் ஒரு காலத்தில் அரச

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| க | ங | ச | ஞ | ட | ண |
| த | ந | ப | ம | ய | ர |
| ல | வ | ழ | ள | ற | ன |
| ஜ | ஸ | ஷ | ஹ | க்ஷ | ஸ்ரீ |

குடும்பத்தினரும், பிரபுக்களும் பிரெஞ்சில் கல்வி கற்று பிரெஞ்சு மொழியிலேயே தமக்குள் உரையாடினர். ரஷ்யாவிலும் அது தான் நிலைமையாக இருந்தது. ஆளும் வர்க்கத்தால் கீழ்த்தரமாக பார்க்கப்பட்ட ஆங்கில, ரஷ்ய மொழிகள் கல்வியறிவற்ற சாதாரண குடிமக்களால் மட்டுமே பேசப்பட்டு வந்தது.

ஆனால் என்று இங்கிலாந்தில் ஆங்கில மொழியும், ரஷ்யாவில் ரஷ்ய மொழியும், போதனா மொழியாகியதோ, அப்போதிருந்து கல்வி கற்றோர் எண்ணிக்கை பெருகியது. இன்று அந்நாடுகளில் மொத்த சனத்தொகையும் எழுத, வாசிக்க தெரிந்து வைத்திருக்கின்றது என்றால், அதற்கு தாய்மொழிக் கல்வியே காரணம்.

நமது நாடுகளில், அந்நிய மொழியை புறக்கணித்து, தாய்மொழிக் கல்வி ஊக்குவிக்கப் படாததன் காரணம், வெளிநாட்டு கவர்ச்சிக்கு மயங்கும் மக்களும், சில அரசியல்வாதிகளும் தான். உலகவங்கி, ஐ.எம்.எப். போன்றவை தரும் கடனுக்கு கட்டுப்படுவதால், தனியார்மயம் என்ற பதாகையின் கீழ் முளைக்கும் ஆங்கிலவழிப் பாடசாலைகளை தடுக்க முடியாத நிலை.

அரசியல்வாதிகள் எவ்வழியோ, குடிமக்களும் அவ்வழியே மேற்குலக மோகத்திற்குள் மயங்கிக் கிடக்கின்றனர். தமிழ் செம்மொழி என்று பெருமை பேசுவதாலோ, தமிழ்கலாச் சாரத்தை இறுக்கிப் பாது காப்பதாலோ, அல்லது தமிழ் தேசியம் கோலோன்றுவதாலோ மட்டும் மாற்றங்களை கொண்டுவந்துவிட முடியாது.

ரஷ்யா கண்ட போல்ஷெவிக் புரட்சி, இங்கிலாந்து கண்ட தொழிற்புரட்சி, சிரியா கண்ட இராணுவப்புரட்சி இவையெல்லாம் பொருளா-தார சுதந்திரத்தை முதலில் உறுதிப்படுத்திக் கொண்டதால் தான் தமது தாய்மொழியை அரியணையில் அமர்த்த முடிந்தது. நாம் எவ்வாறு எமது தாய் மொழியை பாதுகாப்பது என்று சிந்தித்துக்கொள்ளுங்கள்.

கிரு - சிகரம்



# கணினி உலா

A.J.Nimalrajan

## ஜிமெயில் மூலம் அனுப்ப முடியாத பைல்கள்



ஜிமெயிலில் 25MB அளவுடைய பைல்களை அட்டாச் செய்து மற்றவர்களுக்கு அனுப்ப முடியும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் ஒரு சில பாதுகாப்பு பிரச்சினைகளுக்காக ஜிமெயில் நிறுவனம் சில பைல் வகைகளை தன் மூலம் அனுப்புவதை அனுமதிப்பதில்லை (உ-ம் .exe). சுமார் இந்த பைல்வகைகளை Zip செய்து அனுப்பினாலும் சரியாக கண்டறிந்து தடுத்து விடும்.

அது போன்று ஜிமெயில் மூலம் அனுப்ப முடியாத 29 பைல்வகைகளை கீழே பட்டியலிட்டுள்ளேன்.

| Extension | Type | Developer |
|---|---|---|
| .ADE | Access Project | Microsoft |
| .ADP | Access Project | Microsoft |
| .BAT | DOS batch file | Microsoft |
| .CHM | HTML Help file | Microsoft |
| .CMD | Windows Command | Microsoft |
| .COM | DOS Command File | N / A |
| .CPL | Windows Control Panel | Microsoft |
| .EXE | Windows Executable File | Microsoft |
| .HTA | HTML Application | Microsoft |
| .INS | Internet Settings File | Microsoft |
| .ISP | IIS Internet Provider settings | Microsoft |
| .JSE | JScript Encoded File | Microsoft |
| .LIB | Generic Data Library | N/A |
| .MDE | Compiled Access Add-in | Microsoft |
| .MSC | Console Snap-in Control | Microsoft |
| .MSP | Windows Installer Patch | Microsoft |
| .MST | Installer Setup Transform | Microsoft |
| .PIF | Program Information File | N/A |
| .SCR | Windows Screensaver | Microsoft |
| .SCT | Scitex Continuous Tone File | Scitex |
| .SHB | Windows Document Shortcut | Micrsoft |
| .SYS | Windows System File | Microsoft |
| .VB | VBScript File | Microsoft |
| .VBE | VBScript Encoded Script File | Microsoft |
| .VBS | VBScript File | Microsoft |
| .VXD | Virtual Device Driver | N/A |
| .WSC | Windows Script Component | Microsoft |
| .WSF | Windows Script File | Microsoft |
| .WSH | Windows Script Host Settings | Microsoft |

இந்த பட்டியலில் உள்ள ஒரு சில பைல்வகைகளை File type Rename செய்து அனுப்பினால் ஜிமெயில் மூலம் அனுப்ப முடியும். உதாரணமாக .exe என்பதை .jpg என்று மாற்றி மற்றவர்களுக்கு அனுப்ப முடியும். உங்களின் நண்பர் அதை பழைய படி .exe மாற்றி விட்டால் போதும் அந்த மென்பொருளை உபயோகித்து கொள்ளலாம்.

## பென்ட்ரைவ் ஐ இப்படியும் பயன்படுத்தலாம்

நமது கணினிகளில் சில வேலை போதுமான அளவு RAM காணப்படாமல் இருக்கலாம்.

மேலதிகமாக RAM ஒன்றை பொருத்துவதானால் அவற்றின் விலை மிக அதிகமானதாகவே இருக்கின்றன.

அதேவேளை பென்ட்ரைவ்களின் விலை குறைவானதே.முதலில் Windows Xp யில் எவ்வாறு பென்ட்ரைவ் ஒன்றை RAM ஆக பயன்படுத்தி கணினியின் performanceia அதிகரிக்கலாம்.

முதலில் பென்ரைவ் ஒன்றை USB port வழியாக பொருத்துங்கள்.

1. பின் My Computer இல் Right Click செய்து Properties தெரிவு செய்யுங்கள்.

2. அதிலுள்ள Advanced பகுதியில் Performance இல் உள்ள Settings பொத்தானை அழுத்துங்கள்.

3. அதன் பின் தோன்றும் வின்டோவில் Advanced பகுதியில் Change பொத்தானை Click செய்து பென்ட்ரைவ்வை தெரிவு செய்து கொள்ளுங்கள்.

4. பின் Custom Size என்பதை Click செய்து பயன்படுத்த வேண்டிய அளவை டைப் செய்யுங்கள். (Initial மற்றும் Max எனும் இரு பிரிவிலும் ஒரே அளவை வழங்குங்கள்).

5. பின்னர் Set செய்து உங்கள் கணினியை Restart செய்யுங்கள்.

அல்லது ReadyBoost அல்லது eboostr மென்பொருளை தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.

பின் பென்ட்ரைவ்வை பொருத்தி eboostr control pannel இல் பென்ட்ரைவ்வை add செய்து பயன்படுத்தலாம். (Restart செய்தல் கட்டாயமானதே)



6. Windows 7 யில் பென்ட்ரைவ் ஒன்றை RAM ஆக பயன்படுத்தலாம். உங்கள் கணினி 256GB RAM கொண்டிருந்தால் 8 ReadyBoost Devices களை ஒவ்வொன்றும் 32GB கொள்ளளவை உடைய பென்ட்ரைவ்களாக பயன்படுத்தலாம். எனவே Windows 7 இல் மொத்தமாக 256GB RAM வரைக்கும் பயன்படுத்தலாம்.

உங்கள் பென்ட்ரைவ்வில் Right Click செய்து Properties தெரிவு செய்யுங்கள்.

அதில் ReadyBoost பகுதியில் Use This Device ஐ தெரிவு செய்யுங்கள்.

Space to reserve for system speed என்ற இடத்தில் கூட்டி விடவும்.

இப்போது Apply செய்து விடுங்கள், உங்கள் கணினியின் Performance உயர்ந்துவிடும்.

## 9 ஜுலை 2012 இணையத்தை முடக்கிய வைரஸ்

திங்கட்கிழமை 9 July 2012 அன்று DNS Changer என்ற வைரஸ் இணையத்தை முடக்கியது. இதைப் பற்றி சற்று விரிவாக மற்றும் இந்த வைரஸில் இருந்து எப்படி தப்பிக்கலாம் என்பதை பற்றியும் கீழே காண்போம்.

DNS(Domain Name System) என்பது நாம் கொடுக்கக் கூடிய தளத்தின் முகவரியை (ex: www.google.com) கணினிக்கு புரியும் வகையில் அந்த தளத்தின் சரியான ஐபி எண்ணாக மாற்றி அந்த குறிப்பிட்ட தளங்கள் திறக்க உதவி புரிகிறது. உதாரணமாக www.facebook.com என கொடுததால் 204.15.20.0 என்ற ஐபி எண்ணாக மாற்றி தரும்.

இப்பொழுது ஆரம்பித்துள்ள புதிய பிரச்சினை என்னவென்றால் DNS Changer என்ற ஒரு அபாயகரமான வைரசை உருவாக்கி உள்ளனர். இந்த வைரஸ் DNS சேர்வர்களில் புகுந்து நாம் கொடுக்க





கூடிய இணைய முகவரியை போலியான ஐபி முகவரியை மாற்றி உங்கள் இணையத்தை செயலிழக்க வைக்கின்றனர். மற்றும் போலி தளங்களை வர வைத்து பணம் பறிக்கவும், கணினியில் மால்வேர்களை புகுத்தி சில முக்கிய இரகசியங்களையும் திருடுகின்றனர். இந்த வைரஸ் கடந்த வருடம் நவம்பர் மாதம் கண்டறியப்பட்டது. இது வரை உலகம் முழுவதும் பல இலட்ச கணக்கான கணினிகள் இதனால் பாதிக்கப்பட்டு உள்ளன.

அமெரிக்காவின் உளவு அமைப்பான FBI இது சம் பந்தமாக இதுவரை 7 பேரை கைது செய்து உள்ளது. இந்த வைரஸிற்கு தற்காலிக தீர்வாக தற்காலிக DNS சேர்வர்களை நிறுவி அதன் மூலம் DNS Changer வைரசினால் பாதிக்கப்பட்ட கணினிகளும் தொடர்ந்து இணைய சேவையை பெற்றுவந்தன.

இப்பொழுது பிரச்சினை என்னெவென்றால் இந்த தற்காலிக DNS சேர்வர்களின் செயல்பாடு வரும் திங்கட்கிழமை 9 ஜுலை 2012 அன்று நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆதலால் பாதிக்கப்பட்ட கணினிகள் தொடர்ந்து இனி இணைய சேவையை பயன படுத்த முடியாது. அல்லது பயன்படுத்தினால் உங்கள் கணினிகள் மேலும் பாதிக்கப்படலாம். இதனால் உலகம் முழுவதும் சுமார் 277,000 கணினிகள் பாதிக்கப்பட்டன என கருதப்படுகிறது.

**உங்கள் கணினி பாதிக்கப்பட்டுள்ளதா என அறிய:**

www.dns-ok.us தளத்திற்கு சென்றால் போதும் உங்கள் கணினி பாதிக்கப்பட்டு இருக்கிறதா என்பதை இந்த தளம் உங்களுக்கு சொல்லி விடும். கீழே இருப்பதைப் போல பச்சை நிறத்தில் வந்தால் உங்கள் கணினி பாதிக்கப்பட வில்லை என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். ஒரு வேளை உங்கள் கணினி பாதிக்கப்பட்டிருந்தால் பச்சை நிறத்திற்கு பதிலாக சிவப்பு நிறத்தில் தெரியும்.





**இந்த வைரசை முற்றிலுமாக அழிக்க :**

முதலில் இந்த படிவத்தை forms.fbi.gov/dnsmalware பூர்த்தி செய்யவும். உங்கள் கணினியில் இருந்து அந்த வைரசை நீக்குவது எப்படி என்று இங்கு பார்ப்போம்.

**விண்டோஸ் XP, Vista, 7 கணினிகளுக்கு:**

DNS Changer வைரசை கணினியில் இருந்து நீக்குவதற்காக பிரபல அன்ரிவைரஸ் நிறுவனமான அவிரா ஒரு புதிய மென்பொருளை உருவாக்கி உள்ளனர். இந்த லிங்கில் Avira DNS Repair சென்று மென்பொருளை டவுன்லோட் செய்து கொள்ளுங்கள்.

டவுன்லோட் ஆகி யதும் exe பைலை இரண்டு கிளிக் செய்து. இன்ஸ்டோல் செய்யத் தொடங்கியவுடன் கீழே இருப்பதைப் போல வந்தால் உங்கள் கணினி பாதுக்காப்பாக உள்ளது. ஆகவே இந்த மென் பொருள் உங்கள் கணினியில் இன்ஸ்டோல் ஆகாது.




ஒருவேளை பாதிக்கப்பட்டிருந்தால் இந்த மென் பொருள் அந்த வைரசை கண்டறிந்து உங்கள் கணினியில் இருந்து அழித்து விடும்.

**மேக் (Mac) கணினிகளுக்கு:**

மேக் கணினிகளில் இருந்து இந்த வைரசை நீக்க இந்த மென்பொருளை DNS Changer Removal Tool டவுன்லோட் செய்து நீக்கி கொள்ளுங்கள்.

## கூகுள் குரோமில் பயனுள்ள வசதிகள்

குரோமின் புதிய பீட்டா பதிப்பை வெளியிட்டுள்ளது கூகுள் நிறுவனம். இந்த புதிய பதிப்பில் Video Chatting> Improved Cloud Printer போன்ற. முக்கியமான வசதிகளை புகுத்தி உள்ளது.

ஒன்று இது நாள் வரை மென்பொருட்கள் மற்றும் இணைய தளங்கள் மூலம் கிடைத்த வீடியோ Chatting வசதி இனி எந்த மென்பொருளின் துணையு மின்றி கூகுள் குரோமிலே பெற்று கொள்ள லாம். getUserMedia Api என்ற மென் பொருள் மூலம் இந்த வசதியை புகுத்தி உள்ளது. இந்த வசதிகளை Magic Xylophone மற்றும் webcam toy போன்ற தளங்கள் மூலம் சோதிக்கலாம். இந்த புதிய பதிப்பில் Video Rotate, motion detection, face detection போன்ற வசதிகள் உள்ளன.



ஒவ்வொரு நாளும் இலட்சக் கணக்கானவர்கள் உபயோகிக்கும் இந்த வீடியோ சாட்டிங் வசதி குரோம் உலவியிலேயே வந்தது பெரும்பாலானவர்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

இந்த பீட்டா வெர்சனில் பிரிண்டிங் விண்டோவில் உங்களின் கிளவுட் பிரின்டர்களை Default ஆக இணைத்துள்ளது. ஆகவே நீங்கள் சுலபமாக கிளவுட் பிரிண்டர்களில் பிரின்ட் செய்ய முடியும். இந்த புதிய வசதிகளை பெற Chrome Beta 21.0 வெர்சனை டவுன்லோட் செய்து கொள்ளுங்கள்.

# உடுவில் மகளிர் கல்லூரியில் ஊடகக் கற்கைநெறிக் கருத்தரங்கு



(சிகரம்)

உடுவில் மகளிர் கல்லூரியின், தொடர்பாடலும் ஊடகக் கற்கைநெறியும் என்ற பாட மாணவர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கு கடந்த 10, 11ஆம் திகதிகளில் நடைபெற்றது.

கல்லூரியின் தொடர்பாடல் ஊடகக் கற்கைநெறி பாட ஆசிரியர் திருமதி.சுதாஜினி றுஷாங்கன ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கை கல்லூரியின் அதிபர் திருமதி.சிறாணி மில்ஸ் தலைமையேற்று ஆரம்பித்து வைத்தார்.

திருகோணமலைப் பல்கலைக்கழகத்தின் மொழி, தொடர்பாடல் பீடத்தின் தலைவர் கலாநிதி ரகுராமின் வழிகாட்டலில் அங்கு பணியாற்றும் விரிவுரையாளர்கள் சிவப்பிரியா சக்திவேல்,ஷாலிகா பொயாகொட ஆகியோர் இந்தக் கருததரங்கில் வளவாளர்களாகப் பங்கேற்றிருந்தனர்.

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிமூலம் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கு நான்கு செயலமர்வுகளாக நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் க.பொ.த உயர்தர மற்றும் க.பொ.த சாதாரணதர மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# அதிகளவு வெங்காய அறுவடையால் விலையில் பாரியளவு வீழ்ச்சி



(கிரு)

யாழ்ப்பாணத்தில் தற்போது பெரும்பாலான பிரதேசங்களில் சின்னவெங்காய அறுவடை ஆரம்பித்துள்ளது. இதனால் யாழ்.சந்தைகளில் வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த வருடம் குறைந்தளவு விவசாயிகளே வெங்காயச் செய்கையில் ஈடுபட்டதால் வெங்காயத்தின் விலை அதிகரித்துக் காணப்பட்டது. ஆனால் இந்த வருடம் அதிகளவான விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளமையினாலேயே வெங்காயத்தின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் யாழ். சுன்னாகம் பிரதேசத்தில் வெங்காய அறுவடையில் ஈடுபட்டிருக்கும் விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

தான் ஒவ்வொரு வருடமும் சின்ன வெங்காயம் பயிரிடுவதாகவும், இதன் மூலம் கடந்த வருடம் அதிக இலாபம் ஈட்டியதாகவும் கூறியதுடன், இந்த வருடம் எதிர்பார்த்தளவு இலாபம் கிடைக்கிவில்லை என்றும் அவர் கூறினார்.

'விவசாயிகள் யாரும் திட்டமிட்டு பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதில்லை. எது அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறதோ அதையே அதிக இலாபம் கிடைக்கும் என நம்பி எல்லோருமபயிரிடுகின்றனர். ஆனால், இதன்மூலம் நட்டம் தான் ஏற்படுகிது' என்றார் மற்றுமொரு விவசாயி.

எனவே, இவர்கள் வருங்காலத்திலாவது திட்டமிட்டு பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டும் எனவும் அந்த விவசாயி கேட்டுக்கொண்டார்.

தான் எப்பொழுதும் சிந்தித்தே பயிரிடுவதாக குறிப்பிட்ட அவர், இதனாலயே இந்தவருடம் நாற்றுக்காக மட்டும் வெங்காயத்தினைப் பயிரிட்டதாகவும், வெங்காயம் தவிர்ந்த கத்தரி, வெண்டி, கறிமிளகாய், பச்சைமிளகாய், பயிற்றை போன்றவற்றை பயிரிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# சிறுவர் துஷ்பிரயோக விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(மன்னார்)

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று மன்னார் ஞானோதயத்தில் காலை நடைபெறவுள்ளது.

மன்னார் சர்வமத பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெறும் இக்கருத்தரங்கு தொடர்பாக சர்வமதப் பேரவையின் தலைவர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் கருத்து தெரிவிக்கையில்,

“மன்னாரில் உள்ள சர்வமதத் தலைவர்கள், சிறுவர் உரிமைகளோடு தொடர்புடைய பல்வேறு நிறுவனங்களின் அதிகாரிகள், கல்வித்துறை, சட்டத்துறை, சுகாதாரத்துறை சார்ந்த அதிகாரிகள், பெற்றோர் எனப் பல்வேறு தரப்பினர் இக்கருத்தரங்கில் பங்கெடுக்கின்றனர்.

நல்லிணக்கத்திற்கான வடக்கு கிழக்கு சர்வமத ஒன்றியம் (நெய்பர்) மற்றும் மன்னார் ஆயர் ஆகியோர் எமது இந்த முயற்சிக்கு முழுமையான ஆதரவை வழங்கியுள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது இன்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஒரு பாரிய சமூக மற்றும் மனிதாபிமானப் பிரச்சினையாகும்.

ஊடகங்களில் வெளியாகும் செய்திகள், பொலிஸ நிலையங்களுக்கு, நீதிமன்றங்களுக்கு கொண்டுவரப்படும் சம்பவங்கள் பத்து வீதமானவையே. தொண்ணூறு வீதமான சம்பவங்கள் வெளி வருவதில்லை.

பல்வேறு காரணங்களுக்காக அவை மூடி மறைக்கப்படுகின்றன.

நமது எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களான சிறுவரை மிகமோசமாக, மிக வேகமாகப் பாதித்துவரும் இந்தப் பிரச்சினை தொடர்பாக மன்னார் மாவட்ட மட்டத்தில் பரந்த அளவிலான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இக்கருத்தரங்கின் நோக்கமாகும்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்னும் கொடிய தீமையை, ஆபத்தை இல்லாதொழிப்பதற்கு சமூகத்தில் உள்ள அனைத்து தரப்பினரும் தத்தமது சக்திக்கு உட்பட்ட வகையில் தீவிரமாகச் செயலாற்ற வேண்டும்“ என்றார்

# கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறுவர் மற்றும் பெண்களுக்கான தேவைகளை இனங் கண்டு முன்னுரிமைப் படுத்தி ஒழுங்கமைப்பது தொடர்பான கலந்துரையாடல் கூட்டமொன்று நாளை திங்கட்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடை பெறும் இககூட்டத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் பதில் செயலா ளரான அசோக அளவத்த கலந்து கொள்ளவுள்ளார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

சாதி அடிப்படையில் சமுதாய அமைப்பு தவறு. கருணை என்கிற அளவில் சமுதாயம் அமைய வேண்டும். வாழ்க்கைக்கு அர்த்தம், இலட்சியம், அந்த வாழ்க்கையிலேயே இருக்கிறதே தவிர வெளியே இல்லை.

மிக அதிகச் சந்தடி காதைச் செவிடுபடுத்துகிறது. மிக அதிக தூரமோ, மிக அதிகச் சமீபமோ நம் பார்வையை மறைக்கிறது. மிக அதிகமான அல்லது மிகச் சுருக்கமான பேச்சு, அறிவை வளராது தடுக்கிறது. மிக அதிக உண்மை நம்மைத் திகைக்க வைக்கிறது. **– பாஸ்கல்**

எந்தக் கப்பலும் துறைமுகத்தில் நின்றால் பாதுகாப்பாகவே இருக்கும். ஆனால் அதற்காகவா கப்பல் கட்டப்படுகிறது? **– கிரேஸ் முர்ரே ஹாப்பர்**

நான் யாரும் யாருக்காகவும் அனுதாபப்படக் கூடாது என்கிறவன். பணம் பண்ணுகிறவர்களுக்கும், மக்களின் நன்மதிப்பை விரும்புகிறவர்களுக்கும் அனுதாபம் தேவை. ஆழமான உறவுகளுக்கு அனுதாபம் இடைஞ்சல் தரும்.

**– யு.ஆர்.அனந்தமூர்த்தி**

மரணத்துக்குப் பின் வாழ்க்கையிருக்கிறதா என்று கேட்டால் உடனே முற்போக்காளர்களாகிய நாம் இதற்கு பதில் சொல்லத் தொடங்கிவிடுகிறோம். அது சரிதான். ஆனால், மரணத்துக்கு முன் இங்கே வாழ்க்கையிருக்கிறதா என்று கேட்பவர்களுக்கு என்ன சொல்லப்போகிறோம்? **– பிரளயன்**

நேர்மையானது எது என்பதை அறிந்த பின்னும் அதைச் செய்யாமல் இருப்பது கோழைத்தனம். **– கன்ஃபூஷியஸ்**

நாம் எந்தச் செயல்களைச் 'செய்யலாம் என்று முடிவு செய்வோம். நாம் செய்யும் செயல்கள் நம்மை இத்தகையவர் என்று முடிவு செய்யும். **– வெர்ன்ஸ்**

வாஷிங்டன் பாதாள ரயில்சேவை அற்புதமானது. டிக்கட் வாங்கும் முறை, பயணிக்கும் முறை எல்லாம் முட்டாள்களைக் கணக்கில் கொண்டு விளக்கப்பட்டிருந்தன என்பதால் எனக்குப் பிரச்சினை இருக்கவில்லை. **– கண்ணன்**

பாலியல் வக்கிரம், பாலியல் வன்முறை ஆகியவற்றை எல்லாம் தாண்டி நிற்கும், பூனைக்குட்டிகளை நேசிக்கும் ஓர் அற்புத உலகம். வாழ்வின் அத்தனை வார்த்தைகளையும் தள்ளி விட்டு, 'மண்டியிட்டு ஒரு குழந்தையை நேசிக்கத்' துடிக்கும் அன்பின் மௌனம். **– இந்திரா பார்த்தசாரதி**

அன்பு, வெறுப்பு இரண்டுமே மிகப் பலவீனமான அடிப்படைகள் மீது, அல்லது அடிப்படைகள் ஏதுமின்றியே ஏற்படக் கூடியவை. **– ஆதவன்**

இன்பம் ஒரு பாவம்; சில சமயங்களில் பாவமும் இன்பமாக இருக்கிறது. **– பைரன்**

பாலியலை ஒழுக்கவியலின், நடத்தையியலின் மையமாகக் கொண்ட எல்லா சமூக அமைப்புகளிலும் உள்ளார்ந்த பெரு வன்முறை குமைந்து கொண்டே இருக்கும். ஏனெனில் இது ஒரு உடலை மற்றொரு உடல் கண்காணிக்கும் உரிமையை, தண்டிக்கும் உரிமையை வழங்கி விடுகிறது. அதன்மூலம் குற்றவியல் உள அமைப்பை ஒவ்வொருவருக்குள்ளும் ஏற்படுத்தி விடக் கூடியது. குடும்பம் என்ற அமைப்பு இந்த கண்காணிப்பின் தொடக்கமாக அமைவதால் சக மனித உறவு சார் அச்சமும் வெறுப்பும் தொடர்ந்து தூண்டப்பட்டு பெருக்கப்படுகிறது. பாலியல் பிறழ்வுக்கு உட்படாத எவரொருவரையும் இச்சமூக அமைப்பு உருவாக்குவதில்லை. இன்னொரு வகையில் கூறுவதென்றால் பாலியல் என்பதையே பிறழ்வாக மாற்றி வைத்திருக்கும் ஒரு சமூக அமைபபில் அனைவருமே நோயாளிகளாகத்தான் இருக்க முடியும். **– பிரேம் ரமேஷ்**

மருந்து முதல் மனைவி வரை substitute கண்டுபிடிப்பது தானே நவீன விஞ்ஞான முயற்சி. **– புதுமைப்பித்தன்**

கதாசிரியர் ஆர்.கே.நாரயணனிடம் “நீங்கள் ஏன் உங்கள் கதைகளில் செக்ஸ் எழுதுவதில்லை” என்று கேட்டபோது–அவர் சொன்னார், “என் கதாநாயகனும், நாயகியும் தனியறையில் இருக்கும்போது நான் அந்த அறையை விட்டு வெளியே வந்து விடுவேன்.”

# மன்னாரில் கடும் வரட்சி நிலை

# சிறுபோக நெற்செய்கை அழிவு

(மன்னார்)

கடும் வரட்சி காரணமாக மன்னாரில் சிறுபோக நெற்செய்கை அழிவடையும் நிலையில் உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். முருங்கன் கட்டுக்கரை குளத்தை நம்பியே இம்முறை பல ஏக்கர் நிலப் பரப்பில் விவசாயம் செய்கை பண்ணப்பட்டது.



ஆனால் தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக நீர் நிலைகள் வற்றியதால் நீருக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.குளங்கள்,நன்னீர் கிணறுகள் என்பனவும் வற்றிய நிலையில் காணப்படுகின்றன.

இதனால் விவசாய பயிர்களுக்கு தேவையான நிலை பெறமுடியாத நிலை ஏற்படுகின்றது.போதிய நீர் இல்லாததால் பயிர்கள் கருகிய நிலையில் காணப்படுகின்றன.

இன்னும் சில வாரங்கள் இதே போன்று காணப்பட்டால் நெற்பயிர்கள் முழுவதும் கருகிவிடும் என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பல இடங்களிலும் கடன்களை பெற்று விவசாயம் செயயும் விவசாயிகள் இதனால் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் கவலையும், குழப்பமாகவும் உள்ளனர்.

## நானாட்டான் புனித ஆரோக்கிய மாதா வருடாந்த பெருநாள் விழா



நானாட்டான் புனித ஆரோக்கிய மாதா தேவாலய வருடாந்த பெருநாள் கடந்த 10ஆம் திகதி வெகு சிறப்பாக நடைபெற்றது. காலை 6 மணியளவில் செபமாலையைத்தொடர்ந்து காலை 07.15 மணியளவில் நானாட்டான் பங்குத்தந்தை அருட்திரு.இ.அகஸ்ரின் புஸ்பராஜ் அவர்களின் தலைமையில் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருப்பலியைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூபம் நானாட்டான் பாடசாலை வீதிவழியே பயணித்து மீளவும் ஆலயத்தை வந்தடைந்தது. இந் நிகழ்வில் பங்கு மக்களும் அயல் கிராம மக்களும் பெருமளவில் கலந்து கொண்டதுடன் நானாட்டான் மகா வித்தியாலய மாணவர்களும் பக்தி சிரத்தையுடன் வழிபாடுகளில் ஈடுபட்டு அன்னையின் அருள்பெற்றேகினர்.

## முல்லையில் சட்ட ஆவணங்கள் பெற இறுதிக்கட்ட நடமாடும் சேவை

தேசிய மொழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துடன் இணைந்து நடாத்தும் ஒருநாள் சட்ட ஆவணங்கள் வழங்குவதற்கான இறுதிக்கட்ட நடமாடும் சேவை எதிர்வரும் 19ஆம் திகதி முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற உள்ளது.

காலை 9.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை நடைபெற உள்ள நடமாடும் சேவையில் முத்தையன்கட்டுக்குளம், கனகரத்தினபுரம், போராறு, பண்டாரவன்னியன், கற்சிலைமடு, முத்துவிநாயகர்புரம், ஒட்டுசுட்டான், சமளங்குளம், தட்டதமலை, கணேசபுரம், வித்தியாபுரம், கருவேலங்கண்டல், புளியங்குளம், கூளாமுறிப்பு மணவாளன்பட்ட முறிப்பு, தச்சடம்பன், ஒழுமடு, அம்பன்காமம், மாங்குளம், பணிக்கண்குளம், திருமுறிகண்டி, இந்துபுரம், ஒதியமலை, பெரியகுளம், தண்டுவான், பெரிய இத்திமடு, பளம்பாசி. ஆகிய கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் உள்ள மக்களில் பிறப்பு சான்றிதல், காலம் கடந்த பிறப்பு பதிவு, விவாகச்சான்றிதல், இறப்புச்சான்றிதல், தேசிய அடையாளஅட்டை, தொலைந்த அடையாள அட்டை, போன்ற ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது

## வவுனியாவில் டெங்கு ஒழிப்பு

(வவுனியா)

வவுனியா நகரசபை உறுப்பினர்கள் டெங்கொழிப்பு செயற்றிட்டத்தின் முன்னோடியாக நகர வீதிகளிலுள்ள வடிகான்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை பார்வையிட்டனர்.

சட்டவிரோத வர்த்தக நிலையக் கட்டடங்கள் காரணமாக நகர வீதிகளிலுள்ள வடிகான்கள் தூர்ந்து போயுள்ளன. அதனுள் மண் மற்றும் வர்த்தக நிலையங்களின் கழிவுகள் தேங்கியுள்ளதாகவும் நகரசபை உறுப்பினர் எஸ்.ரி.இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதனை உடனடியாக நகரசபை தலைவர் உட்பட உறுப்பினர்கள் பார்வையிட வேண்டுமென அவர் விடுத்த கோரிக்கைக்கமைய நகரசபை தலைவர், செயலாளர், உறுப்பினர்களுடன் பொது சுகாதார பரிசோதகர் சி.கிரிதரன் ஆகியோர் நகர வீதிகளிலுள்ள வடிகான்களைப் பார்வையிட்டனர்.

## 35 இலட்சம் தொலைபேசிக் கட்டணத்தை செலுத்தத் தவறியவர் மீது வழக்குப்பதிவு

டயலொக் டெலிகொம் நிறுவனத்திற்கு தொலைபேசி பாவனைக்கான கட்டமாக 35 இலட்சம ரூபாவை பற்றுவைத்துவிட்டு, நம்பிக்கை மோசடி செய்த குற்றச்சாட்டுக்குள்ளான செல்லிட தொலைபேசி சேவை வாடிக்கையாளர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

இரத்மலானையைச் சேர்ந்த இச்சந்தேக நபர், 3.5 மில்லியன் ரூபா கட்டணத்தை மோசடி செய்ததாக டயலொக் டெலிகொம் நிறுவனத்தின் கடன் முகாமையாளரினால் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி நபரிடம் 21.04.2010 ஆம் திகதியளவில் 21,500 ரூபா வைப்புப் பணம் பெற்றுக் கொண்டு அவருக்கு ரோமிங் வசதி வழங்கப்பட்டதாக முறைப்பாட்டாளர் தெரிவித்திருந்தார். மேற்படி சிம் அட்டையை மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப் படக்கூடாது எனவும் சட்ட விரோத நடவடிக்கைகக்கு பயன்படுத்தக்கூடாது எனவும் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை இவ்வாடிக்கையாளர் மீறிவிட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2010 ஏப்ரல் முதல் 14.05.2010 ஆம் திகதிவரையான காலப் பகுதியில் இப்பெருந்தொகை கட்டணத்தை அவர் மோசடி செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் நேற்று கொழும்பு கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரட்ன முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். சந்தேக நபரின் மீதான குற்றச்சாட்டை அவரின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் கிங்ஸ்லி ஹெட்டியாராச்சி நிராகரித்தார்.

தன் கட்சிக்காரருக்கு வழங்கப்பட்ட சிம் அட்டை பாகிஸ்தான் பிரஜையொருவருக்கு வழங்கப்பட்டதாகவும் எனவே அப்பாகிஸ்தான் பிரஜையே இதற்கு பொறுப்பு எனவும் வழக்குரைஞர் கிங்ஸ்லி ஹெட்டியாராச்சி வாதாடினார். தனது கட்சிக்காரர் தொலைபேசி இணைப்பை துண்டிக்குமாறு கோரியும் அதை செய்வதற்கு இந்நிறுவனம் தவறிவிட்டது எனவும் அவர் கூறினார்.

அதேவேளை இத்தொலைபேசி அழைப்புகள் வெளிநாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மேற்படி பாகிஸ்தான் பிரஜையுடன் சந்தேக நபர் தொடர்பு கொண்டிருந்ததாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேக நபரை தலா 500,000 ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் இவ்வழக்கை ஆகஸ்ட் 22 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

## வலிகாமம் கல்வி வலய ஆங்கில தினப் போட்டிகள்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர் களுக்கிடையே ஆங்கில மொழித்தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வலயக் கல்விப் பணிமனையால் அறிவிக்கப் பட்டுள்ளது.

மாணவர்களின் ஆங்கில மொழிவிருத்தியை மேம்படுத்தும் பொருட்டு பதினாறு வகைப் போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன. இதில் முதன் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

### ஆங்கில சொல்வதெழுதல்

தரம் - 06

1 ஆம் இடம் கே.பவிதாரனி, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

2 ஆம் இடம் எஸ்.கபிஷா, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

3ஆம் இடம் கே.சியாமன், யா/விக்ரோறியா கல்லூரி.

தரம் - 07

1 ஆம் இடம் எம்.எமறான்சியா, யா/இளவாலை திருக்குடும்ப கல்லூரி.

2 ஆம் இடம் ஜி.சங்கிராணி, யா/யாழ்ப் பாணக்கல்லூரி.

3 ஆம் இடம் ஜே.மதுசாளினி, யா/உடுவில் மகளிர் கல்லூரி.

தரம் - 08

1 ஆம் இடம் எஸ்.சோபாசினி, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

2 ஆம் இடம் எஸ்.லோகேஸ்வரன் யா/யாழ்ப் பாணக்கல்லூரி.

3 ஆம் இடம் எஸ்.சேயோன், யா/விக்ரோறியாக் கல்லூரி.

தரம் - 09

1 ஆம் இடம் எஸ்.அனோஜா, யா/யாழ்ப்பாணக் கல்லூரி.

2 ஆம் இடம் என்.நிசோதா, யா/யாழ்ப்பாணக் கல்லூரி.

3 ஆம் இடம் ஜே.சயானா, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

தரம் - 10

1 ஆம் இடம் பி.கஜிசயா, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

2 ஆம் இடம் எஸ்.டினோஜா, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

3 ஆம் இடம் ஆர்.லீஷா, யா/உடுவில் மகளிர் கல்லூரி.

தரம் 11

1 ஆம் இடம் கே.தனுசியா, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

2 ஆம் இடம் எம்.நிருஷன், யா/யூனியன் கல்லூரி.

3 ஆம் இடம் எஸ்.கீர்த்திகா, யா/உடுவில் மகளிர் கல்லூரி.

தரம் - 12

1 ஆம் இடம் ரி.காயத்திரி, யா/விக்ரோறியாக் கல்லூரி.

2 ஆம் இடம் யு.கீர்த்தனா, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

3 ஆம் இடம் ஆர்.நிதுஷா, யா/மனிப்பாய் மகளிர் கல்லூரி.

தரம் - 13

1 ஆம் இடம் எஸ்.பரமேஸ்வரன், யா/யாழ்ப்பாணக் கல்லூரி,

2 ஆம் இடம் ரி.தர்சிகா, யா/விக்ரோறியாக் கல்லூரி.

3 ஆம் இடம் எ.நிலோஜினி யா/ உடுவில் மகளிர் கல்லூரி.

(தொடரும்.....)

## அங்காடி வியாபார நிலையங்களை மன்னாரில் அகற்ற நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் நகரில் இடம்பெறும் அங்காடி வியாபாரத்தினால் மன்னார் நகரம் மாசடைவதாகத் தெரிவித்து அவற்றை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை மன்னார் நகரசபை முன்னெடுத்து வருகின்றது.

மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையிலான நகரசபையின் அதிகாரிகள், பணியாளர்கள் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த அங்காடி வியாபாரிகளுக்கு பல்வேறு நிபந்தனைகளை வழங்கி அவர்களுக்கு மனிதாபிமான முறையில் வியாபாரங்களை மேற்கொள்ள மன்னார் நகர சபை அனுமதிகளை வழங்கியுள்ள போதும் பாதசாரிகளுக்கு இடையூறாகவும்,மன்னார் நகரம் மாசடையும் வகையில் குறித்த வியாபாரப்பொருட்களின் கழிவுகள் கொட்டப்படுவதாகவும் மக்களால் தொடர்ந்தும் மன்னார் நகர சபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில் குறித்த அதிரடி நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
G.C.E. (A/L) Examination model Paper
கல்வி முரசு
02 T II
நேரம் : 2 மணி
Grade - 13
அளவையியலும் விஞ்ஞான முறையும்
ஆசிரியர் : M.W.காண்டீபன்

புறொய்டின் கொள்கையில் உணர்வுளியும் உணர்விலியும் தொடர்ச்சி....

உளப் பகுப்பாய்வின்போது உணவிலி மனத்தில் உணர்வுளி மனத்திற்கு கொண்டு வந்து வெளிப்படுத்துவதற்கு புறொய்ட் உளவசியமுறை (Hypnotism) யினைக் கையாண்டார். உளவசிய முறையைக் கையாள்வதில் சில இடர்ப்பாடுகள் தோன்றியதால் புறோய்ட் பின்னர் தடையில்லாத் தொடர்பு முறையே (Free association method) வகுத்தல் உளப்பகுப்பாய்வில் கனவு பகுப்பாய்வு முறையும் புறொயிட் கையாண்டார்.

மனித நடத்தைகளை தீர்மானிப்பதில் பாலியல் காரணிகள் (Sexnel Factors) முக்கிய பங்கினை வகிக்கின்றதென புறொய்ட் கூறுகின்றார். மனிதன் செய்யும் செயல்களுக்குரிய ஊக்கநிலையும் ஆற்றலும் பாலியல் ஊக்கத்தினாலேயே உண்டாக்கப்படுகின்றதென புறொய்ட் விளக்குகின்றார். சின்னஞ்சிறிய குழந்தைகளிடம் பாலுணர்ச் காணப்படுகின்றதென்பதை பல உதாரணங்களின் மூலம் இவர் விளக்கியுள்ளார். பாலியல் பற்றிய இவரது கருத்துக்கள் மன நோயாளருக்கு சிகிச்சை அளிக்கும் ஒரு வகையான உளப்பகுப்பாய்வு கொள்கையின் தோற்றத்திற்குத் தொடக்கமானது.

உளப் பகுப்பாய்வின் முக்கிய நோக்கம் மனநோய்கள் ஏற்படுவதற்கான காரணிகளை அறிந்து கொள்வதேயாகும். உணர்விலி மனத்தில் உள்ளவற்றை உணர்வுளி மனத்திற்கு கொண்டு வருவதற்கு மூலம் மனநோய்க்கான காரணங்களை அறிந்து அதற்கேற்ப சிகிச்சைகளை மேற்கொள்ள முடிகின்றது.

### வாயுமூலக் கூற்றியக்கக் கொள்கை, வாயுக்களின் இயக்கப்பண்பு கொள்கை, வாயுக்கள் பற்றிய இயக்கக் கொள்கை, கினேட்டிக் கோட்பாடு (Kinetic theory of gases)

வாயுக்களின் இயக்கம் பற்றி விளக்குக. ஓர் கொள்கையே வாயுமூலம் கூற்றியக்கக் கொள்கையாகும். இக் கொள்கையின்படி எல்லாச் சடப்பொருட்களும் இடையீடின்றி இயங்கிக் கொண்டிருக்கும். அணுக்கள் (Atoms) அல்லது அணுச்சேர்க்கையினால் (Combination atoms) ஆனதாகும். அணு என்பது சடப்பொருட்களின் மிகச்சிறிய துணிக்கையாகும். எனவே வாயுக்களும் இவ்வாறான மிகச்சிறிய துணிக்கைகளினால் ஆனதேயாகும். வாயுத் துணிக்கைகள் எப்போதும் இடையீடின்றி எல்லாத் திசைகளிலும் குறிப்பிட்ட வேகத்தில் அசைந்தியங்கிக் கொண்டேயிருக்கும். இவ்வாறான வாயுத் துணிக்கைகளின் வேகமானது அவற்றின் நிலையினாலும் வாயுவின் வெப்பநிலையினாலும் நிர்ணயிக்கப்படுகின்றது. வாயுக்கள் குளிராகவுள்ள வேளையைக் காட்டிலும் வெப்பமாகவுள்ள வேளையிலேயே வாயுத் துணிக்கைகள் அதிவேகமாக அசைந்து இயங்கும். ஆனால் எல்லா வெப்ப நிலையிலும் பாரமான வாயுத்துணிக்கைகளைக் காட்டிலும் பாரம் குறைந்த வாயுத் துணிக்கைகள் அதிவேகமாக அசைந்தியங்குகின்றது.

அசைந்தியங்கும் ஒவ்வொரு வாயுத்துணிக்கையும் ஒரு வினாடிக்கு கோடிக்கணக்கான மற்றைய துணிக்கைகளோடு முட்டி மோதிக்கொள்கின்றது. வாயுத்துணிக்கைகள் தமது கொள்கைகளிலுள்ள சுவர்களோடு முட்டி மோதிக்கொள்வதால் அழுக்கவிசையை உண்டு பண்ணுகின்றன.

ஓர் வாயுக் கொள்கலனிலுள்ள வாயுத் துணிக்கைகளின் அமுக்கம், வெப்பம், கன அளவு என்பன தொடர்பாக மூன்று தனித்தனியாக விதிகளை மூலக்கூற்றியக்கக் கொள்கை உள்ளடக்கி விளங்குகின்றது. அவ்விதிகளாவன.

1) போயிலின் விதி (Boyle's law)
2) சாள்சின் விதி (Charle's law)
3) அவகாதரோவின் விதி (Avogadro's law)

### DNA யும் RNA யும் (DNA and RNA) அல்லது நிக்கிளிக் அமிலம் (Nucleic Acid)

DNA யும் (Deoxyribo Nucleic Acid) RNA யும் (Deoxyribo Nucleic Acid) RAN யும் (Ribl Nuclei Acid) உயிர்வாழ் கலங்களில் காணப்படும் இருவகையான நியூக்கிளிக் அமிலங்களாகும். இவற்றுள் DNA பொதுவாக கலத்தின் கருவில் மட்டுமே காணப்படும்.

பிறப்புரிமையில் பாரம்பரிய இயலில் DNA பெரும் முக்கியத்துவம் பெறுகின்றது. தாவர விலங்குக் கலங்களில் காணப்படும் நிறமூர்த்தத்தில் DNA முக்கிய இரசாயனப் பொருளாக விளங்குகின்றது. DNA தான் ஒவ்வொரு பரம்பரை இயல்பையும் சந்ததிக்குச் சந்ததி காவிச் செல்கின்றது. DNA யின் மாதிரி அமைப்பு வற்சன் (Watson) கிறிக் (Crick) என்பவர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. இதனைக் கண்டுபிடித்தமைக்காக இவர்கள் (1961 ஆம் ஆண்டு) நோபல் பரிசினைப் பெற்றார்கள்.

RNA கலத்தில் எந்தப் பகுதியிலும் காணப்படும். அதாவது கலத்தில் குழியருவியிலும் RNA காணப்படலாம். RNA, DNA யில் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றது. RNA புரதத் தொகுப்புக்குரிய செய்தி காவுதல் அமினோ அமிலங்களைக் கடத்தல், தொகுத்தல் ஆகிய தொழிற்பாடுகளை நடாத்துவதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

### லாமார்க்கின் கூர்ப்புக் கொள்கை (Lamark's Theory of Evolution)

லாமார்க் தனது கூர்ப்புக் கொள்கையில் குறிப்பிடும் இரு முக்கியமான விடயங்கள் பின்வருமாறு

1) உபயோகமும் உபயோகமின்மையும்

உயிருள்ள அங்கிகளின் புதிய தேவைக்கேற்றவாறு புதிய உறுப்புக்கள் தோன்றுகின்றன. உயிருள்ள அங்கிகளின் உறுப்புக்கள் அவை தொழிற்படும் விதத்திற்கேற்ப விசேடமடையும் (கூர்ப்பமடையும்) அதாவது ஓர் உறுப்பு தொடர்ந்து உபயோகிக்கப்பட்டால் அவ்வுறுப்பு விசேடமடையும். ஓர் உறுப்பு உபயோகப்படாவிட்டால்* அது அற்றுப்போகும்.

2) பெற்ற இயல்புகள் தலைமுறையுரிமையடைதல்

ஓர் அங்கியின் வாழ்க்கை காலத்தில் சூழலின் தாக்கத்தால் அவ்வங்கி பெற்ற இயல்புகள் அதனது சந்ததிகளுக்கு கடத்தப்படும். லாமார்க்கின் கொள்கைகளில் முரண்பாடுகளும் ஐயப்பாடுகளும் அதிகமாக இருந்தன. குறிப்பாகப் பெற்ற இயல்புகள் (Acquired Characters) ஆனது சந்ததிகளுக்கும் கடத்தப்படும் எனும் இவரது கொள்கை நிரூபிக்கப்பட வில்லை.

### டார்வினதும் (வலசினதும்) கூர்ப்புக்கொள்கை (Darwin's Theory of Evolution)

டார்வினின் கூர்ப்புக்கொள்கை முக்கியமான மூன்று விதிகளை உள்ளடக்கியதாகும்.

1) உயிர் வர்க்கங்கள் ஒவ்வொன்றினதும் இயல்புகள் மற்றையவற்றிலிருந்து வேறுபடுகின்றன.
2) உயிர் வர்க்கங்கள் ஒரே வீதத்தில் கிரமப்படியாக பெருகும் தன்மையுடையது.
3) குறிப்பிட்ட வர்க்கத்தின் (இனத்தின்) தொகை ஏறக்குறைய ஒரே நிலையிலேயே இருக்கும்.

இதனால் எல்லா உயிரினங்களும் தமது வாழ்க்கைக்காகப் போராடுகின்றன. இப்போராட்டத்தில் வெற்றிபெற்றவை வளர்த்து நிலைபெறும். வெற்றிபெற முடியாதவை.

நிலைகுலைந்து அழிந்துபோகும் வெற்றி பெற்றவை தமது வாழ்க்கைக்குச் சாதகமான சில மாற்றங்களை (இயல்புகளை) பெற்றிருக்கும். இம்மாற்றங்களை ஏற்படுத்தும் பொறுப்பு இயற்கைத் தேர்வு விதியினையே சாரும். இயற்கைத் தேர்வினாலான இயல்புகள் பின்பு அடுத்தடுத்த சந்ததிகளுக்கும் கடத்தப்படும். இம்மாற்றங்களை படிப்படியாக நீண்ட காலத்திற்குப் பின் புதிய வர்த்தகத்தினை (இனத்தை) தோற்றுவிக்கும். டார்வின் தனது பரிணாமக் கொள்கையில் தாழ் மட்டத்திற்குரிய அங்கிகளில் இருந்துதான் உயர்மட்டத்திற்குரிய அங்கிகள் உண்டாகின்றனவென விளக்குகின்றார்.

விளக்கம் :- துணிக்கைகள் → மூலக்கூறுகள் → எளிய உயிர்வாழ் தொகுதி → சிக்கலான உயிர்வாழ் தொகுதி → மிருகம் → மனிதன்

டார்வின் இயற்கைத் தேர்வு செயன்முறையானது குறிப்பானது நோக்கற்ற தொடரான செயன்முறையாகுமெனவும் விளக்குகின்றார். ஆதாரப் படுத்தினார்.

### நடத்தை வாதம்

உளவியலில் நடத்தைவாதம் எனும் கொள்கையானது அமெரிக்க உளவியளாரான ஜே.பி.வாற்சன் (J.B.Watson) என்பவரால் அறிமுகப்படுத்தப் பட்டது.

புறவயமானதும் உற்று நோக்கக்கூடியதுமான நடத்தைகளே உள இயல்புகளுக்கு (உளப்பண்பு) காரணம் என்பதனை இக்கொள்கை வலியுறுத் தும் எனவே உள இயல்புகளை அறியவேண்டுமாயின் புறவயமானதும் உற்று நோக்கக் கூடியதுமான நடத்தைகளேயே ஆராயவேண்டுமென இக்கொள்கை கூறுகின்றது.

நடத்தைவாதவியலாளர்களின் கொள்கை பெருமளவிற்குப் பல்லோவ் எனும் ரஷ்ய நாட்டு உளவியலறிஞரின் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். மிருகங்களில் ஏற்படுத்தப்படும் செயற்கைத் தூண்டலானது ஓர் இயற்கைத் தூண்டலுக்கு பதிலீடாக அமைந்து அவற்றின் உடற்தொழிற்பாட் டில் தாக்கங்களை ஏற்படுத்தும் ஓர் காரணியாகின்றதென பல்லோவ் பரிசோதனைகளின் மூலம் கண்டுபிடித்தார்.

### கனவுகள் பற்றிய (புறொய்ட்டிய) கொள்கை (Freudian theory Dreams)

கனவுகள் உணர்விலி (நனவிலி) மனத்திலிருந்து எழுகின்றன. பெரும்பாலும் கடந்த காலத்தில் நிறைவேறாமல் கனவு காண்பவரின் மனதில்

ஆழ்ந்திருக்கும் விருப்புக்களையும் இச்சைகளையும் நிறைவேற்றும் வெறும் தோற்றங்களே கனவுகளாகும். இவ்வாறான விருப்புக்களிலும் இச்சைகளிலும் காமமே முதலிடம் பெறுகின்றதென புறோயட் கூறுகின்றார். கனவுகளுக்கு உட்பொருளுண்டு. அதன் உட்பொருளை கனவு காண்பவராலேயே சரிவர அறியமுடியாது.

**1. சுருக்குதல் (Condensation)**

கனவுகள் பலவிடயங்களை அல்லது பல நாட்கள், பல மாதங்கள் நடந்த நடக்கக்கூடிய விடயங்களைச் சுருக்கித் தருவதனை இது குறிக்கும்.

**2. இடம் பெயர்தல் (Displacement)**

கனவுச் செயற்பாட்டின்போது ஓர் உணர்வு, ஒரு நிகழ்ச்சியிலிருந்து இன்னொரு நிகழ்ச்சிக்கோ அல்லது ஓர் ஆளிலிருந்து இன்னொரு ஆளுககோ மாற்றப்படுதலை என்பதை இது குறிக்கும்.

**3. குறியீட்டுச் செல்லல் (Symbols)**

கனவுத் தோற்றங்கள் கனவில் நேரடியாகக் காட்டதனவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் குறியீடுகளாகும்.

உதாரணம் :- நோய்வாய்ப்பட்டுள்ள ஒருவனின் மனைவி தனது தாலிக்கொடி அறுத்து வீழ்வது போல் கண்ட கனவு அவளது கணவனின் மரணத்தைப் பிரதிபலிக்கும் ஓர் குறியீடாகலாம். கனவில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் குறியீட்டு வடிவில் மறைமுகமாகவே உணர்த்துவதனை இது குறிக்கும்.

**பிறப்பரிமையியல் (Genetics)**

பாரம்பரிய (heredity) பாரம்பரிய வேறுபாடுகள் (Varision), பரிணாமம் (enohution) போன்றவை பற்றி ஆராயும் ஓர் பகுதியே பிறப்புரிமை யியலாகும். பெற்றோரினது இயல்புகள் எவ்வாறு அவர்ளது பிள்ளைகளுக்குக் கடத்தப்படுகின்றது என்பது பற்றிய பிறப்புரிமையியலில் ஆராயப்படுகின்றது. ஓர் அங்கியினது இயல்புகள் அவற்றின் கலத்தின் கருவிலுள்ள நுண்ணிய பரம்பரை அலகுகளினால் (genus) தீர்மானிக்கப்படுகின்றது.

உதாரணமாக ஓர் அங்கியின் உடற்தோற்றம், கண், மயிர், தோல் போன்றவற்றின் நிறங்கள் போன்ற உடலியல்புகள் பரம்பரை அலகுகளினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இவை தவிர இரத்தவகை (blood type) நிறக்குருடு (Colour blindness) போன்றவையும் வெவ்வேறு வகையான நோய்களும் பரம்பரை அலகுகளினாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. விஞ்ஞானிகள் உயிரினத்தின் ஓர் சந்தையிலிருந்து இன்னோர் சந்திக்குப் பரம்பரை அலகுகள் எவ்வாறு கடத்தப்படுகின்றன என்பது பற்றி ஆராய்வதே பிறப்புரிமையியல் எனக் கூறுகின்றனர்.

பின்னைய காலங்களில் பிறப்புரிமையியல் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்ட மோகன் (T.H.Morgan), முல்லா (H.J.Muller), பீடில் (G.W.Bedle), ராரம் (E.L.Tatum) போன்ற விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் மூலம் பல புதிய உண்மைகளைக் கண்டறிந்து விளக்கினார்.

## உலகின் தோற்றம் பற்றிய கொள்கைகள் (பிரபஞ்சத்தின் உற்பத்தி)

(Theories of Origin of the Universe)

உலகின் தோற்றம் பற்றிய பல கொள்கைகள் உண்டு அவற்றுள் முக்கியமான சிலவற்றை நோக்குவோம்.

1. மகா வெடிப்புக் கொள்கை அல்லது பேரண்ட் வெடிப்புக் கொள்கை (Big bang Theory)

ஆதியிலிருந்து மூலமான பொருள் (Primordial atom) ஒன்று வெடித்துச் சிதறியதன் விளைவாகவே உலகம் தோற்றம் பெற்றது. என விளக்குவதே பேரண்ட வெடிப்புக் கொள்கையாகும்.

**2. நிலையான இருப்புக் கொள்கை (Steady - State Theory)**

உலகம் ஆதியில் எவ்வாறிருந்ததோ அதைப்போலவே எவ்போதும் உள்ளது என்பதே நிலையான இருப்புக் கொள்கையாகும். அதாவது உலகம் ஆதியிலிருந்தே நிலையானதாக உள்ளது என்பதை இக்கொள்கை.˙.

**3. சுருக்க - விரிவுக் கொள்கை**

சுருங்குதல் (Contraction), விரிதல் (Expansion) ஆகிய இரண்டினதுழ் படிமுறைகளினூடாக உலகம் தோற்றம் பெற்றதென விளக்குவதே இக்கொள்கையாகும்.

**4. லூயிப்பயன் கொள்கை**

விண்வெளியில் வேகமாகப் பயணம் செய்த வால்வெள்ளி ஒன்று சூரியனுடன் மோதுண்டையால் சிதறுண்டு தோன்றிய துகள்களில் இருந்தே புவி தோன்றியது.

**5. லெக்கரின் கொள்கை**

அண்டத்திலுள்ள சடப்பொருட்கள் உடைந்ததன் மூலம் சூரியன் உருவானது. சூரியனைச் சுற்றிச்சூழலும் கலசமாகப் படித்த சடப்பொருட்களிலுள்ள துணிக்கைகள் ஒன்றோடு ஒன்ற மோதியமையால் பெரும் திணிவுகளாக அவை உடைந்த துண்டுகள் கோள்களாக மாறியன எனக் கூறினார்.

**6. சாப்பியன் கொள்கை**

இவர் சூரியன் குளிர்ச்சியடைவதற்கு முன்னரே கோள்கள் உருவாகின. எனவே கோள்கள் இருட்டிலே பிறந்தன. சூரியனில் ஏற்பட்ட கதிரியக்கத் தொழிற்பாடுகள் கதிர்வீசலை விண்வெளியில் ஏற்படுத்தியது. இதனால் ஏற்பட்ட தாக்கத்தினால் சூரியனிலிருந்து ஒளிக்கற்றைகள் கோள்களை வெளிநோக்கித் தள்ளின எனக் கூறியுள்ளார்.

**7. லாப்பிளாசின் கொள்கை**

வாயுக்களும் தூசிகளும் குளிர்ச்சியடைந்தன மூலம் அவை கோள்களாக மாற்றமடைந்தன. சூரியனைச் சுற்றிப் பல வளையங்களாக இவ்வாயுக்கள் குளிர்ச்சியடைந்து கோள்களாக மாற்றம் அடைந்தது என இவர் கூறியுள்ளார்.

## உயிரின் உற்பத்தி அல்லது உயிரின் தோற்றம்

உயிரின் உற்பத்தி பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட சாள்ஸ் டார்வின் பரிணாமக் கொள்கை (கூர்ப்புக்கொள்கை) பற்றி விளக்கினார். உயிரின் உற்பத்தி பற்றிய விடயம் தற்காலத்திலும் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளுக்குட்பட்ட தொன்றாகவே காணப்படுகின்றது. உயிரின் உற்பத்தி தொடர்பாகப் பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு வகையான கருத்துக்களும் கொள்கைகளும்.

**1. அண்டத்திலுள்ள ஏனைய கோள்களிலிருந்து உயிரினம் பூமிக்கு வந்ததா எனும் கொள்கை**

2. தன்னியல் உயிர்த்தோற்றம் (Spontaneous Generation)

இக்கொள்கையானது குறிப்பிட்ட தாழ்மட்ட உயிர்வாழ் அங்கிகள் உயிரற்ற சடப் பொருளிலிருந்து வந்தவை என விளக்குகின்றது. இக்கொள்கை மிகப் பழைய காலத்தில் வாழ்ந்த மக்களால் நம்பப்பட்டு வந்தது. இக்கொள்கையின் மூலம் மக்கள் கிருமிகளும், பேன் போன்ற பூச்சி வகைகளும் சேற்றிலிருந்து (Mid) வந்தவை எனவும் புழு வகைகள் பாலாடை (வெண்ணெய்), மரம் போன்றவற்றிலிருந்து வந்தவை எனவும் நம்பினர். பின்னைய காலத்தில் லூயிபாஸ்டர் என்பவரால் விஞ்ஞானப் பரிசோதனைகளின் மூலம் இக்கொள்கை தவறானதென நிரூபிக்கப்பட்டது.

**3. இரசாயன கூர்ப்புமுறை (Chemical Evolition)**

இக்கொள்கையானது ஆதிகாலத்திலிருந்தே பௌதீக தாக்கங்களினால் தாழ்மட்ட உயிர் அங்கிகள் தோற்றம் பெற்றன என நம்புகின்றது. மில்லர் (miller) எனும் அறிஞர் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் மூலம் இக்கருத்து உருவானது. இது போன்ற ஆராய்ச்சிகள் தற்போது நடைமுறையிலுள்ளது.

**4. சிறப்புப் படைப்புக் கொள்கை**

உயிரினங்கள் ஒரு தடவையில் அல்லது சில கால இடைவெளியில் பலம் வாய்ந்த சக்தியினால் (கடவுளால்) படைக்கப்பட்டது. என்பது சிறப்புப் படைப்புக்கொள்கை எனப்படும். இக்கொள்கை லூயிபாஸ்ரரினால் ஆதரிக்கப்பட்டது. இவரது கருத்துப்படி சாதிகள் படைக்கப்பட்டது. சாதியிலிருந்து இனம் கூர்ப்பில் தோன்றியுள்ளன. தொல் உயிரியல் சான்றுகளின்படி உயிரினங்கள் படிப்படியாக சிக்கலடைந்துள்ளன. இது சிறப்புப் படைப்புக் கொள்கைக்கு முரணானது. இதனால் இக்கொள்கை ஓர் ஏற்கமுடியாத தொன்றாகும்.

## மல்தூசியரின் சனத்தொகைக் கொள்கை (மோல்த் தூசியக் கொள்கை) (Malthusian Theory)

ஆங்கிலேய நாட்டைச் சேர்ந்த மல்தூஸ் (Malthus) எனும் பொருளியலறிஞரால் கூறப்பட்ட சனத்தொகை பற்றிய கொள்கையே மல்தூசியரின் (மல்தூசின்) சனத்தொகைக் கொள்கை. எனும் பெயரினால் அழைக்கப்படுகின்றது. இக்கொள்கை சனத்தொகை அதிகரிப்பானது உணவு உற்பத்தியைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமானதென விளக்குகின்றது. அதாவது சனத்தொகை அதிகரிப்பானது கணிதப் பெருக்கு வீதத்திலும், உணவு உற்பத்தியானது கூட்டல் வேகத்திலும் அதிகரித்துச் செல்கின்றதென விளக்குகின்றது.

மிகையான குடிசன அதிகரிப்பே யுத்தங்களுக்கும் நோய்களுக்கும் வெள்ளப்பெருக்கு, பூமிநடுக்கம் போன்றவற்றால் ஏற்படும் இயற்கை அழிவுகளுக்கும் காரணமாகுமென இக்கொள்கையில் விளக்கும் மல்தூஸ் இதனைத் தடுக்கவேண்டுமாயின் மக்கள் . தமது குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்கிறாா.

18 ஆம் நூற்றாண்டில் விவசாயம் செய்யும் முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக அநேகமான மக்களுக்குப் போதியளவு வலுவிழக்கத் தொடங்கியது. எனினும் 19 ஆம். நூற்றாண்டுகளில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஏற்பட விரைவான குடிசன அதிகரிப்பும் உணவுப் பற்றாக்குறைப் பிரச்சினைகளும் மீண்டும் மல்தூசியன் கொள்கைகளைப் புத்துயிர் பெற வைத்தது.

# முக்கிய நகரங்களைத் தகர்க்க லஷ்கர் அமைப்பு பாரிய திட்டம்



(புதுடில்லி)

இந்தியாவில் காஷ்மீர் உட்பட சில முக்கியமான நகரங்களில் மிகப்பெரிய அளவில் தாக்குதல்கள் நடத்த லஷ்கர்-இ-தொய்பா அமைப்பு திட்டமிட்டுள்ளதாக அபு ஜிண்டால் தெரிவித்துள்ளான்.

மும்பை தாக்குதலில் தொடர்புடைய அபு ஜிண்டாலை சவுதி நாடு கடத்தி இந்தியாவிற்கு அனுப்பியது. புதுடில்லி விமானநிலையத்தில் கைதான ஜிண்டாலை தற்போது டில்லி சிறப்புப்பிரிவு பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

இவன் லஷ்கர் - இ - தொய்பா அமைப்பின் தகவல் சுரங்கமாக இருக்கின்றான். அவ்வமைப்பின் திட்டங்களை தெரிவித்து வருகின்றான்.

அவன் அளித்துள்ள வாக்கு மூலத்தில் தெரிய வந்துள்ள தகவல்கள் குறித்து பொலிஸ் வட்டாரங்கள் கூறியதாவது, காஷ்மீரைச் சேர்ந்த லஷ்கர் கொமாண்டர் ஒருவர்தான் ஜிண்டாலை அந்த அமைப்பிற்குள் கொண்டு வந்தார்.

அவரது பெயர் அஸ்லம் காஷ்மீரி. இன்னொரு லஷ்கர் தீவிரவாதியான பயாஸ் காக்சி மூலமாக அவர் ஜிண்டாலை மகாராஷ்டிரத்தில் கடந்த 2005 இல் சந்தித்தார். அவருக்கு இந்திய முஸ்லிம் இளைஞர்களைத் தெரிவு செய்து தீவிரவாதப் பயிற்சி அளிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

எனவே அவர் மிகச் சுலபமாக ஜிண்டாலைத் தன் வழிக்குக் கொண்டு வந்தார். மும்பை மீதான தாக்குதலுக்கு முன்பும், பின்பும் ஜிண்டால், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தங்கியுள்ளார். அங்குள்ள முஸாபராபாத்தில் லஷ்கர் அமைப்பின் காஷ்மீர் பிரிவுத் தலைமையுடன் நெருக்கமாகியுள்ளார்.

அந்த நகரில் ஐக்கிய ஜிகாத் சபை என்ற அமைப்பு செயற்பட்டு வருகிறது. தீவிரவாத அமைப்புகளின் கூட்டமைப்பான இது, புதிய தீவிரவாதக் குழுக்களை ஜம்மு காஷ்மீருக்குள், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை ஒட்டிய மரபு சாராத வழிகள் மூலமாக அனுப்பி வைக்கத் திட்டமிட்டு வருகிறது.

அங்கிருந்து நாட்டின் பல பகுதிகளுக்கும் தீவிரவாதிகள் அனுப்பப்படுவார்கள். அவர்கள் பல்வேறு நகரங்களில் வழிபாட்டுத் தலங்களையும், மக்கள் நெரிசல் மிக்க பகுதிகளையும் குறிவைப்பார்கள்.

காஷ்மீரில் சமீபத்தில் நடைபெற்ற தாக்குதல்கள், லஷ்கர் தாக்குதல் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

# கர்நாடகாவில் ஊழல் அமைச்சர்கள் ஆளுனர் பரத்வாஜ் குற்றச்சாட்டு



கர்நாடகாவில் புதிய அரசு பதவியேற்றுள்ள நிலையில், புதிய அமைச்சர்களில் சிலருக்கு குற்றப்பின்னணி இருப்பதாக அம்மாநில ஆளுநர் பரத்வாஜ் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து தாம் முன்னமே தெரிவித்து, அவர்களை அமைச்சர்களாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் யார் யார் அமைச்சர்களாக வேண்டும் என்பதை கட்சி மேலிடம் முன்பே முடிவெடுத்துவிட்டதாக தமக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் ஆளுநர் கூறியுள்ளார்.

இதனால், நிர்வாகத்தை தூய்மைப் படுத்துவதற்கான முயற்சி வெற்றி பெறவில்லை என்றும் பரத்வாஜ் தெரிவித்துள்ளார்.

குற்றப்பின்னணி உள்ளவர்கள் அமைச்சர்களாவதை நாடடு மக்கள் ஏற்பதில்லை என்றாலும், அவ்வாறு நிகழ்வதை ஒரு ஆளுநராக தன்னால் தடுத்து நிறுத்த முடியவில்லை என்று பரத்வாஜ் வருத்தம் தெரிவித்துள்ளார்.

அதனாலேயே, ஆட்சி அமைபபதற்கான உரிமை பெற்றவர்கள் தந்த பட்டியலில் உள்ளவர்களை அப்படியே ஏற்றுக்கொணடதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேநேரத்தில் முதலமைச்சரான ஜெகதீஷ் ஷெட்டர் மீது எவ்வித குற்றச்சாட்டும் இல்லை என்றும் கூறியுள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலில் அதிசயம் நிகழுமாம்


(புதுடில்லி)

வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள குடியரசுத் தலைவர் தேர்தலில் தமக்குச் சாதகமாக அதிசயம் நிகழும் என்று சங்மா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாரதிய ஜனதா, பிஜூ ஜனதா தளம், அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன், குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் சங்மா, சத்தீஸ்கர் மாநிலத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சங்மா, காங் கிரஸ் கொள் கைகளின் மீது தமக்கு எப் போதும் ஈர்ப்பு உண்டு எனக் கூறினார்.

ஆனால் அக்கட்சியில், இந்திரா காந்தி, ராஜீவ் காந்தியைப் போன்ற சிறந்த தலைவர்கள் தற்போது இல்லை என சங்மா தெரிவித்தார்.

குடியரசுத் தலைவர் தேர்தலில் எம்.பி. எம்.எல்.ஏ.க்கள் மனசாட்சிப்படி வாக்களிப்பார்கள் என்று சங்மா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் இரண்டு மலைகளை இணைத்து இடுக்கி அணை கட்டியதன் நினைவாக, ராமக்கல் மெட்டில் அமைக்கப்பட்டுள்ள கலை நயம் மிக்க மிக பிரம்மாண்டமான குறவன் குறத்தி சிலைகளைக் காணலாம்.

# உத்தரப் பிரதேச மாநிலமொன்றில் காதல் திருமணங்களுக்குத் தடை



இந்தியாவில் உத்தர பிரதேச மாநிலத்திலுள்ள கிராமம் ஒன்று காதல் திருமணங்களைத் தடைசெய்துள்ளதுடன் பெண்கள் மீது பலவகையான கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளது.

அசாரா என்ற கிராமத்தின் கவுன்சில் தலைவர்கள், 40 வயதுக்குக் குறைந்த பெண்கள் தனியாக சென்று கடைகளில் பொருட்கள் வாங்கக்கூடாது என்றும் வீட்டுக்கு வெளியே கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்தக்கூடாது என்றும் தடைவிதித்துள்ளனர்.

பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக கிராமக் கவுன்சில் தலைவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் இந்த விவகாரம் பற்றி பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாக செய்திகள் கூறுகின்றன.

காதல் திருமணம் புரிபவர்கள் கிராமத்துக்குள் வசிக்க முடியாது என்றும் அசாரா கிராமக் கவுன்சில் அறிவித்துவிட்டது.

இந்தியத் தலைநகர் டில்லியிலிருந்து 40 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பாக்பாட் மாவட்டத்தில் அசாரா கிராமம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# அக்னி ஏவுகணை சோதனை வெற்றி

(பலாதுர்)

அணு ஆயுதங்களை சுமந்து சென்று எதிரிகளின் இலக்கை தாக்கக்கூடிய அக்னி ஏவுகணை-1 வெற்றிகரமாக பரிசோதித்துப் பார்க்கப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

ஒடிசா மாநிலம் வீலர் தீவில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை மையத்தின் (ஐ.டி.ஆர்.) 4 ஆவது ஏவுதளத்திலிருந்து நேற்று முன்தினம் காலை 10.10 மணிக்கு சோதனை முயற்சியாக இந்த ஏவுகணை ஏவப்பட்டது.

இதுகுறித்து, ஐ.டி.ஆர். இயக்குநர் எம்.வி.கே.வி.பிரசாத் கூறியதாவது:

இந்திய இராணுவத்தின் சார்பில, தயாரிக்கப்படும் ஏவுகணைகளில் ஒன்றை தேர்ந்தெடுத்து, வீரர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக, அவ்வப்போது பரிசோதனை நடத்துவது வழக்கம். அந்த வகையில் நேற்று முன்தினம் ஏவப்பட்ட இந்த ஏவுகணை, திட்டமிட்டபடி 700 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இலக்கை வெற்றிகரமாக தாக் கியது.

12 தொன் எடையும், 15 மீற்றர் நீளமும் கொண்ட இந்த ஏவுகணை, 1000 கிலோ கிராம் அணு ஆயுதங்களை சுமந்து சென்று, துல்லியமாக எதிரிகளின் இலக்கை தாக்கி அழிக்கக்கூடியது இந்த ஏவுகணை என்றார் பிரசாத்.

இராணுவ ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தால் (டி.ஆர.டி.ஓ.) முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் அக்னி ஏவுகணை-1 உருவாக்கப்பட்டது. இது, ஏற்கெனவே இந்திய இராணுவத்தில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனினும், அவ்வப்போது இராணுவம் இதை பரிசோதிப்பது வழக்கம். கடைசியாக, கடந்த ஆண்டு டிசம்பர் 1 ஆம் திகதி அக்னி ஏவுகணை-1 பரிசோதித்துப் பார்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

# சோனியா அளிக்கவுள்ள விருந்தை புறக்கணித்தார் மம்தா பானர்ஜி



(புதுடில்லி)

ஜனாதிபதி தேர்தலுக்கு முதல்நாள் இரவு, ஐக்கிய முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கு, காங்கிரஸ் தலைவர் சோனியா விடுத்துள்ள விருந்து அழைப்பை மம்தா பானர்ஜி புறக்கணித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 19 ஆம் நடக்கிறது. அதற்கு முதல்நாள் இரவு ஐக்கிய முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கு விருந்தளிக்கும் நிகழ்ச்சிக்கு காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஏற்பாடு செய்துள்ளார்.

இதற்கான அழைப்பை திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜியிடம், சோனியாவின் செயலாளர் அகமது படேல், தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

ஆனால், கொல்கத்தாவில் 21 ஆம் திகதி நடைபெறும் பேரணியில் கலந்து கொள்ள் இருப்பதால், விருந்தில் கலந்து கொள்ள இயலாது என மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

சோனியாவின் விருந்தழைப்பை மம்தா பானர்ஜி நிராகரிப்பது இது இரண்டாவது முறை. ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் 3 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கடந்த மே மாதம் சோனியா காந்தி அழைப்பு விடுத்த விருந்து நிகழ்ச்சியிலும் மம்தா கலந்து கொள்ளவில்லை.

ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு என்பதை திரிணாமுல் இன்னும் அறிவிக்காமல் உள்ளது. அன்சாரியை இரண்டாவது முறையாக நிறுத்த காங்கிரஸ் விரும்புகிறது.

கடந்த துணை ஜனாதிபதி தேர்தலில் அன்சாரியை இடதுசாரிகள் முன்நிறுத்தியதால், அன்சாரிக்கும் மம்தா ஆதரவளிக்கமாட்டார் எனத் தெரிகிறது

# யாசர் அரபாத் விஷம் வைத்தே கொலை!



பாலஸ்தீன முன்னாள் தலைவர் யாசர் அரபாத் அடையாளம் தெரியாத நபரால் விஷம் வைத்துக் கொல்லப்பட்டுள்ளார் என்று ஜோர்தான் டாக்டர் ஒருவர் தெரிவித்தார்.

அரபாத்தின் மருத்துவ அறிக்கைகள் அவருக்கு நச்சுப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கிறது என்றும் ஆனால் அப்போது இதுகுறித்து ஆய்வுசெய்யப்படவில்லை என்றும் அப்துல்லா அல்-பஷீர் என்பவர் தெரிவித்ததாக ஜிங்குவா செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

முன்னதாக அரபாத் பொலோனியம் விஷம் கொடுத்து கொல்லப்பட்டார் என்று செய்திகள் வெளியானதையடுத்து இதுகுறித்து விசாரணை நடத்த பாலஸ்தீன அதிபர் மெஹ்மூத் அப்பாஸ் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளருக்கு 18 வருட சிறைத் தண்டனை



எத்தியோப்பிய பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ், எத்தியோப்பியாவின் பிரபல ஊடகவியலாளர் ஒருவருக்கு 18 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

எஸ்கின்த நேகா என்ற ஊடகவியலாளருக்கும் மேலும் 23 பேரும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் அமெரிக்காவை தளமாக கொண்டுள்ள கின்பொட் செவன் என்ற குழுவிற்கும் தொடர்பு இருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தண்டனை வழங்கப்பட்ட எஸ்கின்டருக்கு கடந்த மே மாதம் 'பென்அமெரிக்கன்ஸ் சுதந்திர எழுத்தாளர்' விருது வழங்கப்பட்டிருந்தது.

இது தவிர எதிர்கட்சியின் உறுப்பினர் என்டுவாலம் அரகேவிற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எத்தியோப்பிய பயங்கரவாத தடை சட்டம் முற்றிலும் நடைமுறைக்கு அப்பாற்பட்டது என்று பல மனித உரிமை அமைப்புக்கள் தொடர்ந்தும் குற்றஞ்சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

# சிரிய அரசாங்கத்திற்கு எதிராக ஐ.நா.வின் தீர்மானம் வேண்டும்

## – எதிர்க்கட்சி கோரிக்கை



(டமஸ்கஸ்)

சிரிய இராணுவத்தால் நேற்று முன்தினம் ஹமா பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 200 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவத்தைக்கண்டித்துள்ள அந்நாட்டு எதிர்க்கட்சியான சிரிய தேசியக் கவுன்சில் சிரிய அரசாங்கத்திகு எதிராக ஐ.நா.தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக எதிர்க்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பஷர் அல் அஸாத் அரசாங்கத்துக்கு எதிராக, சர்வதேசப் பாதுகாப்புக் கவுன்ஸிலின் சட்டக்கோவைக்கு அமைவாக, உறுதியானதும் துரிதமானதுமான தீர்மானமொன்று நிறைவேற்றப்படுவதன் மூலம், ஆளும் தரப்பின் இரத்த வெறியாட்டம் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். அதன் மூலம் நாட்டு மக்களினதும் மத்தியகிழக்குப் பிராந்தியத்தினதும் பாதுகாப்பு, அமைதி என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

"சிரியாவின் ஆளும் தரப்பு மேற்கொண்டு வரும் படுகொலைகள் பற்றிய தகவல்கள் வெளித்தெரியாமல் மறைக்கப்பட்டு வருகின்றன. நிராயுதபாணிகளான சிரிய மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் இத்தகைய இழிவான குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்தும் முழுமையான பொறுப்பை பாதுகாப்புக் கவுன்ஸில் ஏற்றுக்கொள்ளும் என நாம் எதிர்பார்க்கின்றோம்" என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரயில் – லொறி விபத்து தென்னாபிரிக்காவில் 24பேர் பலி



தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற ரயில்-லொறி விபத்தொன்றில் குறைந்தபட்சம் 24 பேர் உயிரிழந்துள்ளனர். பண்ணையொன்றுக்கு ஊழியர்களை ஏற்றிச்சென்ற லொறியொன்று, சரக்கு ரயிலொன்றுடன் மோதியதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது. தென்னாபிரிக்காவின் கிழக்குப்பிராந்தியத்திலுள்ள எம்பும லாங்கா நகரில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மேலும் 25 பேர் காயமடைந்துள்ளனர்.

11 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் இருவர் வைத்தியசாலைகளுக்கு கொண்டுசெல்லப்படும் வழியில் உயிரிழுந்ததாகவும் ஏனையோர் பல்வேறு சிகிச்சை நிலையங்களில் உயிரிழுந்ததாகவும் மபுஸா மாகாண சமூக பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

மேற்படி லொறியின் உரிமையாளர் தற்போது விசாரிக்கப்பட்டு வருகிறார். ரயில் வரும் தூரத்தை தவறாக கணிப்பிட்டு, தண்டவாளத்தை கடப்பதற்கு அவர் முயன்றிருக்கலாம் என அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

# விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்பட மாட்டாது

## – அமெரிக்கா திட்டவட்ட அறிவிப்பு

பாகிஸ்தானில் ஆளில்லா விமானங்கள் மூலமாக தாக்குதல் நடத்துவதை நிறுத்த மாட்டோம் என அமெரிக்கா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் எல்லையில் உள்ள பாகிஸ்தான் பழங்குடியினப் பகுதிகளில் தீவிரவாதிகள் மீது அமெரிக்கா ஆளில்லா விமானங்கள் மூலம் குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்துவதை நிறுத்துவது தொடர்பாக அமெரிக்காவுக்கும், பாகிஸதானுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

பேச்சுவார்த்தையின் போது, பல்வேறு மாற்று யோசனைகளை பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும், அதை அமெரிக்கா ஏற்கவில்லை என்றும் கூறப்படுகிறது.


தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்த எ.்.ப்-16 ரக போர் விமானங்களைப் பயன்படுத்துவது, உளவுத்துறை மூலம் தகவல் திரட்டி பயங்கரவாதிகளின் மறைவிடங்களை அறிந்தபின் தாக்குதல் நடத்துவது உள்ளிட்ட யோசனைகளை பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளும், ஐ.எஸ்.ஐ அதிகாரிகளும் முன்வைத்தனர்.

இது குறித்து பாகிஸ்தான் இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில் அல்கொய்தா தீவிரவாதிகளை முற்றிலும் அழிப்பது வரை ஆளில்லா விமானங்களின் மூலம் நடத்தப்படும் தாக்குதல் தொடரும் என்று அமெரிக்கா தரப்பில் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டனர்.

அவர்களது நோக்கம் தலைமறைவாக உள்ள அல்கொய்தாவின் தலைவர் அய்மான் அல் ஜவஹிரியை பிடிப்பது தான் என்று தெரிவித்தார்.

இரு நாடுகளும் ஒப்புக் கொளளும் வகையில், ஒரு தீர்வை எட்ட விரும்புகிறோம் என்று பாகிஸ்தான் வெளிவிவகாரத் துறை செயலாளர் மோஸம் கான் தெரிவித்துள்ளார்

# அஷ்ரப் பிரதமராக நிலைப்பாரா? 25 வரை உச்ச நீதிமன்றம் கெடு



பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி ஜர்தாரி மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து வரும் 25ஆம் திகதிக்குள் விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரபுக்கு அந்நாட்டு உச்ச நீதிமன்றம் காலக்கெடு விதித்துள்ளது.

ஆசிப் அலி ஜர்தாரி மீதான குற்றச்சாட்டுகள் குறித்து சுவிஸ் நாட்டிடமிருந்து தகவலைப் பெறுவதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் பிரதமர் அஷ்ரபிடம் கூறியுள்ளது. இதை நிறைவேற்றத் தவறினால் நீதிமன்ற அவமதிப்புக்கு உள்ளாக நேரிடும். முன்னாள் பிரதமர் யூசுப் ரஸா கிலானி, இதே பிரச்சினைக்காக அதாவது அதிபர் மீது விசாரணை நடத்த ஒப்புதல் அளிக்காததால் பதவியிழக்க நேரிட்டது. நீதிமன்ற அவமதிப்புக்குள்ளாகி அவர் பதவி பறிபோனது.

நீதிமன்ற அறிவுரையின்படி சுவிஸ் அதிகாரிகளுக்கு பிரதமர் அஷ்ரப் கடிதம் எழுதி அது தொடர்பான விவரத்தை ஜூலை 25ஆம் திகதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்வார் என எதிர்பார்ப்பதாக நீதிபதி ஆசிப் சயீத்கான் தெரிவித்தார்.

இதைச் செய்யத் தவறும் பட்சத்தில் நீதிமன்ற வரம்புக்குட்பட்டு அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று 5 பேர் கொண்ட அமர்வு எச்சரித்துள்ளது.

சட்டமா அதிபர் மூலம் அஷ்ரப் அளித்திருந்த பதில் மனுவை நீதிபதிகள் நிராகரித்தனர்.

இதவேளை அதிபர் உள்ளிட்ட உயர் பதவி வகிப்பவர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளிலிருந்து விலக்கு அளிக்கும் புதிய மசோதாவுக்கு நாடாளுமன்றம் சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மசோதாவில் அதிபர் ஜர்தாரி கையெழுத்திட்டு ஒப்புதல் அளித்துள்ளார்.

# கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் சட்டம் இரத்து



மலேசியாவில் கருத்து வெளியிடும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலான சட்டங்களை இரத்துச் செய்யவுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் மலேசிய அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது.

இந்தச் சட்டத்தின் பிரகாரம் அரசாங்கத்துக்கு எதிராக கருத்து வெளியிடுபவர்களை தேசத்துரோக குற்றச்சாட்டுக்களின் பிரகாரம் இலகுவாக கைதுசெய்து தண்டனை வழங்கலாம் என்பது குறிப்பிடதக்கது. மலேசியா பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றதன் பின்னர் மலேசியாவில் தற்போதைய பிரதமர் சார்பான கட்சியே பெரும்பாலும் ஆட்சியிலிருந்து வருகின்றது.

அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுபவர்களை இந்த சட்டத்தின் மூலம் ஒடுக்கி வந்தமையால்தான் குறித்த ஒரு கட்சியால் நீண்ட காலம் ஆட்சி செய்யமுடிந்துள்ளதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்திவருகின்றன். இரத்துச் செய்யப்படவுள்ள சட்டத்துக்குப் பதிலாக புதிதாக தேசிய ஒற்றுமைச் சட்டம் அல்லது தேசிய இணக்கப்பாட்டுச் சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்தச் சட்டம் அனைத்து மதத்தவர்களின் உரிமைகளை பாதுகாப்பதுடன் அவர்களின் கலாசாரங்களுக்கும் மதிப்பளிக்கும் எனவும் மலேசிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# தண்ணி காட்டும் குற்றவாளிகள் கோட்டைவிடும் நிலையில் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டு நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் வேறு மாவட்டங்களில் தலைமறைவாகி வருவதன் காரணமாக அவர்களைத் தேடிப் பிடித்து கைதுசெய்வதென்பது பொலிஸாருக்கு சவால் மிகுந்ததாக உள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டே இவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யாழ். மாவட்டத்தில் இவ்வாறு நடைபெறும் குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் வெளிமாவட்டங்களில் சென்று தலைமறைவாகி விடுகின்றனர். இவர்களைத் தேடி இங்கிருந்து பொலிஸ் குழுக்கள் அந்த மாவட்டங்களுக்குள் சென்று கைதுசெய்யவேண்டியுள்ளது. இது சவால் மிகுந்ததாகவுள்ளது. அப்படி தேடிச் சென்றாலும் அந்தப் பிரிவின் கிராம அலுவலருக்குக் கூட அவரைப் பற்றித் தகவல் தெரியாமல் உள்ளது எனவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

கடந்த வாரம் இவ்வாறு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 41 பேரை பொலிஸார் பிடித்து கைதுசெய்திருப்பதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் 15 பாரிய குற்றச்செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன. இதில் யாழ். பிறவுண் வீதியில் வீடு ஒன்று உடைக்கப்பட்டு 23500 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளது.

ஓட்டுமடம் பகுதியில் உள்ள வீடு ஒன்று உடைக்கப்பட்டு 21 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளது. இதேவேளை, யாழ். கன்னாதிட்டிப் பகுதியில் வீட்டினைத் திறந்துவிட்டு நித்திரையில் இருந்தவர்களது 274000 ரூபா பெறுமதியான பணம், நகை என்பன திருடப்பட்டுள்ளது.

புத்தளம் பகுதியில் இருந்து வந்து குறித்த வீட்டை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்தவர்களிடமே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது.

கொழும்புத்துறைப் பகுதியில் 4 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த அதே இடத்தைச் சேர்ந்த 40 வயது மதிக்கத்தக்கவரைத் தேடி பொலிஸார் வலை விரித்து வருகின்றனர். தென்பகுதி கடவத்த பிரதேசத்தில் 65 இலட்சம் ரூபா பெறுமதியான வாகனம் ஒன்றை வாங்கி பணம் கொடுக்காது மோசடி செய்த ஒருவர் மானிப்பாய் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு அவருக்கு எதிராக வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் பகுதியில் 15 வயதுச் சிறுமியைக் கடத்தி பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபர் தலைமறைவாகியிருக்கின்றார்.

கடந்த 10 ஆம் திகதி இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. சந்தேகநபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் 2 பாரிய குற்றங்கள் நடைபெற்றுள்ளன. ஒன்று 24 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆடுகள் களவு போனது. சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளார்.

பொருட்களை வாங்கிவிட்டு 3 இலட்சம் ரூபா காசோலையை வழங்கிவிட்டு பண மோசடியில் ஈடுபட்ட ஒருவர் தலைமறைவாகியுள்ளார். இவரைக் கைதுசெய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, மானிப்பாய் பொலிஸ் பிரிவில் 3 கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண் ஒருவரது சங்கிலியை அறுத்துச் சென்றது. மற்றையது வட்டுக்கோட்டைப் பகுதியில் வீதியால் சென்றுகொண்டிருந்த பெண்ணின் கைப்பையை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அறுத்துச் சென்றுள்ளனர். சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

ஊர்காவற்றுறைப் பகுதியில் கத்தியால் குத்தி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் இனங்காணப்பட்டுள்ளார். தலைமறைவான அவரை பொலிஸார் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் கொடிகாமம் பகுதியில் தமையன் தம்பி சண்டையில் தம்பியை துரத்திக் கொண்டு சென்ற தமையனை பின்புறமாக இனந்தெரியாத சந்தேகநபர் தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த 15 குற்றச்செயல்களிலும் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 3 குற்றச்செயல்களில் சந்தேகநபர் தெரியாததால் கைதுசெய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார். (பா)

## புலிகள் மீதான...

மத்திய உள்துறை அமைச்சின் செயலாளர் தர்மேந்திரா ஷர்மா தெரிவித்தார். விடுதலை புலிகள் இயக்கமானது 1991 ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைக்கு பின்னர் இந்தியாவில் தடை செய்யப்பட்டது.

இதன் பின்னதாக இந்தத் தடை உத்தரவானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நீடிக்கப்பட்டு வருகிறது. 2009 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு அவ் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறந்ததாக இலங்கை அரசு அறிவித்த பின்னும் இத் தடை நீடிக்கிறது.

இவ்வியக்கத்தில் அங்கம் வகித்த முன்னாள் உறுப்பினர்கள் உலகின் பல பாகங்களிலும் இருப்பதாகவும் அவர்கள் இவ்வியக்கத்தை தொடர்ந்தும் கட்டியெழுப்ப முற்படுவதாகவும் இந்திய மத்திய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டாலும் அதில் அங்கம் வகித்தவர்கள் தனித் தமிழீழக் கனவை இதுவரையிலும் கொண்டிருக்கின்றனர். இதனை நிறைவேற்றுவதற்காக அவர்கள் சர்வதேச ரீதியில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குற்றச் செயல்கள்...

பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக செயற்பட்டமை, சட்டவிரோதமாக மண் ஏற்றியமை, மது மற்றும் போதைப்பொருள் பாவனை, பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தல் சம்பந்தமாகவே இவ்வழக்குகள் பொலிஸாரினால் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டிருப்பதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

மது அருந்தியது சம்பந்தமாக நான்கு வழக்குகளும் கஞ்சா சம்பந்தமாக 2 வழக்குகளும் சட்டவிரோதமாக மண் ஏற்றியமை தொடர்பில் 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் கோப்பாய் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளது.

மேலும் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாகச் செயற்பட்டவர்கள் மீதும் 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தவர்கள் மீது 13 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். (பா)

## போதனா...

சிபார்சுக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

இந்தக் குழுவின் தலைவராக வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, உப தலைவராக சட்டத்தரணி ரங்கனும் தற்காலிக செயலாளராக இரா. செல்வவடிவேல் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாகம் சார்ந்த விடயம், நோயாளர்கள் சார்ந்த விடயம், சுகாதாரம் சார்ந்த விடயம், உட்கட்டமைப்பு விடயங்கள் என்பன பற்றி இக்குழு ஆராய்ந்து பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கு உடனடித் தீர்வைக் காணும் நோக்கில் இக்குழு செயற்படவுள்ளது. (02)

## இரு...

கட்டடமும் திறந்து வைக்கப்படவுள்ளது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் கட்டடம் காலை 9 மணிக்கும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் கட்டடம் காலை 11 மணிக்கும் திறந்து வைக்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.எ.சந்திரசிறி ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

# குடிசைக் கைத்தொழில் ஊக்குவிப்பு முள்ளியவளையில் கண்காட்சி

பத்து இலட்சம் மனைப்பொருளாதார அலகுகளை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடிசைக் கைத்தொழிலை ஊக்குவிக்கும் வகையிலான கண்காட்சி ஒன்று முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 28, 29 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை நடைபெறவிருக்கும் இக்கண்காட்சியில் ஆர்வம் உள்ள அனைவரும் பங்குபற்றி பயனடையலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (04)

## யுத்தத்துக்குப்...

அழைக்கப்பட்டுள்ளனர். சிறப்பு விருந்தினராக இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா அழைக்கப்பட்டுள்ளார் என யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மேலும் தெரிவித்துள்ளார்.

## பண்ணாகம்...

மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க இருப்பதாகவும் தெரிவித்தார். இதன்போது குறித்த வீதியின் நிலைமைகளை பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், வீதியின் புனரமைப்புக் குறித்து ஏதேனும் திட்டத்தின் ஊடாக உரிய நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வதாகத் தெரிவித்தார்.

இவ் விஜயத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினருடன் வலி. மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரும் வலிகாமம் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அமைப்பாளருமான பாலகிருஷ்ணன், பிரதேச சபை உறுப்பினரும் கட்சியின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளருமான ஜீவா மற்றும் பிரதேச நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஆளும் கட்சியுடன்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் எட்டப்பட்டிருக்கின்ற உடன்பாட்டின்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அக்கட்சியின் தலைவர்கள் பி.பி.சி தமிழோசையிடம் தெரிவித்தார்கள். முன்னதாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட வேண்டும் என்று அக்கட்சிக்குள் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

தமது கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து போட்டியிடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்தும் அழைப்புகள் விடுவிக்கப்பட்டிருந்தன. இதற்கிடையில், அரசில் அங்கம் வகிக்கும் மற்றைய சில முஸ்லிம் கட்சிகளும் முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தன. நீண்டகாலமாக, தமது நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிக்காதிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடந்த கட்சியின் உயர்மட்ட கலந்தாலோசனையின் பின்னர் ஆளும் கட்சியுடனேயே இணைந்து போட்டியிடுவதாக அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரது சகோதரர் அமைச்சர் பசில ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோருடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பேச்சு வார்த்தை நடத்தியிருப்பதாக அக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

## காணாமற்போதல்...

விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய 13 சம்பவங்கள் தொடர்பாக ஐ.நா. செயற்பாட்டுக் குழு ஆராய்ந்துள்ளது.

அத்துடன் தற்போது புதிதாக கிடைக்கப் பெற்ற மற்றும் ஏற்கனவே கிடைக்கப் பெற்ற காணாமற்போனோர் தொடர்பான 200 சம்பவங்களையும் இவ்வமைப்பு தனது கவனத்தில் எடுத்துள்ளது.

இலங்கை உட்பட்ட 33 உறுப்பு நாடுகளில் இடம்பெற்ற காணாமற்போன சம்பவங்கள் தொடர்பாக இக்கூட்டத் தொடரில் ஐந்து மனித உரிமை வல்லுனர்கள் ஆராய்ந்துள்ளனர்.

ஜெனிவாவில் 2012 யூலை 9 தொடக்கம் 13 வரை இடம்பெற்ற 97 ஆவது கூட்டத் தொடரில், காணாமற் போனோர் தொடர்பான கோரிக்கைகள், பொதுவான குற்றச்சாட்டுக்கள் மற்றும் பல்வேறு அரசாங்கங்களின் பதில்கள் போன்றவையும் மீளாய்வு செய்யப்பட்டன.

பலவந்தமாக காணாமற்போன பெண்கள் மற்றும் சிறார்கள் தொடர்பில் அனைத்து' நபர்களையும் பலவந்தமாக காணாமற் போதலிலிருந்து பாதுகாத்தலுக்கான இரு ஏற்பாடுகள் தொடர்பான பொதுவான கருத்துக்களும் இக்கூட்டத்தொடரில் கலந்துரையாடப்பட்டன. இதன் 98 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் 2012 ஒக்ரோபர் 31 தொடக்கம் நவம்பர் 9 வரை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அரசுக்கு...

அங்கு இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. பொலிஸாரின் செயற்பாடுகள் முழுமையாக ஸ்தம்பிதமடைந்துள்ளது. பத்து பன்னிரெண்டு பிடியாணைகள் உள்ள குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடுகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்ட மேடைகளில் உரையாற்றுகின்றார்கள். பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளன. தொழிலாள வர்க்கத்தினர் வாழ முடியாது தவிக்கின்றனர். விவசாயிகள் பங்களிப்புச் செய்து ஆரம்பிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் கைவிடப்பட்டு விவசாயிகள் நடுத் தெருவில் கைவிடப்பட்டுள்ளனர்.

ஊழியர் சேமலாப நிதி நம்பிக்கை நிதியத்திலுள்ள பணம் நட்டமடையும் நிறுவனங்களில் முதலீடு செய்யப்படுகின்றது. மக்களின் குறைகளைக் கூற முடியாது வாழ முடியாது பெரும் சிரமத்தில் வாழ்கின்றனர். அரசாங்கத்தின் இச் செயற்பாடுகளை எதிர்த்து அரச, தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வலியுறுத்தியே ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளோம்.

அரசியல் கட்சி பேதங்களை மறந்து அனைவரும் இப் பொது எதிர்க் கட்சிகளின் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். அதே போன்று மக்களும் தமது வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்காமல் ஓரணியில் திரண்டு இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்றார்.


# உருத்திரகுமாருக்கு இலங்கை வருமாறு அழைப்பு விடுத்துள்ள முரளீதரன்

இலங்கைக்கு வந்து இங்கு நடைபெறும் அபிவிருத்திகளை நேரில் பார்வையிடுமாறு விடுதலைப் புலிகளின் வி.உருத்திரகுமாருக்கும், அவரின் ஆதரவாளர்களுக்கும் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர்ந்த மக்கள் அவர்களினால் முளைச்சலவை செய்யப்பட்டுள்ளனர். உருத்திரகுமாரன் போன்றோர் நாடுகடந்த அரசாங்கம் எனக்கூறப்படுவதை அமைத்தடுன் மக்களை திரட்டுகின்றனர். நாம் அவர்களை இங்கு நடைபெறும் அபிவிருத்திகளையும் மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதையும் நேரில் பார்வையிடுமாறு அழைக்க வேண்டும் என பிரதியமைச்சர் முரளிதரன் கூறினார்.

புலம்பெயர்ந்த மக்களை நாம் புறக்கணிக்கக் கூடாது. ஏனெனில் அவர்கள் இலங்கையர்கள். புலம்பெயர்ந்த மக்களை புறக்கணித்தால் பிரச்சினை மேலும் நீடிக்கும். நாம் அவர்களுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடி, விடயங்களை அவர்களுக்கு விளக்க வேண் டும். இதன்மூலம் தான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என அவர் கூறினார்.

# மிகப்பெரிய நீர் மின் உற்பத்தித் திட்டம் ஜனாதிபதியால் திறந்து வைப்பு



இலங்கையில் மிகப் பாரியதும் இறுதியாக மேற்கொள்ளப்பட்டதுமான மேல் கொத்மலை நீர்மின்னுற்பத்தித் திட்டம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நேற்று மதியம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அந்தத் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேல்கொத்மலை நீர்மின் திட்டம் மூலம் உற்பத்தி செய்யப்படும் 150 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்சார கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்திற்கு ஜப்பான் யென் 37, 817 மில்லியனும், இலங்கையின் நிதியமைச்சு மற்றும் மின்வலு, எரிசக்தி அமைச்சின் ஊடாக 8,548 மில்லியன் ரூபாவும் முதலிடப்பட்டுள்ளது. நீர் மின்திட்ட ஆரம்ப விழாவில் ஜப்பானின் இலங்கைத் தூதுவர் நொபுஹிதொ ஹொபோவும் பங்கேற்றிருந்தார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் துரித அபிவிருத்தி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையில் ஊடகக் குழுவினர் நேற்றுப் பார்வையிட்டனர். முதலில் 1820 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு மகளிர் கல்லூரிக்கு ஊடகவியலாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டு துரைசார் அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டனர்.

அதன் பின்னர் மட்டக்களப்பு பஸ்நிலையத்தின் அபிவிருத்திப் பணிகள், படுவான்கரை குடி நீர் விநியோகத் திட்டம், உன்னிச்சைக்குளம் அபிவிருத்தித் திட்டம், மட்டக்களப்பு செங்கலடி கறுப்புப்பாலத்திட்டம், பாலமீன்மடு ஆழல் கற்கை நிலையம் என்பவற்றைப் பார்வையிட்டனர். இந்த ஊடகச் சுற்றுலாவில் அரசாங்க தகவல் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயம் சந்திரபால லியனகே, தேசிய ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க, அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஏ. ஹில்மி மொஹமட் ஆகியோர் உட்பட கிழக்கு மாகாண ஊடக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இத்தகையதொரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்படுவதை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்த வேண்டும். நாட்டிற்கு வந்த பலர் என்னிடம் உரையாடும்போது, தமது விஜயத்தின் மூலம் இங்குள்ள உண்மை நிலைவரத்தை கண்டு கொண்டதாக கூறினர்.

# 35 இலட்சம் ரூபா கட்டணத்தை கட்டத்தவறிய டயலொக் பாவனையாளர்

# இந்தியாவில் மருத்துவர் பட்டம் பெறவுள்ள 50 வயது இலங்கை மாணவன்

(சென்னை)

இந்தியாவின் வயது கூடிய மருத்துவப் பட்டப்படிப்பு மாணவர் இலங்கையரே என த டைம்ஸ் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.

சரவணபவன் என்பவர் தம்மீதான அவதானிப்பு சுற்றறிக்கையை இரத்து செய்யுமாறு கோரி சென்னை மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்த அவருக்கு தற்போது 50 வயதாகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் 170 வருட வரலாற்றில், 50 வயது மாணவர் ஒருவர் கல்வி பயிலும் முதல் சந்தர்ப்பம் இது வாகும். அவர் இரண்டாம் வகுப்பு பரீட்சையை மாத்திரம் 16 வருடங்களாக எழுதியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மேல் நீதிமன்றத்தில் அவரது வழக்கு நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கடந்த வருடங்களில் அவர் தமது மாணவர் விசாவை விசாலித்துக் கொண்டே நாட்களை கடத்தியதாக சட்டத்தரணி தெரிவித்தார்.

1984 ஆம் ஆண்டு சென்னை வானூர்தி நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தின் பின்னணியில் இருப்பதாக கருதப்பட்டு, அவருக்கு 1987 ஆம் ஆண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் அவர் குற்றமற்றவர் என 2000ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்ட போதும், அவர் தொடர்ந்து கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார். இதனை இரத்துச் செய்யுமாறு கோரியே அவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். எனினும், அதனை நீதிமன்றம் நிராகரித்தது.

(கொழும்பு)

டயலொக் ரெலிகொம் நிறுவனத்திற்கு தொலைபேசி பாவனைக்கான கட்டமாக 35 இலட்சம் ரூபாவை பறுவைத்துவிட்டு, நம்பிக்கை மோசடி செய்த குற்றச்சாட்டுக்குள்ளான கைத்தொலைபேசிச்சேவை வாடிக்கையாளர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார்.

இரத்மலானையைச் சேர்ந்த இச்சந்தேக நபர், 3.5 மில்லியன் ரூபா கட்டணத்தை மோசடி செய்ததாக டயலொக் ரெலிகொம் நிறுவனத்தின் கடன் முகாமையாளரினால் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி நபரிடம் 21.04.2010 ஆம் திகதியளவில் 21,500 ரூபா வைப்புப் பணம் பெற்றுக் கொண்டு அவருக்கு ரோமிங் வசதி வழங்கப்பட்டதாக முறைப்பாட்டாளர் தெரிவித்திருந்தார். மேற்படி சிம் அட்டையை மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்படக் கூடாது எனவும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடாது எனவும் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை இவ் வாடிக்கையாளர் மீறிவிட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2010 ஏப்ரல் முதல் 14.05.2010 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் இப்பெருந்தொகை கட்டணத்தை அவர் மோசடி செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் நேற்று கொழும்பு கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரட்ன முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். சந்தேக நபரின் மீதான குற்றச்சாட்டை அவரின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் கிங்ஸ்லி ஹெட்டியாராச்சி நிராகரித்தார்.

தன் கட்சிக்காரருக்கு வழங்கப்பட்ட சிம் அட்டை பாகிஸ்தான் பிரஜையொருவருக்கு வழங்கப்பட்டதாகவும் எனவே அப்பாகிஸ்தான் பிரஜையே இதற்கு பொறுப்பு எனவும் வழக்குரைஞர் கிங்ஸ்லி ஹெட்டியாராச்சி வாதாடினார். தனது கட்சிக்காரர் தொலைபேசி இணைப்பைத் துண்டிக்குமாறு கோரியும் அதை செய்வதற்கு, இந்நிறுவனம் தவறிவிட்டது எனவும் அவர் கூறினார்.

அதேவேளை இத்தொலைபேசி அழைப்புகள் வெளிநாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மேற்படி பாகிஸ்தான் பிரஜையுடன் சந்தேக நபர் தொடர்புகொண்டிருந்ததாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேக நபரை தலா 500,000 ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் இவ்வழக்கை ஒகஸ்ட் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# தமிழர் ஒருவரின் வீடு கனடாவில் தீக்கிரை

கனடாவின் மார்க்கம் பகுதியில் அமைந்துள்ள தமிழர் ஒருவரின் வீட்டில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக மூன்று பேர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், வீடும் தீக்கிரையாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் அதிகாலை சுமார் 4:30 மணியளவில் இத்தீ விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ஸ்டீல் அவெனியூ- மார்க்கம் றோட்டுக்கு அண்மையில் ஈஸ்வல் ட்ரைவ்வில் அமைந்துள்ள தமிழருக்குச் சொந்தமான வீடே தீக்கிரையாகியுள்ளது.

குறித்த வீட்டில் குழந்தைகள் உட்பட 12 பேர் தங்கியிருந்துள்ளனர். இவர்களில் 6 பேர் விருந்தினராக தங்கியிருந்தார்கள் எனவும் வீட்டின் கீழ்தளத்தில் இருந்த மூவருக்குமே காயம் ஏற்பட்டதாகவும், இவர்கள் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்று அறிய வந்துள்ளது.

இவர்களில் ஒருவர் தீக்காயங்களுடன் ரொறொண்ரோ மருத்துவமனையிலும், மற்றைய இருவரும் புகையினை உட்சுவாசித்தமையால் ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக மார்க்கம் ஸ்ரோ. ப்வில் மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

குறித்த வீடு தீப்பற்றியதை யடுத்து, தீயணைப்புப் படையினருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் அவர்கள் 30 நிமிடம் தாமதமாக வந்தனர் எனவும் அயலவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதனால் தான் பாரிய சேதங்கள் ஏற்பட்டதாகவும், மீட்புப்படையினர் வாமல் வீட்டினுள் இருந்தவர்கள் வெளியே வரவில்லை எனவும் அயலவர்கள் கருத்துத் தெரிவித்தனர். கார்தரிப்பிடத்தினுள் (காராஜ்) ஏற்பட்ட தீ வெடிப்பே இதற்குக் காரணமாக இருக்கலாம் என ஊகிக்கப்பட்டாலும் தீ விபத்துக்கான சரியான காரணம்- இது வரை தெரியவரவில்லை.

வீட்டிற்கு ஏற்பட்ட சேதம் $ 900,000 ஆக இருக்கும் என மதிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதி மார்க்கம் 7 ஆம் வட்டாரத்துக்குச் சேர்ந்த பகுதியாக இருப்பதனால் நகரசபைத் தலைவர் லோகன் கணபதி பாதிக்கப்பட்ட குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல்கள் தெரிவித்துள்ளார்.

# மதன மோதகம் வைத்திருந்தவர் கைது

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் மதன மோதக (போதைப் பொருள்) வில்லைகளை வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பலாந்தொட விசேட பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் மூலமாக இச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் போது சந்தேக நபரிடமிருந்த 20 மதன மோதக வில்லைகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர் எம்பிலிபிட்டிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ரயிலுடன் மோதி விபத்து இருவர் மரணம்

(கொழும்பு)

காலி ஹிந்தோட்ட பகுதியில் வாகனம் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. பாதுகாப்பற்ற ரயில் கடவையின் காரணமாக இவ்விபத்து நேர்ந்துள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டாளர் தெரிவித்தார்.

மாத்தறையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த ரயில் வண்டியும் வாகனமும் மோதுண்டதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது. இதன் காரணமாக கரையோர ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டதாகவும், எனினும் தற்போது அது வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.